20 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 | பாலம் 04 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 15, 2010

# கனடாவிற்கு சொந்தமண்ணில் முதல் தங்கப்பதக்கம்



### Medal Count - Top 10 Medal Winners

| Country | | | | Total |
|---|---|---|---|---|
| UNITED STATES | 1 | 2 | 3 | 6 |
| GERMANY | 1 | 3 | 0 | 4 |
| FRANCE | 2 | 0 | 1 | 3 |
| CANADA | 1 | 1 | 1 | 3 |
| SOUTH KOREA | 1 | 1 | 0 | 2 |
| ITALY | 0 | 0 | 2 | 2 |
| CZECH REPUBLIC | 1 | 0 | 0 | 1 |
| NETHERLANDS | 1 | 0 | 0 | 1 |
| SWITZERLAND | 1 | 0 | 0 | 1 |
| SLOVAKIA | 1 | 0 | 0 | 1 |

நான்கு வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக்போட்டிகள் பெப்ரவரி 12, 2010ஆம் திகதி கனேடிய மண்ணில் வன்கூவர் நகரத்தில் கனடாவினுடைய பாரம்பரியத்தை யும், பண்பாட்டையும் எடுத்துக்காட்டும் வகையில் கோலாகலமாக ஆரம்பமாகியது. ஆரம்பவிழா நிகழ்வுகள் BC Place உள்ளரங்கில் கனடாவின் முதல் குடிமக்களின் வரவேற்பு நடனங்களுடன் ஆரம்பமாகியது. பல பில்லியன் ரசிகர்கள் தொலைக்காட்சியில் பார்த்து இரசித்துக்கொண்டிருந்தார்கள். இதில் சிறப்பம்சமாக ஒலிம்பிக்கில் கனடாவின் ஐஸ் கொக்கி விளையாட்டின் உலக நட்சத்திர அந்தஸ்தை பதித்தவரான Wayne Gretzky ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிவைத்து விளையாட்டுக் களை ஆரம்பித்து வைத்தார்.

இவ் ஒலிம்பிக் பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. ஒலிம்பிக் தீபத்தை ஏந்தி பவனி வந்த வீரர்களின் தொகை ஒருபோதும் இல்லாதவாறு இம்முறைதான் அதிகம். இம்முறைதான் அதிகூடிய தூரத்தை ஒலிம்பிக் தீபத்தைக் கொண்டு ஓடி முடித்தார்கள் ( மரதன்). இவ் ஒலிம்பிக் போட்டிக்குத்தான் அதிகளவு பணம் செலவழித்ததும் அதிகளவு நவீன தொழில் நுட்பங்களை உபயோகித்ததும் ஆகும். கடந்த காலங்களில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை விஞ்சும் அளவிற்கு கனேடிய நாடு தனது மண்ணில் மிகவும் சிறப்பாக ஆரம்ப நிகழ்வுகளை நடத்திக் காட்டியுள்ளது.

முதலாவது நாளில் நடைபெற்ற போட்டியில் சுவிற்சலாந்து நாட்டை சேர்ந்த Ski Jumping வீரர் Simon Ammann வன்கூவர் ஒலிம்பிக் போட்டிகளில் முதலாவது தங்கப்பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார். விஸ்லர் பாக்கில் (Whistler Park) நடைபெற்ற ski jumping இல் இவர் 276.5 புள்ளிகளைப் பெற்று வெற்றி

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

## பொதுத்தேர்தலில் எதிர்கட்சி கூட்டணிக்கு ஜெனரல் சரத் பொன்சேகா தலைமை

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எதிர்கட்சிகள் மீண்டும் இணைந்து ஒரு கூட்டணி அமைக்கவுள்ளதாகவும், இந்த எதிர்கட்சிகளின் அரசியல் கூட்டணிக்கு ஜெனரல் சரத் பொன்சேகா தலைமை தாங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய தேசிய கட்சி, ஜே.வி.பி, சிறீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவு, சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளே இவ்வாறு கூட்டுச் சேர்ந்துள்ளன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இக்கட்சிகள் இணைந்து கூட்டணி அமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த எதிர்க்கட்சியின் கூட்டணிக்கான சின்னம் மீண்டும் அன்னப்பறவையே தெரிவு செய்யபட்டுள்ளதாகவும் அறியவந்துள்ளது.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஈபிடிபி மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (பிள்ளையான்) சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைக்காமல் தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளன. எனினும் இறுதி நேரத்தில் இவர்கள் என்ன முடிவு எடுப்பார்கள் என்பது சந்தேகத்துக்குரியது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து தேர்தலில் நிற்பதைவிட தாம் தனியா போட்டியிட்டால் அதிக வாக்குகளை பெறமுடியும் என்று இந்தக் கட்சிகள் நம்புகின்றன.

மலைய மக்கள் முன்னணி, முஸ்லீம் காங்கிரஸ் என்பன தேர்தல் தொடர்பான தமது கூட்டணி யார் என்பதை இதுவரை முடிவு செய்யவில்லை. இதேவேளை, தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தாம் போட்டியிடப்போவதாக தெரிவித்துள்ளார். பொதுத்தேர்தல் வேட்புமனுக்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. இந்த திகதிக்கு முன்னர் சரத் பொன்சேகா விடுவிக்கப்படாவிட்டால்,

தொடர்ச்சி 25ஆம் பக்கம்

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்

Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

RBC Royal Bank

Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee • No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

Sales & LEASING
MARKVILLE TOYOTA


KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585


Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை


• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

VLAMBARAM, GTA SQUARE, 5215 FINCH AVENUE EAST, #201, TORONTO, ON M1S 0C2, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com

# கனவுகள் - அச்சம் தவிர்

'வாழ்க்கையில் அஞ்சுவதற்கு ஒன்றும் இல்லை. வாழ்க்கை என்பது புரிந்து கொள்ளபட வேண்டிய ஒன்று' என்றார் - மேரி குயுரி. பிறந்த குழந்தை பயம் அறியாது. குழந்தை வளர வளர பயத்தை ஏதோ ஒரு கட்டத்தில் உணரப் தலைப்படுகின்றது. பெற்றவர்களும், மற்றவர்களும் பயத்தையும் கற்பிக்கிறார்கள். பிறகு வாழ்க்கை முழுவதும் பயம் இருந்து கொண்டேயிருக்கின்றது. ஒரு சிலரே பயத்தை குறைத்துக் கொள்ளவும், தவிர்க்கவும் கற்றுக் கொள்கிறார்கள். அச்சமும், துயரமும் கனவுகளுக்குப் பெருந்தடையாக உள்ளன.

அருட்ஜோதிடம் வள்ளலார் வேண்டுவன வற்றில் முக்கியமானது. அச்சத்தையும், துயரத்தையும் தீர்ப்பதே. வள்ளலாரின் வரிகள் இதோ. குற்றம் செய்தல் எனக்கு இயல்பே. குணமாகி கொள்ளல் உனக்கு இயல்பே. சிற்றம்பலவா இனிச் சிறியோர் செப்பும் முகமன் யாதுளது. தென்றென் சிந்தை தெளிவித்து அச்சம் துயர் தீர்த்து இற்றைப் பொழுதே அருட்ஜோதி ஈக தருணம் இதுவாமே!'

அஞ்சுவதற்கு அஞ்ச வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். அத்தகைய '**சிறிய பயம்**' ஒருவனை நல்ல நிலையில் இருப்பதற்கு உதவுகின்றது. அந்தச் சிறிய பயத்தை வண்டியில் உள்ள பிரேக் உடன் ஒப்பிடலாம். ஆனால் '**அளவு கடந்த பயம்**' பெரும் துன்பங்களையே தருகின்றது. ஒரு உதாரணத்தின் மூலம் இதை விளக்குவோம்.

நீங்கள் கனவு காணும் புதிய முயற்சி ஒன்றைத் தொடங்க நினைக்கிறீர்கள். தோல்வியைப் பற்றிய பயம் உங்கள் மனத்தில் எழுகின்றது. இது இயல்பானதே. உங்களைச் சுற்றியுள்ள அனைவரும் வாழ்க்கைத் துணை, உறவுகள், நண்பர்கள் அனைவரும் நீங்கள் நினைத்துள்ள முயற்சி எவ்வளவு ஆபத்தானது. சமநிலையை எப்படித் பாதிக்கும். என்னென்ன துன்பங்கள் வரலாம் என்றெல்லாம் பட்டியல் இடுகிறார்கள். நீங்கள் குழப்பத்துக்கு ஆளாகின்றீர்கள். இந்த ஆரம்ப பயத்தையே **"சிறிய பயம்"** என்று குறிப்பிட்டேன். அந்த சிறிய அல்லது ஆரம்ப பயம் உங்களைச் சிந்திக்கத் தூண்டி முன்னெச்சரிக்கைத் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க உதவினால், அந்தச் சிறிய பயம் உங்களுக்கு நன்மையைச் செய்துள்ளது. ஆனால் அந்தச் சிறிய பயம், கற்பனையின் மூலம் பெரிய பயமாகத் தூண்டப்பட்டு, உங்கள் முயற்சியையே கைவிடத்துணிந்தால், அதுவே 'அளவு கடந்த பயம்' ஆகின்றது.

ஒருவன் ஓட்டப்பந்தயத்தில் ஓடி வெற்றி பெற விரும்புகின்றான். இது கனவு. தோற்றால் என்ன செய்வது என்ற பயம் உடனே எழுகின்றது. இது சிறிய பயம் என்ன செய்வது என்று யோசித்து முடிவு எடுத்தால் இந்தச் சிறிய பயம் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டிய கருவியாக ஆகின்றது. ஆனால் அந்தப் பயத்தின் காரணமாக ஓட்டப் பந்தயத்தையே தவிர்த்தால், அதுவே அளவு கடந்த பயமாகின்றது. ஓடித் தோற்பதும், ஓடாமல் இருப்பதும் ஒன்று தானே. நினைப்பதைச் சிந்திதுச் செயல்படுத்துங்கள்.

'வாழ்க்கை என்பது பல சோதனைகளின் வரிசை' என்றார் எமர்சன் என்ற அறிஞர்'. "அதிகச் சோதனைகள் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கின்றன."

சிறிய பயம் உங்களையும், உங்கள் சுற்றுப்புறத்தையும், உறவுகளையும் உணர வழி வகுக்கின்றது. அளவு கடந்த பயமோ உங்கள் இன்பத்தையும், உறவுகளையும் சிதைக்கின்றது.

சிறிய பயம் உங்களை கவனத்துடன் செயல்படத் தூண்டுகின்றது. அளவு கடந்த பயமோ உங்களை செயல் இழக்கச் செய்கின்றது. உங்கள் பயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். ஏன் பயப்படுகின்றீர்கள் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

பயம் என்றால் என்ன?
இதோ சில பொதுவான பயங்கள்.

- தோல்வியைப் பற்றிய பயம்.
- வறுமை வருமோ என்ற பயம்
- வேலையிழப்பு நேருமோ என்ற பயம்
- வருமானம் குறையுமோ என்று பயம்

- உறவுகளாலும், நண்பர்களாலும் வெறுக்கப்படுவோமோ என்ற பயம்
- மரணத்தைப் பற்றிய பயம்.

உங்கள் பயம் எதைப் பற்றியது? பயத்தைக் கட்டுப் படுத்த ஒரு காகிதத்தில் எழுதுங்கள். அந்தப் பயத்தைக் கையாள சில வழிமுறைகள் இதோ -

1. உங்கள் பயம் மற்றும் கவலை என்ன? எழுதுங்கள்
2. ஏன் இந்த பயம் அல்லது கவலை எழுந்தது?

உங்களை நீங்களே துருவித் துருவி அடிமட்டக் காரணத்தை தொடும் வரை கேள்வி கேளுங்கள்.
நீங்கள் கண்டறிந்தவற்றை உங்கள் ஆய்வை பயத்துக்கான காரணங்களை இப்போது எழுதுங்கள்.

3. உங்களுக்கு நேரக்கூடிய மிக மோசமான நிலை (எடுக்கப்படும் முயற்சி அல்லது செயலின் காரணமாக) என்ன என்று யோசியுங்கள். இதுதான் **சிறிய பயம்**. இதை மூன்றாவதாக எழுதுங்கள்.
4. உங்கள் கனவு அல்லது திட்டம் அல்லது இலக்கை நினைவு கூருங்கள். அதையும் எழுதுங்கள் இப்போது இதுபோல ஒரு கேள்வியைத் தயாரியுங்கள். '(சிறிய) பயத்தைக் கவனத்தில் கொண்டு என் கனவை நனவாக்குவது எப்படி? பிறகு முந்தைய 4 எண்களில் எழுதியவற்றை அடித்து விடுங்கள். அல்லது அழித்து விடுங்கள். வேறு முறையில் சொல்ல வேண்டும் என்றால் உங்கள் மனத்தில் இருந்த கவலையை அல்லது பயத்தை நீங்கள் அழித்து விட்டீர்கள். அதன் பிரதிபலிப்பே பேப்பரில் அழித்தது. இப்போது எஞ்சி இருப்பது. 'பயத்தைக் கவனத்தில் கொண்டு கனவை நனவாக்குவது எப்படி? என்பது தான்.' ஒரு உதாரணத்தின் மூலம் இந்தக் கேள்வியை விளக்குவோம். வேலை இழப்பு நேர்ந்தால் (Lay off), நானும் என் குடும்பமும் இப்போது இருக்கும் வாழ்க்கைத் தரம் குறையாமல் மற்றொரு வேலை கிடைக்கும் வரை வாழ்க்கையைத் தொடர்வது எப்படி? வேலை போய்விடுமோ என்று நினைப்பவரின் ஐந்தாவது இடத்தில் வரும் கேள்வி இப்படித்தான் இருக்கக் கூடும்.

6. கடைசியாக எழுதப்பட்ட கேள்வியைப் பற்றி சிந்தியுங்கள். விடை கிடைத்தாலும் சரி, விடை கிடைக்காவிட்டாலும் சரி, இரண்டும் சரியே. விடை கிடைத்தால் விடையை எழுதுங்கள். விடை கிடைக்காவிட்டால் அப்படியே விட்டு விடுங்கள். விரைவில் விடை கிடைக்கும். இதுவரை நீங்கள் சாதித்தது என்ன? முயற்சி இல்லாமல் இருப்பதற்கான மனநிலையை நீக்கி விட்டீர்கள். பயம் உங்களை இப்போது பாதிக்கவில்லை. பயத்திற்கான காரணங்களை ஆராய்ந்து முடிவு எடுக்கும். பொறுப்பை - வழிவகைகளைக் காணும் பொறுப்பை - உங்கள் ஆழ் மனத்திடம் ஒப்படைத்து விட்டீர்கள். பிறகென்ன. உங்கள் கவலையிலிருந்து விடுபட்டு வழக்கம் போல் நித்தம் செய்ய வேண்டிய காரியங்களைக் கவனியுங்கள்.

சில தினங்களிலோ, பல தினங்களிலோ அதற்கான விடை உங்கள் அஞ்சல் பெட்டியில் வந்து சேர்ந்திருக்கும். திடீரென்று ஒரு ஞானோதயம். இப்படிச் செய்யலாமே என்று தோன்றும். அதுதான் அஞ்சல் பெட்டியில் கிடைத்த கடிதம். அந்தச் சமயத்தில் 'இது' இத்தனை நாள் தோன்றாமல் போய் விட்டதே என்று கூட நினைக்கத் தோன்றும். அதுதான் 'ஆகா' சந்தர்ப்பம். ஆகா! இப்படிச் செய்யலாமே என்று தோன்றுகின்றதே அதுதான் ஆழ்மனம் கண்டு பிடித்த விடை. விஞ்ஞானிகளும், சாதனையாளர்களும் இந்த வழியை வெற்றிகரமாகப் பலமுறை கையாண்டிருக்கிறார்கள்.

## - துறவி -

பயம் என்பது ஒருவித மனநிலையே. நம்பிக்கை பயத்தை மாற்றுகின்றது. உங்கள் மேல் நம்பிக்கை கொள்ளுங்கள் பயம் தோன்றும் போது நம்பிக்கையோடு செயல்படுங்கள். நம்பிக்கை தரும் நண்பர்களும், உறவினர்களும் உங்களுடன் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். அவர்கள் தரும் நம்பிக்கையான வார்த்தைகளை கருவியாகக் கொண்டு வாழ்க்கையில் முன்னேறுங்கள்.

முடிக்குமுன் ஒரு கதை.
அடர்ந்த காட்டின் வழியே மழை பொழியும். இரவில் ஒருவன் நடந்து சென்று கொண்டிருந்தான். அப்போது ஒரு கயிற்றை மிதித்து விடுகின்றான். அவன் மனம் மிதித்ததை உடனே கொடிய விடம் நிறைந்த நாகபாம்பாகக் கற்பனை செய்து கொள்கின்றது. அந்தக் கற்பனை பலவிதமான பயங்களை நிமிடத்தில் அவனுள் எழச் செய்கின்றது. 'நல்ல பாம்பு எந்நேரமும் தன்னைச் கொத்தி விடலாம், தான் சாவது உறுதி, மறுநாள் பகல் பொழுது வரை தன் உடலை யாரும் காணப் போவதில்லை' திடீரென்று அங்கே ஒரு மின்னல். அந்த ஒளியில் தான் மிதித்தது பாம்பல்ல. கயிறு என்று உணருகின்றான்.

தொடர்ச்சி 04ஆம் பக்கம்



## வாசகர்களின் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.


1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Scarborough, ON M1S 0C2
2. Fax: 416.282.8059
3. email: vlambaram@sympatico.ca

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

ஜெனிஷா ரெயிலஸ் & டிசைன்ஸ்
Jenisha Tailors & Designs
Saree Blouses, Salwar Kameez, Party-Frocks,
Saree pleetting, Bridal Dressing, Facial, Threading
போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய அழையுங்கள்
குறித்த நேரத்தில்
குறைந்த செலவில் நிறைந்த சேவை

416.298.6917 / 416.802.1039/ 519.748.0553
1560 Brimley Road, #216, Brimley & Ellesmere / 920 Marlmeadow Crt., Kitchener, ON

# கனடாவின் கதை - 15

# குடியேற்றக் காலத்தின் போது நிகழ்ந்த போர்கள்

கிழக்குக் கனடாவின் பெரும் பகுதிகளில் பிரான்சு நன்கு நிலைபெற்றிருந்தது. அவ்வேளை தெற்கில் பிரித்தானியா 13 குடியேற்றங்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. 1670 முதல் தனது ஹட்சன் பே கம்பனிக்கூடாக, ஹட்சன் வளைகுடாப் பகுதி அதன் வடிகால் நீர்தேக்கப் பகுதியான 'றூபேட்டின் நிலப்பரப்பு (Rupert's Land) நீயூ பவுன்லாந்திலுள்ள குடியேற்றங்கள் ஆகியவற்றின் மீது சொந்தங் கொண்டாடியது. பிரித்தானியக் குடியேற்றங்கள் துரிதமாக வளர்ந்து கொண்டிருந்தபோது, பிரான்சின் தோல் வியாபாரிகளும் நாடு தேடுவோரும் குறைவாகப் பரந்திருந்தனர். 1682 லாசலே என்பவர் மிசிசிப்பி ஆற்றின் தொடுவாய்ப் பகுதிவரைக்கும் பிரயாணஞ் செய்தார். இதனால் அமெரிக்கக் குடியேற்றங்களின் எல்லை வரை பரந்திருந்த பெரும் நிலப்பரப்புக்கு பிரான்சு உரிமை கோரியது. இந்நிலப்பரப்பு பெரும் வாவிகளிலிருந்து ஆரம்பித்து தெற்கு நோக்கி ஒஹாயோ ஆற்றுப் பள்ளத்தாக்கு வழியாக மெக்சிக்கோ வளைகுடா வரை பரந்திருந்தது. இதை அறிந்து இங்கிலாந்து பயப்பட ஆரம்பித்தது. அதாவது பிரான்சு, கனடாவின் அரைவாசி நிலப்பரப்பைத் தனதாக்கி தோல் வியாபாரத்திலும் ஏகபோக உரிமையை ஏற்படுத்த வாய்ப்பு என்பதை உணர்ந்தது. அத்துடன் தோல் வியாபாரம் பவுண்வியாபரத்தைக் காட்டிலும் இலாபமானது என்பதையும் பிரித்தானியா அறிந்து கொண்டது. இதனால் தான் 1670 இல் ஹட்சன் பே கம்பனியை நிறுவி, தோல் வியாபாரத்தில் பின் கதவால் நுழைந்தது. இதை உணர்ந்த பிரான்சியர், 1686 இல் பியர் றொயிஸ் என்பவர் மொன்றியலிலிருந்து தரை மார்க்கமாக வளைகுடாப் பகுதிக்குச் சென்று கம்பனியின் பல கோட்டைகளை எதிர்பாராமல் தாக்கிக் கைப்பற்றினர். இதைத் தொடர்ந்து புதிய பிரான்சு பல கடல் வழித் தாக்குதல்களை முற்றாக விரட்டி அடித்தனர்.

பிரான்சும் பிரித்தானியாவும் 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் பலதடவை போர்புரிந்து தமது குடியேற்ற நாடுகளைப் போர்க் களங்களாக்கின. மேற்கிந்தியத் தீவுகளில் பல கடற்போர்கள் நிகழ்ந்தன. தரைப் போர்கள் பல கனடாவிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் நடைபெற்றன. கடலோர மாகாணங்களையே பிரித்தானியா முதலில் வென்றது. ஆன் இராணி போருக்குப் பின் உற்றெக்ற் (Utrecht Treaty) உடன் படிக்கையின்படி, கேப் பிறெற்றன் தவிர்ந்த நோவா ஸ்கோசியாவிலும் ஹட்சன் வளைகுடாப் பிரதேசமும் பிரித்தானியாவுக்குப் பிரான்சால் வழங்கப்பட்டது. இதன் காரணமாக கேப் பிறெற்றன் தீவில் பிரான்சு பலம் வாய்ந்த லூயிபோக் கோட்டையை நிறுவியது. வடஅமெரிக்காவில் பிரான்சுக்குச் சொந்தமான பிரதேசங்களை பாதுகாப்பதற்கும் சென்லோறன்ஸ் ஆற்றின் நுழைவாயிலைக் காப்பதற்கும் இக்கோட்டை வருடம் முழுவதும் கடற்படைத் தரைப்படைத் தளமாகச் சேவையாற்றுவதற்கு நிறுவப்பட்டது. இக்கோட்டை வடஅமெரிக்காவின் சிறந்த ஆயுதப் படையணிகளைக் கொண்டதாக ஏறக்குறைய 25 வருடங்களாக விளங்கியது. ஜோர்ஜ் மன்னர்ப் போரின்போது 1745 இல் சேர் வில்லியம் பெப்பெறெல் தலைமையில் 90 கப்பல்களையும் 4,000 படைவீரர்களையும் கொண்ட படையுடன் ஆங்கிலேயர் இக்கோட்டையைக் தாக்கினர். மூன்று மாதகாலத்தில் இக்கோட்டையைக் கைப்பற்றினர். பிரான்சின் கைவசம் இக்கோட்டை இருந்தபோது அமெரிக்கக் குடியேறிகளின் வணிகக் கப்பல்களை இக்கோட்டையிலிருந்தோர் தாக்கியதும் ஆங்கிலேயரின் முற்றுகைக்கு ஒரு காரணமாகும். 1748 இல் எய்லா சப்பெல் உடன்படிக்கையின்படி இக்கோட்டை பிரான்சுக்கு மீள அளிக்கப்பட்டது. இதனால் ஆச்சரியமும் ஆத்திரமும் கொண்ட புதிய இங்கிலாந்துக்காரர், 1749 இல் எட்வேட் கோண்வோலிஸ் தலைமையில் ஹலிபாக்சில் மண்பாதுகாப்பரன் ஒன்றை நிறுவினர்.


1713இல் உற்றெக்ற் உடன்படிக்கையின்படி, பிரித்தானியாவுக்கு பிரெஞ்சுமொழி பேசும் 5000 அக்காடியர்களை நிர்வகிக்கும் உரிமை வழங்கப்பட்டது. அக்காடியர் தாம் நடுநிலையாகவே இருப்போம் என அறிவித்ததை நம்பாமல், ஐரோப்பாவிலிருந்து புரொட்டஸ்தாந்து மதத்தினரை ஆங்கிலேயர் கொண்டு வந்து இவர்களோடு கலந்து வசிக்க வைப்பதற்கு முயற்சித்தனர்.

## ஏழாண்டுப் போர்

பிரித்தானியாவுக்கும் பிரான்சுக்குமிடையில் 1754 முதல் 1763 வரைக்கும் போர் நடைெ-பற்றது. ஆரம்பகாலங்களில் பிரித்தானியா பல தோல்விகளைத் தழுவியபோது ஈற்றில், பல குடியேற்ற நாடுகளின் அதிபதியாக வெற்றி ஈட்டியது. 1763 இல் ஏற்பட்ட பரிஸ் உடன்படிக்கையின்படி பல புதிய குடியேற்றப் பிரதேசங்களைப் பெற்றதுடன், உன்னதமான கப்பற்படையைக் கொண்ட ஒரு நாடாகவும் விளங்கியது.

1755 இல் நோவா ஸ்கோசியாவில் குடியேறி வசித்த அக்கேடியர்களை தமது நிலங்களிலிருந்து வெளியேறும்படி பிரித்தானியர் கட்டளைகளை இட்டனர்.

இது ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதனால் 12,000 அக்கேடியர்கள், பிரித்தானியாவுக்குச் சொந்தமான வடஅமெரிக்கப் பகுதிகளுக்கும், பின்னர் பிரான்ஸ், குபெக் சென்றடொமினிக்கா எனும் கறியின் தீவு போன்ற இடங்களுக்கும் கப்பல்களில் அனுப்பப்பட்டனர். பல அக்கேடியர்கள் தெற்கு லூசியானாவில் குடியேறி கஜுன் (Cajun) கலாசாரத்தை உருவாக்கினர். ஒளித்திருந்த சில அக்கேடியர்கள் நோவா ஸ்கோசியாவுக்குத் திரும்பி வந்தனர். அதற்கிடையில் இவர்களுடைய நிலங்களை புதிய இங்கிலாந்திலிருந்து வந்த கமக்காரரர் ஆக்கிரமித்து ஒரு நிலையான குடியேற்றத்தை நிறுவி இருந்தனர். அத்துடன் இவர்கள் புதிய இங்கிலாந்துக்கு விசுவாசமுடையோராகவும், அக்கேடியர்களைக் காட்டிலும் எண்ணிக்கை கூடியோராகவும் இருந்தனர்.




**- துறையூரான் -**

இக்காலப்பகுதியில் சென்லோறன்ஸ் கரையோரப் பகுதிகளில் இருந்த பிரெஞ்சுக் குடியேற்றப் பகுதி சிறப்பாக வளத்தோடு விளங்கியது. எனினும் பிரெஞ்சுக்காரர் ஒஹையா பள்ளதாக்குப் பகுதிகளுக்கு உரிமை கோரிய போது பிரித்தானியாவோடு மோதவேண்டியிருந்தது. இதனால் வடஅமெரிக்காவிலும் ஐரோப்பியாவிலும் போர் மூண்டது. ஏழாண்டுப் போரின்போது கனடாவும் ஒரு முக்கிய போர்த்தளமாக விளங்கியது. போரின் விளைவாக 1759 இல் கியூபெக் நகரத்தையும் 1760 இல் மொன்றியலையும் பிரித்தானியா தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.

### பிரித்தானிய அரசாட்சியின் கீழ் கனடா

1963ஆம் ஆண்டு பரிஸ் உடன்படிக்கையின் படியும் 1867 இல் கனேடிய கூட்டாட்சியின்படியும், தற்கால கனடாவின் மாகாணங்கள், குடியேற்றங்கள், ஆள்புலங்கள் (Terititories) யாவும், பிரித்தானிய அரசாட்சியின் கீழ் இருந்தன. இப்பகுதி பிரித்தானிய வடஅமெரிக்காவென அழைக்கப் பட்டது. இக்கால கட்டத்தில் அமெரிக்கப் புரட்சி, 1812 போர், 1837 கலகங்கள் ஆகிய பல முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றன. கனடாவின் கூட்டாட்சியின் ஆரம்பத்தில் பிரித்தானிய வட அமெரிக்காவின் குடியேற்றங்களான நியூபவுண்லாந்து, பிரிட்டிஷ் கொலம்பியா, றூபேட்லாந்து ஆகியன கூட்டாட்சியில் சேராது இருந்தன. கூட்டாட்சி ஏற்படுத்த பின்னரும் கனடா பிரித்தானிய அரசாட்சியின் ஒரு பகுதியாகவே இயங்கி வந்தது. 1931 இல் ஏற்படுத்தப்பட்ட வெஸ்ற் மினிஸ்டர் சாசனத்தின் பின்னரே கனடா தனி நாடாகியது.

### கியூபெக் மாகாணம் (1763 - 1791)

ஏழாண்டுப் போரின் பின்னர் பிரித்தானியா, வடஅமெரிக்காவின் ஒரு குடியேற்றப் பகுதியாக கியூபெக் மாகாணத்தை உருவாக்கியது. பிரான்சின் 15ஆம் லூயி மன்னனும் அவனது ஆலோசனையாளரும், பரிஸ் உடன்படிக்கையின்படி புதிய பிரான்சை, பிரித்தானியாவுக்கு கொடுத்துவிட்டு, கரும்பும் தோட்டமுள்ள குவாடி லூப்பை (Guadeloupe) தம் வசம் வைத்துக் கொண்டனர். பிரித்தானியா தான்பெற்ற புதிய பிரான்சை, கியூபெக் மாகாணம் எனப் பெயர் மாற்றியது.

1774 இல் பிரித்தானிய நாடாளுமன்றம் கியூபெக் சட்டத்தை நிறைவேற்றி தனியார் விடயங்களைப் பொறுத்தமட்டில் ஏற்கனவே வழக்கத்திலிருந்த பிரெஞ்சுச் சட்டத்தையும், பிரித்தானிய பொது சட்டமுறையோடு சேர்ந்து நடைமுறைப்படுத்தியது. இதன்படி றோமன் கத்தோலிக்க ஆலயம் வரி சேகரிப்பதற்கு உரிமை வழங்கப்பட்டது. இச்சட்டத்தின்படி கியூபெக்கின் எல்லைகளும் விஸ்தரிக்கப் பட்டன. இதன்படி ஹட்சன் பே கம்பனிக்குச் சொந்தமான வடக்கேயுள்ள றூபேட்லாந்தின்


தொடர்ச்சி 04ஆம் பக்கம்

STATE FARM INSURANCE
DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE
Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800
Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800
தமிழில் உரையாடுவோம்
1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

# உங்கள் விதியைத் தேர்ந்தெடுங்கள்

## உண்மையான ஒரு தனிமனிதராக நீங்கள் ஆகும்போது உங்கள் விதியை நீங்களே தேர்வு செய்யலாம்.



சத்குரு வாசுதேவ்

விழிப்புணர்வில்லாமல் உங்கள் விதியை நீங்கள் உருவாக்கிக்கொண்டிருக்கிறீர்கள். அதை விழிப்புணர்வோடும் உருவாக்கலாம், மாற்றியும் எழுதலாம், ஆன்மீக செயல்முறை என்று நாம் செய்வதெல்லாம் அதுதான். நீங்கள் எங்கு செல்ல வேண்டும், அடுத்து என்ன செய்யவேண்டும் என்றெல்லாம் நீங்களே தீர்மானிக்க முடியும். உங்கள் உள்நிலையின் அடிப்படையை நீங்கள் தொடுவீர்களேயானால், இந்த படைப்பிற்கு எது மூலமோ அது உங்களுக்குள் இருக்கிறது என்பதை ஒரு விநாடி உணர்ந்து, உங்கள் முழுக்கவனத்தையும் உங்களுக்குள் திருப்புவீர்களேயானால் உங்கள் விதியை நீங்களே எழுதலாம். எல்லா நேரமும் உங்கள் கவனம் சிதறிக்கிடக்கிறது. ஏனென்றால் நீங்கள் என்று நினைப்பது உங்கள் வீடு, உங்கள் கார், உங்கள் மனைவி, உங்கள் குழந்தை, உங்கள் வளர்ப்பு நாய், உங்கள் கல்வி, உங்கள் தகுதி, உங்கள் அதிகாரம், உங்கள் அடையாளங்கள் ஆகியவை என்று கருதிக் கொண்டிருக்கிறீர்கள். இவையனைத்தையும் உங்கள் உடலையும், மனத்தையும் உட்பட உருவிவிட்டுவிட்டால் யாருமற்ற நிலையை நீங்கள் உணர்வீர்கள். ஏனென்றால் உடலும், மனமும் கூட நீங்கள் சேகரித்தவை தான். எனவே நீங்கள் என்று எதை நினைக்கிறீர்களோ அது உங்களைச்சுற்றி பரந்து கிடக்கிறது. நான் 'நீங்கள்' என்று சொல்லும்போது உங்களைத்தான் சொல்கிறேன். கம்பளத்தையோ, இந்த சுவரையோ, உங்கள் குழந்தையையோ எதையும் இல்லை. நீங்கள் என்றால் நீங்கள் தான். இந்த நிலைக்கு நீங்கள் வருவீர்களேயானால் உங்கள் விதியை நீங்கள் விரும்புகிற விதத்தில் எழுதிக் கொள்ள முடியும். இப்போது நீங்கள் என்கிற தன்மை சிதறிக்கிடக்கிறது. நீங்கள் நிலைநிறுத்தப்பட்ட ஒரு தன்மையாக இல்லை, சிதறிய தன்மையாக இருக்கிறீர்கள். இன்னும் இவற்றையெல்லாம் சேகரிக்க விருப்பமாக இருக்கிறீர்கள். இன்னும் ஒரு கூட்டத்திற்குள்ளேயே இருக்கிறீர்கள். ஒரு கூட்டம் எங்கே செல்ல வேண்டும் என்பது எப்போதுமே முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. ஆனால் தனித்தன்மையுள்ள ஒரு மனிதராக நீங்கள் ஆக வேண்டும். இதற்கு மேல் ஒரு பகுக்க முடியாத ஒரு தன்மைக்குள் நீங்கள் வருகிற போது இங்கும் அங்கும் போக முடியாது. அப்போது தான் உங்கள் விதி உங்கள் கையில் இருக்கும். இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆன்மிகப்பாதையில் இருப்பவர்கள் ஆன்மீகத்தில் மிகவும் அவசரமாக இருக்கிறார்கள். திருமணத்தையோ, குழந்தை பெறுவதையோ அவர்கள் விரும்பவில்லை. ஏன் என்றால் நீங்கள் ஒரு கணவனாகவோ மனைவியாகவோ மாறுகிற போது உங்கள் தன்மை இன்னொருவரோடு அடையாளமாகிறது. இப்படி அடையாளப்படுத்திக் கொள்ளாமல் அவர் உங்களை வாழவிடமாட்டார். எவையெல்லாம் நீங்கள் இல்லையோ அவற்றோடு நீங்கள் அடையாளப்படுத்திக் கொள்கிறபோது, சேகரித்த விஷயங்களையே 'நீங்கள்' என்று நினைக்கிற போது உங்கள் அனுபவம் சிதறிப்போகிறது. அப்படித்தான் இந்த உடம்போடும் உங்கள் அடையாளம் ஆழமாக இருக்கிறது. அதுதான் பற்றுகளுக்கும் காரணம். பற்றற்ற தன்மைக்கென்று நீங்கள் வெளியே தேடிக் கொண்டு போக வேண்டியதில்லை. உங்கள் வாழ்வில் எத்தனையோ விஷயங்களை தனித்தனியாகத் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டியதில்லை. நீங்கள் சிதறிப்போகிறபோது ஏற்கனவே உங்கள் விதி தீர்மானிக்கப்பட்டதாக இருக்கிறது. உங்கள் கர்மவினை எப்படி இருக்கிறதோ அந்த வழியில் போகிறீர்கள். சந்நியாசம், பிரம்மச்சரியம் என்பதெல்லாம் உங்களை நோக்கி உங்கள் கவனத்தைச் செலுத்துவதுதான். நீங்கள் என்று சொல்கிற போது அது உங்கள் உடலையும் மனதையும் குறிக்காது. அப்படி இருக்க உங்களால் இயலவில்லை என்றால், இன்னொரு அடையாளத்தை நீங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். நீங்களும் உங்கள் குருவும் தான் அந்த அடையாளம். எந்தத் தயக்கமும் இன்றி உங்கள் குருவோடு உங்களை தொடர்பு படுத்திக் கொள்கிறீர்கள். ஏனென்றால் குரு உங்களைப் பற்றிக் கொள்ளப் போவதில்லை. நீங்கள் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் அவரைப் பற்றிக் கொள்ளலாம், அவர் உங்கள் பற்றில் சிக்கிக் கொள்ளப் போவதில்லை. நீங்கள், கனிகிற காலத்தில் அதையும் விட்டு விடலாம். மற்ற உறவுகளைப் பொறுத்தவரை அதற்கு வாய்ப்பு இல்லை. ஓர் உறவில் நீங்கள் சிக்கிவிட்டீர்கள், நீங்கள் விடுதலை பெற வேண்டுமென்றாலும் இன்னொரு உறவு உங்களைப் போக விடாது. ஒன்று உங்கள் விதியை நீங்கள் எழுதிக் கொள்ளலாம், அல்லது அதற்கான விழிப்புணர்வு உங்களுக்கு வரவில்லையென்றால் நான் உங்கள் விதியை மாற்றியமைக்க முடியும். உங்களை என்னிடம் முழுமையாக ஒப்படைத்தால் போதும். எனவே ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விதியைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். வளர்வதற்கு, கரைந்து போவதற்கு, அறிந்துகொள்வதற்கு, ஒரு ஏக்கத்தை மட்டும் வளர்த்துக் கொள்ளுங்கள். நடக்க வேண்டியது நடக்கும். அவற்றைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டிய இல்லை. உங்கள் விதியை நீங்களே தீர்மானிக்கலாம் என்றால் நீங்கள் விடுதலையை விரும்புவீர்களா? பற்றை விரும்புவீர்களா? விடுதலையைத்தான் விரும்புவீர்கள். ஏனென்றால் ஒவ்வொரு உயிரின் ஆழமான ஏக்கமுமே விடுதலை பெற வேண்டும் என்பதுதான். பிறப்பு, இறப்பு என்கிற சுழற்சியிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பது தான் ஒவ்வொரு உயிருக்கும் இருக்கிற ஏக்கம். எனவே, விழிப்புணர்வோடு உங்கள் விதி நிகழ்கின்ற போது, அடுத்த படிநிலை தானாகவே நிகழும். ஏனெனில் உங்களுக்குள் இருக்கிற உயிருக்கு, பந்தத்தை கைவிட்டு விடுதலையைத் தேர்ந்தெடுக்கிற புத்திசாலித்தனம் உண்டு. விழிப்புணர்வு இல்லாத நிலையில் உங்கள் விதி உருவாக்கப்படுவதால் தான் நீங்கள் உங்களைச் சுற்றி பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறீர்கள்.

தொடர்புகளுக்கு: 416.300.3010
website: www. ishafoundation.org
www. ishayoga.org

# கனவுகள்

02ஆம் பக்கத்தொடர்ச்சி

இங்கு பாம்பை உருவாக்கியது எது? பயம் தானே! கயிறு மின்னலுக்கு முன்னும், மின்னலுக்குப் பின்னும் கயிறாகத் தானே இருந்தது. அறியாத ஒன்று பயத்தைத் தருகின்றது. அறியாத பயத்தையும், உண்மை அறிவையும் உங்களுக்கு வேறு படுத்தத் தெரிகின்றதா? தெரியவில்லை என்றால் தெரிந்து கொள்ள முயலுங்கள். உங்களின் தவறுகளிலிருந்தும், மற்றவர்களின் தவறுகளிலிருந்தும் உண்மையான அறிவைப் பெறலாம். மற்ற வழிகளிலும் பெறலாம்.

உங்கள் சொல் (வாக்கு), மனம் (சிந்தனை) மற்றும் செயல்களைக் கண்காணியுங்கள். உங்களுக்கு நீங்களே காவலனாகச் செயல்படுங்கள். ஏன்?

கவலைகளையும், பயத்தையும் வெல்வதற்கு சரியான சொல், சரியான சிந்தனை, சரியான செயல் தேவை. இவற்றின் அடிப்படையில், சரியான சந்தர்ப்பங்களையும், மக்களையும் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் ஈர்க்கிறீர்கள்.

பிறகு என்ன?

***அச்சந் தவிர்த்து வீறு நடை போடுங்கள்.***

***கனவுகள் நனவாகட்டும்.***


# கனடாவின்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

தெற்கு எல்லைவரைக்கும் பரந்திருந்து. கிழக்கே அப்பலாச்சியன் மலைகளையும், தெற்கே ஒஹையோ ஆற்றையும், மேற்கே மிசிசிப்பி ஆறுவரைக்கும் விசாளித்த ஒஹையோ நாட்டையும் இலினொய் நாட்டையும் கியூபெக் உள்ளடக்கியது.

பரிஸ் உடன்படிக்கையின்படி ஒஹையோவையும் இலினொய் நாட்டையும் பிரித்தானியா, அமெரிக்காவுக்குக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் கியூபெக்குக் கூடாக இந்நாடுகளுக்கான நுழையுரிமையைத் தன்வசம் வைத்திருந்தது. பிரித்தானியா பெருவாவிப் பிரதேசத்துக் கூடாகக் வணிகப் பொருள்களையும் படைகளுக்குத் தேவையானவற்றையும் கொண்டு செல்வதற்குச் சிறப்பான பாதைகளை அமைத்திருந்தது. இப்பாதைகளுக்குக்கூடாக டிற்றொயிற் நயகராக் கோட்டை, மிச்சிலமக்கின கோட்டை ஆகியவற்றுக்குத் தேவையான பொருட்களை தமது படைகளுக்கும் நட்பான அமெரிக்க பழங்குடியினருக்கும் அனுப்பியது. இந்த உரிமை 1794 இல் ஜே உடன்படிக்கையின் படி அமெரிக்காவுக்குக் கையளிக்கப்பட்டது.

அமெரிக்கப் புரட்சிப்போரில் வெற்றியடைந்து பின் விசுவாசமான அகதிகளின் வருகை அதிகரித்த போதும், கியூபெக் பிரபுத்துவ முறையை வைத்திருந்தது. இதன் முன்னைய 13 குடியேற்றப்பகுதிகளிலிருந்து ஏராளமான ஆங்கிலம் பேசும் அங்கிளிக்கன், புரோட்டஸ்தாந்து மதத்தினர் கியூபெக்குக்கு வந்து சனத்தொகையில் மாற்றமேற்படுத்தினர். இவர்கள் பெரும்பாலும் கிழக்கு நகரங்கள், மொன்றியல் பகுதிகளில் அதாவது ஒட்டாவா ஆற்றுக்கு மேற்கேயிருந்த உயர்நாடு என அழைக்கப்பட்ட பகுதிகளில் குடியேறினர். 1791ஆம் யாப்புச் சட்டம் கியூபெக் குடியேற்றநாட்டை ஒட்டாவா ஆற்றின் மேற்கு பகுதியை மேல் கனடா (Upper Canada) என்றும், கிழக்குப் பகுதியை கீழ் கனடா (Lower Canada) என்றும் இரண்டாகப் பிரித்தது மேல் கனடாவில் பிரித்தானிய சட்டமுறை கடைப்பிடிக்கப்பட்டது. இங்கே பெரும்பாலானோர் ஆங்கிலம் பேசுபவர்களாக இருந்தனர்.



## தமிழீழ அரசின் நோக்கம் அதன் தேவை எமது மக்களின் அன்றாட உரையாடலில் தவறஹமல் இடம்பெறவேண்டும். --- என்கிறார் தமிழீழ அரசின் கனடாத் தலைவர் கலாநிதி ராம் சிவலிங்கம் அவர்கள்

அவர் மேலும் கூறுகையில், நதிகள் பின்புறமாக ஓடியதுமில்லை, எமது போராட்டமும் பின்நோக்கிச் சென்றதுமில்லை. எமது போரின் இறுதி வடிவம்தான் சட்டவல்லுனர் உருத்திரா விசுவநாதன் தலைமையிலான இந்தத் தமிழீழ அரசு.

நடந்ததே போர் முடிந்ததா ஈழம்? முள்ளி வாய்க்காலின் முடிவோ, ராஜபக்சாவின் தேர்வோ எம்மைத் திகைக்கவைத்ததா அல்லது சோர வைத்ததா? ஒருபோதும் இல்லை. திகைப்பும் சோர்வும் எமது அகராதி யில் இல்லையே. வீரமும், தீரமும், திறமையும்தானே எமதக்குச் சொந்தமானவை. வீரத்துக்கு வித்திட்டவர்க்ள நாமல்லவா. சாவிலும் வாழும் சந்ததியல்லவா நாம்.

இறைமையும், சுதந்தரமும் கொண்ட ஓர் தமிழ் ஈழத்தை அமைக்கும்வரை நாம் ஓயமாட்டோம் என்று சபதம் எடுத்துச் செயற்பட வேண்டிய காலம் இது. அறவழிப் போராட்டத்திற்கு மதிப்புக்கொடுத்து, தேவைப்படின் உலகச்சட்டத்தின் உச்சிக்கே சென்று நம் நாட்டை வென்றெடுக்கும் வேளையல்லவா இது.

அரசியலையும் வாழ்க்கையையும் பின்னிப் பிணைந்து வாழும் எம் இனமே! தமிழீழ அரசு என்பது ஒரு மதச்சார்பற்ற, கட்சி சார்பற்ற, அமைப்பு சார்பற்ற எமது இறுதிப் போராட்டத்தின் வடிவம். இது ஈழத் தமிழருக்காக புலம்பெயர் தமிழர்களால் எடுதுச்செல்லும் இறுதி யாத்திரை, மூன்றாம் கட்டப் போர். இதில் பொறுப்புடன் பங்குகொண்டு சிறப்புடன் செயற்பட வேண்டியது எமது கடமையும் உரிமையும் அல்லவா?

எமது அறிக்கை வெளிவந்து இரண்டு கிழமை முடிந்துவிட்டது. உங்களின் கருத்திற்காகவும் திருத்தத்திற்காகவும் மாசி மாதம் 15ம் திகதிவரை காத்திருக்கிறோம். அறிக்கை தேவையானால் தாமதியாது எம்முடன் தொடர்புகொள்ளவும். இந்த அறிக்கை எமது வருங்கால வாழ்க்கையையும் வழத்தையும் நிர்ணயிக்கும் ஓர் பத்திரம். இதில் பங்குகொண்டு உங்கள் கருத்தைத் தெரிவிப்பதே மேல்.

தமிழீழ அரசின் அடுத்தகட்ட நடவடிக்கைதான் இந்த 135 பேர் கொண்ட உலகளாவிய தமிழீழ அரச அவைக்கான தேர்தல். இதில் 25 பிரதிநிதிகளை கனடாவில் தெரிவுசெய்ய இருக்கிறோம். இவர்கள்தான் தமிழீழ அரசின் சார்பில் எம் இனத்தின் விடிவுக்காக உழைக்கப் போகும் எமது பிரதிநிதிகள். ஈழத் தமிழரின் இன்றைய நாயகர்கள். கருணையுடன் எம்மைப் பார்த்துக்கொண்டிருக்கும் உலகநாடுகளின் தலைவர்களை எம்பக்கம் ஈர்த்து சரித்திரம் படைக்கவிருக்கும் சரித்திரநாயகர்கள்.

தமிழீழ அரசுக்கான எமது தேர்தல் நெருங்குகிறது. தேவைகளுமோ அதிகரிக்கின்றது. எமது தேவைகளைக் கவனிக்க பங்காளிகளாக பாடுபட எமக்கு நூற்றுக்கணக்கான தொண்டர்கள் தேவை, குறிப்பாக பெண்களும் இளையோரும் கூடிய அளவில் தேவை.

அதேவேளை, இலைமறை காயாக வாழும் திறமைசாலிகளை, இராஜதந்திரம் தெரிந்தவர்களை, சாணக்கியமானவர்களை, இதுவரை காலமும் எம் இனத்தின் தேவைகளை அறிந்து சேவைகள் புரிந்தவர்களை இத் தேர்தலில் போட்டியிட வருமாறு தமிழீழ அரசின் சார்பில் அன்பாக வேண்டுகிறேன். இது உங்களுக்கான இடம். உங்கள் வருகை ஒரு திறமைமிக்க குழுவை கனடாவில் இருந்து தெரிவுசெய்யவும் குறுகிய காலத்தில் தமிழீழ அரசை அமைக்கவும் உதவியாக இருக்கும் என்பதை நான் கூறியா நீங்கள் அறியவேண்டும். எமது தொடர்பு இலக்கம்: 416 829 1362 email: sivalingham@sympatico.ca

தமிழீழ அரசின் நோக்கத்தை அதன் தேவையை எமது மக்கள நன்றாகப் புரியவேண்டும். இது நமது அன்றாட உரையாடலிலும் தவறாமல் இடம்பெறவேண்டும் என்பதே என் ஆசை, அவா என்று கூறினார் கலாநிதி ராம் சிவலிங்கம்.


"ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்"

எனும் அரிய நூல்

மனதை கட்டுப்படுத்தி நல்வழியில் செலுத்த, ஆளுமையை வளர்க்க, மனதில் நின்மதியை பெற வாசிக்க வேண்டிய அருமையான நூல்




கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்

தொலைபேசி இலக்கம்: 416.282.8059


GTA Square - 5215 Finch Ave. E., #201

Middlefield & Finch



15 Years of EXPERIENCE

Maths - Science English



Classes in Progress

For All Grades

K.G, Gr.1 to Gr 12

Scarborough / Markham



Mr & Mrs Sharma - 416-666-5515 / 416.724.9996

# கனடாவின் சொந்த மண்ணில் முதல் தங்கப்பதக்கம்

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பெற்றார். போலந்து நாட்டு வீரர் Adam Malysz வீரர் முதலாவது வெள்ளிப் பதக்கத்தையும் ஒஸ்ரிய வீரர் Gregor Schlierenzauer முதலாவது வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர். முதலாவது நாள் நடைபெற்ற பெண்களுக்கான கொக்கி போட்டியில் சுவீடன் அணி சுவிற்சலாந்து அணியை 3:0 என்ற கோல் அடிப்படையில் சுவீடன் அணி வெற்றிபெற்றது.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான Mogul Sking விளையாட்டில் கனடா நாட்டைச் சேர்ந்த Alexandre Bilodeau என்பவர் தங்கப்பதக்கத்தை வென்று கனடாவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளிலே முதலாவது தங்கப்பதக்கத்தைப் பெற்றவர் என்ற பெருமையை தட்டிக்கொண்டார். இப்பதக்கமே இதுவரை கனடாவில் நடைபெற்ற மூன்று குளிர்கால ஒலிம்பிக்கில் கிடைக்கப்பெற்ற பதக்கங்களில் முதலாவது தங்கப்பதக்கமாகும்.

இக்குளிர்கால ஒலிம்பிக் ஆரம்பிக்கமுன்னர் பயிற்சியின் போது ஜோர்ஜியா நாட்டைச் சேர்ந்த 21 வயது Nodar Kumaritasavili என்ற விளையாட்டுவீரர் Luge பயிற்சியின்போது ஏற்பட்ட விபத்தில் இறந்தார். இவருக்கான அஞ்சலியும் ஆரம்பவிழாவின் போது செலுத்தப்பட்டது. மேலும் பல தகவல்களோடு அடுத்த இதழில்.

# விளையாட்டுத் தகவல்கள் 277

## இந்தியாவை விட நாங்கள் தான் நம்பர்-1 அணி என்பதை நிரூபித்து விட்டோம் : ஸ்மித்

நாக்பூரில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா தென் ஆப்பிரிக்காவிடம் இன்னிங்ஸ் தோல்வியை சந்தித்தது. டெஸ்ட் போட்டி தர வரிசையில் தற்போது இந்தியா முதலிடத்தில் உள்ளது. அடுத்த டெஸ்ட் போட்டியிலும் இந்தியா தோற்றால் முதல் இடத்தை இழந்து விடும். தென் ஆப்பிரிக்கா முதலிடத்துக்கு வந்து விடும். வெற்றி குறித்து தென் ஆப்பிரிக்கா கேப்டன் ஸ்மித் கூறியதாவது:- முதல் போட்டியில் வெற்றி பெற்றுள்ள நாங்கள் 2 போட்டியிலும் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றுவோம்.

இந்த வெற்றியின் மூலம் எங்கள் திறமையை மீண்டும் வெளிப்படுத்தி உள்ளோம். இந்தியா தற்போது நம்பர்-1 இடத்தில் உள்ளது. அந்த இடத்தை மீண்டும் பிடிக்கும் பயணத்தை தொடங்கி உள்ளோம். இந்தியாவை விட நாங்கள் தான் நம்பர்-1 அணி என்பதையும் இதன் மூலம் நிரூபித்து உள்ளோம். சமீப காலமாகவே நாங்கள் டெஸ்ட் போட்டியில் சிறப்பான வெற்றிகளை பெற்று வருகிறோம். முன்னணி அணிகள் அனைத்தையுமே தோல்வி அடைய செய்துள்ளோம்.

எங்கள் சொந்த மண்ணில் மட்டும் அல்ல வெளி நாடுகளிலும் வெற்றி பெற்று வருகிறோம். 2008ல் இந்தியா வந்தபோது வெற்றி பெற்றோம். இங்கிலாந்திலும், அவுஸ்திரேலியாவிலும் கூட வெற்றியடைந்து உள்ளோம்.

அடுத்த போட்டியிலும் வென்று நம்பர்-1 இடத்தை பிடிக்க வேண்டும் என்பதை எங்களுடைய ஒரே குறிக்கோள். நாங்கள் எங்களுக்கே உரிய முறையில் கிரிக்கெட் ஆடி வருகிறோம். எல்லா சூழ்நிலையையும் சாதகமாக்கி கொள்கிறோம். எதையுமே சாதகமாக எடுத்துக்கொண்டு வீரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சிறப்பாக விளையாடுவதால் வெற்றி கிடைக்கிறது என்றார் ஸ்மித்.

தென் ஆப்பிரிக்காவிடம் இந்தியா இன்னிங்ஸ் தோல்வி

நாகபுரி: தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான முதல் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா ஒரு இன்னிங்ஸ், 6 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது. சச்சின் டெண்டுல்கர் அடித்த சதம் வீணானது.

நாகபுரி விதர்பா கிரிக்கெட் சங்க மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. தென் ஆப்பிரிக்கா முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 558 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. இதையடுத்து முதல் இன்னிங்ஸைத் துவங்கிய இந்தியா 233 ரன்களுக்கு ஆல்-அவுட்டாகி ஃபாலோ-ஆன் பெற்றது. 3-ம் நாள் ஆட்ட நேர இறுதியில் 2-வது இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 66 ரன்கள் என்ற நிலையில் இந்தியா இருந்தது. இந்நிலையில் 4-ம் நாள் ஆட்டம் நடைபெற்றது. முரளி விஜய் 27 ரன்களுடனும், சச்சின் 15 ரன்களுடனும் ஆட்டத்தைத் துவக்கினர்.

ஆனால் தென் ஆப்பிரிக்க வீரர்களின் சிறப்பான பந்துவீச்சினால் இந்திய வீரர்கள் மளமளவென ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பிய வண்ணம் இருந்தனர். சச்சின் மட்டும் சதமடித்தார். ஆனாலும் அது இந்தியாவின் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க போதுமானதாக அமையவில்லை. இறுதியில் 319 ரன்களுக்கு இந்தியா ஆட்டமிழந்தது. இதையடுத்து தென் ஆப்பிரிக்கா ஒரு இன்னிங்ஸ், 6 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டது.

முன்னதாக இந்திய அணியின் இன்னிங்ஸின்போது நன்றாக விளையாடிக் கொண்டிருந்த முரளி விஜய் 32 ரன்களுக்கு வீழ்ந்தார். விஜய்-சச்சின் ஜோடி 3-வது விக்கெட்டுக்கு 72 ரன்கள் சேர்த்தது.

அதைத் தொடர்ந்து வந்த அறிமுக வீரர் பத்ரிநாத் 6 ரன்களில் பெவிலியன் திரும்பினார். பத்ரிநாத், முதல் இன்னிங்ஸில் அரை சதமடித்தது குறிப்பிடத்தக்கது. இதையடுத்த 5-வது விக்கெட்டுக்கு சச்சின்-கேப்டன் தோனி ஜோடி சேர்ந்தனர். இருவரும் சிறப்பாக விளையாடி அணியின் ஸ்கோரை மெதுவாக உயர்த்தினர். சிறப்பாக விளையாடிய சச்சின் அரை சதம் கடந்தார்.

அரை சதத்துக்குப் பின்னரும் தனது அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய சச்சின் 100 ரன்களை எட்டி, டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 46-வது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

ஆனாலும் பால் ஹாரிஸின் பந்தில் ஸ்வீப் ஷாட் அடிக்க முயன்று ஆட்டமிழந்தார். அவரது ஸ்கோரில் 13 பௌண்டரிகள் அடங்கும்.

பின்னர் தோனி 25 ரன்களுக்கு வீழ்ந்தார். ஆனால் ரித்திமான் சாஹா 36, ஹர்பஜன் சிங் 39, ஜாகீர் கான் 33 ரன்கள் எடுத்து அணி கௌரவமான ஸ்கோரை எட்ட உதவினர். இறுதியில் மிஸ்ரா ஆட்டமிழக்க அணியின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

இந்த வெற்றியையடுத்து 2 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் தென் ஆப்பிரிக்கா 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. தென் ஆப்பிரிக்காவின் ஸ்டெயின், ஹாரிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளும், பார்னெல் 2 விக்கெட்டுகளும், மோர்க்கெல், காலிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் சாய்த்தனர்.

சிறப்பாக விளையாடி இரட்டைச் சதமடித்த ஹஷிம் ஆம்லா ஆட்டநாயகனாகத் தேர்வு பெற்றார்.

கோல்கத்தாவில் 2-வது டெஸ்ட்: இந்நிலையில் கோல்கத்தாவில் 2-வது டெஸ்ட் போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை துவங்குகிறது. இந்தப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றே ஆகவேண்டிய கட்டாயத்தில் உள்ளது. மாறாக தோல்வி கண்டாலோ, டிரா செய்தாலோ, ஐசிசி தரவரிசைப் பட்டியலில் இந்தியா 2-ம் இடத்துக்குத் தள்ளப்பட்டு விடும்.

சுருக்கமான ஸ்கோர்: தென் ஆப்பிரிக்கா முதல் இன்னிங்ஸ் 558-6வி டிக்ளேர் (காலிஸ் 173, ஆம்லா 253 நாட்-அவுட், ஜாகீர் கான் 3வி-96).
இந்தியா முதல் இன்னிங்ஸ்: 233 (சேவாக் 109, பத்ரிநாத் 56, ஸ்டெயின் 7வி-51).
2-ம் இன்னிங்ஸ்: 319 (கம்பீர் 1, சேவாக் 16, விஜய் 32, சச்சின் 100, பத்ரிநாத் 6, தோனி 25, சாஹா 36, ஹர்பஜன் 39, ஜாகீர் 33, மிஸ்ரா 0, ஸ்டெயின் 3வி-57, ஹாரிஸ் 3வி-76, மோர்கெல் 1வி-65, பார்னெல் 2வி-58, காலிஸ் 1வி-19).

லிவர்பூல் கால்பந்து அணி: அம்பானி ஆர்வம்?

லண்டன்: ஐ.பி.எல்., கிரிக்கெட் அணியை வாங்கிய "ரிலையன்ஸ்" முகேஷ் அம்பானியன் பார்வை, தற்போது கால்பந்து பக்கம் திரும்பியுள்ளது. இவர், சர்வதேச அளவில் மிகப் பிரபலமான லிவர்பூல் கால்பந்து கிளப் அணியின் பங்குகளை வாங்க முயற்சிப்பதாக செய்திகள் வெளியாகின. இதனை முகேஷ் அம்பானி தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தை சேர்ந்த பிரபல கால்பந்து கிளப் லிவர்பூல். பிரீமியர் லீக், எப்.ஏ., கோப்பை, ஈஉப்பா, ஐரோப்பிய கோப்பை உட்பட 18 முறை பட்டம் வென்று சாதித்துள்ளது. ஸ்டீவன் ஜெரார்டு, பெர்னாண்டோ டோரஸ் போன்ற முன்னணி வீரர்கள் இந்த அணியில் இடம் பெற்றுள்ளனர். கடந்த 2008ல் "போர்ப்ஸ்" வர்த்தக பத்திரிகையின் கணிப்பின்படி, மான்செஸ்டர் யுனைடெட், ரியல் மாட்ரிட், ஆர்சனல் ஆகிய கால்பந்து கிளப் அணிகளுக்கு பிறகு நான்காவது விலையுயர்ந்த அணியாக லிவர்பூல் கருதப்பட்டது.

நிதி நெருக்கடி: இப்படி புகழின் உச்சியில் இருந்த லிவர்பூல் அணி, சமீப காலமாக சரிவை சந்தித்தது. இதற்கு அணியின் உரிமையாளர் களான அமெரிக்காவை சேர்ந்த ஜார்ஜ் கில்லட் மற்றும் டாம் ஹிக்ஸ் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு தான் முக்கிய காரணம். ரசிகர்களின் ஆதரவும் குறைந்த போக, சுமார் ஆயிரத்து 700 கோடி ரூபாய் கடனில் சிக்கியது. இதையடுத்து அணியின் 51 சதவீத பங்குகளை விற்க முடிவு செய்யப்பட்டது. இதனை வாங்க, இந்தியாவின் ரிலையன்ஸ் நிறுவன அதிபரும் உலகின் 7வது பணக்காரருமான முகேஷ் அம்பானி மற்றும் சஹாரா நிறுவனத்தின் சுப்ரதோ ராய் ஆகியோர் முயற்சி செய்வதாக லண்டனில் இருந்து வெளியாகும் "டைம்ஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டது.

இதையடுத்து ஐ.பி.எல்., மும்பை இந்தியன்ஸ் அணியின் உரிமையாளராக உள்ள முகேஷ் அம்பானி, கால்பந்து அரங்கிலும் கால்பதிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், லிவர்பூல் தொடர்பான செய்தியை ரிலையன்ஸ் நிறுவனம் மறுத்துள்ளது. இதன் செய்தி தொடர்பாளர் சுதீப் புர்கயஸ்தா கூறுகையில், "லிவர்பூர் பங்குகளை வாங்குவது தொடர்பான செய்தி தவறானது. இதனை முழுமையாக மறுக்கிறோம்," என்றார்.

சஹாரா நிறுவன செய்தி தொடர்பாளர் அபிஜித் சர்கார் கூறுகையில்,"தற்போது கருத்து தெரிவிக்கும் நிலைமையில் இல்லை," என்றார்.


உதைபந்தாட்ட நட்சத்திரம் ரொனால்டினோ உலக் கிண்ண கால்பந்தாட்ட போட்டிகளில் பங்கேற்ற முடியாத நிலை

உலகின் முக்கிய கால்பந்தாட்ட நட்சத்திரங்களில் ஒருவராகக் கருதப்படும் பிரேஸிலின் ரொனல்டீனோ தென் ஆபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்ற முடியாத நிலை ஏற்படக் கூடுமென அறிவிக்கப்படுகிறது. ரொனால்டீனோ உலகக் கிண்ணக் கால் பந்தாட்டத்திற்கான தேசிய குழாமில் இணைத்துக்கொள்ளப்படவில்லை.

கடந்த 2009ம் ஆண்டில் ரொனால்டீனோ பிரேஸில் அணிக்காக எந்தவொரு போட்டியிலும் பங்குபற்றவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், ரொனால்டீனோ ரசிகர்கள் மற்றும் ஊடகங்கள் அவரை உலக் கிண்ண குழாமில் இணைத்துக்கொள்ளுமாறு வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 29 வயதான ரொனால்டீனோ ஏ.சீ. மிலான் கழகத்திற்காக விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


2002ம் ஆண்டு உலகக் கிண்ண போட்டிகளின் போது பிரேஸில் அணி உலகக் கிண்ணத்தை வென்றெடுப்பதற்கு ரொனால்டீனோ வழங்கிய பங்களிப்பு மிகவும் முக்கியமானதென்பது குறிப்பிடத்தக்கத

அபார வெற்றியினால் மீண்டும் முன்னிலை வகிக்கும் அவுஸ்திரேலிய



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

ELECTRICAL WORKS

FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# ஆதனத்தின் விலையின் அதீத அதிகரிப்பு

ஆதனம் வாங்குவதற்காக வாங்கும் - விற்கும் படிவம் கொடுக்கப்பட்டு அதன் முடிவை எதிர்பார்த்துகொண்டு இருந்த நேரம். வாங்குபவர் ராஜன் செல்லத்துரை. மிகவும் பதட்டத்துடனும் ஆவலுடனுன் விற்பவரின் முடிவை பார்த்துக்கொண்டிருத்தார். இரவு 11:50 மணி அளவில் விற்பனையாளரின் வீட்டு முகவர் என்னை அழைத்து, உங்களது 'Offer' ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனவும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

தூங்காமல் முடிவைப்பார்த்துக்கொண்டு இருந்த ராஜனிற்கு பதில் தெரிவிக்கப்பட்டது. வீடு வாங்கிய மகிழ்ச்சியுடன் ராஜன் குடும்பம் குதூகலித்தனர். மறுநாள் தொழில் முடிந்து வரும்போது Certified Cheque ஐ கொண்டு வருவதாகவும் கூறிய பின் Goodnight சொல்லி விட்டு தூக்கத்திற்கு போனர். அடுத்தநாள் மாலை 3:00 மணியளவில் ராஜன் என்னை செல்பேசியில் தொடர்புகொண்டு கவலையுடன் தனது விதியை நொந்தார். இன்றிலிருந்து இரண்டு கிழமைகளில் தனது தொழில் முற்றுப்பெறுவதாகவும் தெரிவித்தார். கடவுள் விட்ட வழி, மூன்றுமாதமாக அலைந்து பெற்ற வீடு கைவசப்படப்போவதில்லை என்னும் வருத்தத்துடன் தெரிவித்தார்.

2008ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் பண இறுக்கத்தின் (Recession) அதி உச்சக்கட்டத்தில் இருந்த நேரம், கனடாவின் பலபகுதிகளிலும் வீட்டின் விலையின் இறக்கமும், மக்களின் பதட்டமும், ஆதன விற்பனை நிறுவனங்கள் (RealEstate Brokerages) தமது பணியாளர்களை பதவி நீக்கம் செய்யத் தொடங்கிய நேரம், ஆதன விற்பனை நிறுவனங்கள் (RealEstate Brokerages) திவாலாகத்தொடங்கிய நேரமும், காலமும் கூட.

இந்த நெருக்கடியின் உச்சக்கட்டம், கல்கறி (Calgary), வன்கூவர் (Vancove) போன்ற நகரங்களில் மிகப்பாதிப்பை ஏற்படுத்தியது. இந்தக்காலத்தில் ஆதனத்தை வாங்குபவர்கள், எங்கே மறைந்தார்கள் என்று புரியவில்லை. ரொறொன்ரோவில் ஆதனத்தை விற்கும் குறிப்பாக புதிதாக நிர்மாணம் செய்வதனை விற்க, அலுவலகங்களை (Sales offices), மூடக்கூடிய இக்கட்டான நிலையை அண்மித்துக்கொண்டு வந்தன.

இன்றைய நிலைமையோ வேறுமாதிரி. சராசரி விலை $400,000 ஐ தாண்டியுள்ளது. அதாவது சராசரி வீட்டுவிலை $409,058 ஆக உள்ளது. பொதுவாக ஜனவரி மாதத்தில் விற்கப்படும் வீடுகளும் குறைவாகவே காணப்படுவது. ஜனவரி 2010 இல் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 4986 ஆகும். இந்த தொகை முந்திய ஆண்டு ஜனவரியுடன் ஒப்பிடும் போது 87% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஜனவரி 2010 இல் ரொறொன்ரோவின் பெரும்பாகத்தில் வீட்டின் விலை அதிகரிப்பில் அதிகூடியதாக உள்ள முதல் மூன்று இடங்கள் முறையே தெற்கு பிக்கறிங் (South Pickering), மல்வேன் (Malvern), கில்சைட் (Hillside), றூஜ் (Rouge) மற்றும் வடக்கு பிக்கறிங் (North Pickering) ஆகும். தெற்கு பிக்கறிங் 9.2% அதிகரிப்பும், மல்வேன், வடக்கு பிக்கறிங் முறையே 7.3% உம், 7.2% ஆக அதிகரித்துள்ளன.

HST (Harmonized Sales Tax) இன் வருகையையும், வட்டிவீதத்தின் அதிகரிப்பையும் நோக்காகக் கொண்டு மக்கள் ஆதனம் வாங்குவதில் ஒருவித வேகம் இருப்பதனை அனுபவ ரீதியாகக் காணலாம். இதனால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மிகப்பெரிய அதிகரிப்பை காணக்கூடியதாக உள்ளது.

கடந்த 40 வருடங்களில் இப்பொழுது, கனடிய மக்களில் அதிகமானவர்கள், தங்களிற்கென சொந்த வீட்டை கொண்டுள்ளார்கள். 68.4% கனடிய மக்கள் சொந்தமாக உரிமை கொண்டுள்ளார்கள். ஆதன பொருளாதார அறிஞர் திரு. றோசன்வேக்கின் (Rosenberg) ஆய்வின்படி கனடிய வீட்டு விலை 15% இலிருந்து 35% அதிகமாகக் காணப்படுவதாக எச்சரித்துள்ளார்.

இவ்வாறான அதிகரிப்பு, ஆதனவிலையில், எந்த நேரத்திலும் இறக்கத்தை ஏற்படுத்தலாம் எனவும் பயமுறுத்தியுள்ளது. 2004 ஆம் ஆண்டு வோல் ஸ்ரீட் (wall Street) இன் அதிகூடிய விலையைப் பற்றி கூறியிருந்தார் என்பது ஞாபகப்படுத்தக் கூடியது. அப்பொழுது அனேகமான பொருளாதார ஆய்வாளர்கள் இவரின் கூற்றிற்கு எதிராக தமது எதிர்வுகூறல்களை முன் வைத்திருந்தார்கள்.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 314**


HomeLife GTA Realty Inc., Brokerage*

Independently owned & operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto
Tel.: 416.321.6969

145 Traders Blvd # 29, Mississauga
Tel.: 905.712.2666

## 2 BEDROOM CONDO. FOR SALE

***KENNEDY / ELLESMERE***



- 2 Bedroom, excellent condition unit for sale in a highrise condo. for sale
- Laminated floor, ceramic floor
- 1 parking, • 1 locker included.
- 24 hours security guard, swimming pool, recreation place.
- Hydro, water, gas included in the maintenance fee.
- 2 full washrooms • Fridge, stove, washer, dryer, built in dishwasher, sakura fan.
- Asking only $249,900.

## CONDO. FOR SALE - SCARBOROUGH

***MCLEVIN & NEILSON (Mayfaif Buildings)***

- 2 Bedroom corner unit
- 1265 sqft
- Laminated, ceramic floor
- 2 parking, 1 locker included.
- Laminated floor, Ceramic floor
- Price $184,900
- 24 hours security, swimming pool, in a separate building
- Close to doctors, pharmacy, mall, ttc, highway....

### *Party Rental Business for Sale*

- Brimley / Progress
- Established Business
- Lots Of Rental Items Meant For Variety Of Functions / Occasions.
- Gross Rent $2800/Month Plus Utilities.
- Asking Price $99,000 Plus Stock

## Condo. sale - Mississauga

- ***Dundas / Hurontario***
- 1 bedroom condo.
- Renovated kitchen
- 1 parking, locker
- Unobstructed view
- Asking $149,900

Sold

### *Commercial unit for sale - Markham*

- Markham Rd. / Major Mackenzie
- 1,233 Sq.Ft.
- Prime location, visible Strip Plaza
- Suitable Uses Restaurant/Retail (Currently running as a bakery business.
- Asking $349/sqft

### *Commercial/Retail for Lease*

- GTA Square Mall
- Rent $950 Gross Lease
- Great Opportunity!
- Only few units left on the mainfloor
- Underground And Surface Parking
- Don't miss this chance.

Nantha Aiyadurai
Cell: 613 850 9931

COLDWELL BANKER
COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# மரபுக் கவிதை

நாள்: 17.11.2009, செவ்வாய்க்கிழமை
இடம்: ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்
தலைமை: கல்லூரி அதிபர் திரு. ஆறு திருமுருகன்

மதிப்புக்குரிய அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்களே!
அறிவுசான்ற ஆசிரியப் பெருமக்களே!
அன்புக்குரிய மாணவ மாணவிகளே!

இந்த அழகான காலைப் பொழுதிலே உங்கள் எல்லோரையும் காண்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் உங்களுக்குப் புதியவனாக இருக்கலாம். ஆனால், கல்வித் துறையிற் பல சாதனைகளை நாட்டிய இந்தக் கல்லூரி எனக் கொன்றும் புதியதல்ல. ஸ்கந்தவரோதயக் கல்லூரி என்றால் ஒரேற்றர் சுப்பிரமணியம், ஒரேற்றர் சுப்பிரமணியம் என்றால் ஸ்கந்தவரோதயக் கல்லூரி என்ற ஒரு காலம் இருந்தது. அந்தக் காலத்தை நான் நன்கு அறிவேன்.

நான் எழுதிய புவியியற் பாடபுத்தகங்களை இக் கல்லூரிக்கு அறிமுகப்படுத்தி, அவற்றைப் படிப்பித்த புவியியல் ஆசிரியரும் பிற்காலத்தில் இக்கல்லூரியின் அதிபராகவும் இருந்த திரு. வி. சுப்பிரமணியம் அவர்கள் என்னுடைய நல்ல நண்பர். மேலும், நெடுங்காலமாக இங்கு தமிழ் மற்றும் தமிழ் இலக்கிய ஆசானாக இருந்த வித்துவான் ஆறுமுகம் அவர்கள் நான் பெரிதும் மதித்துப் போற்றிய தமிழ் அறிஞர். இக்கல்லூரியின் பவளவிழாக் கொண்டாட்டத்தின்போது அவருடைய தலைமையில் 'எழுதுகோல் தெய்வம்' என்ற பொருளில் நடந்த கவியரங்கத்திலும் பங்குபற்றியிருக்கின்றேன்.

இப்பொழுது அதிபராக இருக்கின்ற செஞ்சொற்செல்வர் திரு. ஆறு திருமுருகன் அவர்களும் எனக்கு நல்ல நண்பர். நட்புரிமையால் கடந்த சனிக்கிழமை என்னையும் எனது துணைவியாரையும் தனது வாகனத்தில் ஏற்றிச் சென்று நல்லூர் முருகனையும் தெல்லிப்பழை துர்க்காதேவியையும் வழிபடவைத்தார். தனது முயற்சியால் உருவாக்கம் பெற்ற சிவபூமியில் நடைபெறும் ஒப்பற்ற சமூகப் பணிகளைப் பார்க்கும் வாய்ப்புகளையும் வழங்கினார். அவர் உங்களுக்கு மட்டும் அதிபரல்லர். பல அமைப்புகளுக்கு அதிபராக இருந்து ஓர் இராச்சியத்தையே நடத்திக்கொண்டிருக்கின்ற அரசர். சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளியில்லாது வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கின்ற ஆழ்ந்து அகன்று அடங்கிய கொள்கைச் சான்றோர்.

அவரது மேற்பார்வையில் கல்வி கற்கும் உங்களைத் தவஞ் செய்தவர்களாகவே கருதிப் போற்றுகின்றேன்.

மரபுக் கவிதை என்ற பொருளிலே சில கருத்துக்களை உங்களுக்கு விளக்கும் வண்ணம் அதிபர் கேட்டிருக்கின்றார். அவர் கேட்டுக்கொண்டதற்குக் காரணம் இருக்கின்றது. மரபுக் கவிதை பாடுகின்றவர் இக்காலத்தில் அருகி வருகின்றனர். புதுக்கவிதை பாடுகின்றவர்களே பெருகி வருகின்றார்கள். அதனாற்றான் போலும் மரபுக் கவிதையின் சிறப்புக்களை உங்களுக்கு நான் எடுத்துரைக்க வேண்டும் என்று அதிபர் விரும்புகின்றார்.

மரபுக் கவிதை இலக்கணத்தைத் தழுவிப் பாடப்படுவது. புதுக்கவிதை இலக்கண வரம்புகளைக் கடந்தது. இலக்கணம் சிந்தனை ஓட்டத்தைத் தடைசெய்கிறது என்பது புதுக்கவிதைகாரர் வாதம். கம்பனுக்கு இலக்கணம் தடையாக இருந்ததா? வள்ளுவர் பெருமானுக்கு, அவ்வையாருக்கு இலக்கணப்



பிரச்சனை இருந்ததா? விரும்பிய கருத்தைச் சொல்ல இலக்கணம் தடையாக இருக்கிறதென்பது மொழியறிவும் சொல்வளமும் இல்லாதவர்களின் வாதம் என்பது என்னுடைய கருத்து.

புதுக்கவிதை என்பது ஆங்கிலத்து Free Verse முறையைப் பின்பற்றி எழுதப்படுவது. புதுக்கவிதை என்ற சொற்பிரயோகமே தவறு என்பது என்னுடைய கருத்து.

இலக்கணத்தைப் பின்பற்றி ஒருவர் புதிதாகப் பாடும் கவிதையையும் அவர் தனது புதியகவிதை - புதுக்கவிதை என்று சொல்லலாம் அல்லவா? அதனாலே புதுக்கவிதைக்கு நான் வரிக்கவி என்று பெயர் வைத்திருக்கிறேன். வரிக்கவிகள் என்ற பெயரில் ஒரு தொகுதியையும் கனடாவில் வெளியிட்டிருக்கிறேன்.

கவிதை என்றால் என்ன?

கவிதையை விளக்குவது கடினம் என்றுதான் பலர் சொல்லிவருகிறார்கள். பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தனின் இலக்கியக் கலை என்ற நூல் தொடக்கம் இன்று கவிதை தொடர்பாக வெளிவருகின்ற எந்த நூலை நீங்கள் புரட்டிப் பார்த்தாலும் கவிதைக்குத் தெளிவான விளக்கத்தை, திட்டவட்டமான ஒரு வரைவிலக்கணத்தைக் காணமுடியாது.

அமெரிக்காவிலே ஓர் ஆசிரியர் கவிதைபற்றிப் படிப்புக்கும்பொழுது கவிதை என்றால் என்ன என்ற கேள்வியை மாணவரிடம் கேட்டார். ஒரு மாணவன் சொன்னான்:

கவிதை என்பது ஒரு பக்கத்தின் முழுப்பரப்பையும் நிரப்பாத படைப்பு.

அவன் ஒரு புதுக்கவிதைப் புத்தகத்தையும் வசனப் புத்தகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறான்போலத் தெரிகிறது. வசனப் புத்தகத்தில் பக்கமெல்லாம் நிரம்பியிருக்கிறது. கவிதைப் புத்தகத்தில் அப்படியில்லை. அதனால் பாவம் அவன் அந்த முடிவுக்கு வந்திருக்கிறான்.

மற்றொருவன் சொன்னான்:

எழுவாய் பயனிலைகளை முறையாக வைத்து வசனங்கள் எழுதத் தெரியாதவர்
எழுதுவதுதான் கவிதை.

அமெரிக்காவில் மட்டுமல்லாது எங்கள் மத்தியிலும் இதுதான் நிலைமை. கவிதை என்றால் என்ன என்று தெரியாமலே பலர் கவிதைகளை எழுதிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு துறையில் இறங்கும் பொழுது அதனை நன்கு அறிந்துகொண்டு இறங்க வேண்டும் -- தொடங்க வேண்டும். கிளித்தட்டு விளையாட்டு என்றால் என்ன என்று தெரியாமல் அதனை விளையாட முடியுமா? ரெனிஸ் விளையாட்டு என்றால் என்ன என்று தெரியாமல் றாக்கற்றைத் தூக்க முடியுமா?

ஆனால் கவிதை என்றால் என்னென்று தெரியாமலே பாடலாம். அந்த அளவுக்கு அது ஒரு மலிவான பண்டமாகிவிட்டது. அதனாலேயோ என்னவோ, பலருடைய படைப்புகள் இந்த மழைக்குத் தோன்றி நாளைய கோடையில் மறைந்துவிடும் புல்பூண்டுகளைப்போல மறைந்து விடுகின்றன.

உங்களுக்குக் கவிதைத் துறையில் ஆர்வம் இருந்தால் கவிதை என்றால் என்ன? அதனை எப்படிப் பாடுவது என்பனபோன்ற அடிப்படைகளை நன்கு விளங்கிக்கொண்டு கவிதையைப் பாடத் தொடங்குங்கள். அதுவே முறையான வழி. அத்திவாரம் சரியாக இருந்தால்தானே வீடு உறுதியாக இருக்கும். அதுபோல, அடிப்படை அறிவு தெளிவாக இருந்தால்தான் எந்தத் துறையிலும் முன்னேற முடியும்.

கவிதை என்பது உள்ளத்தில் ஊறி, மீறி வளர்ந்து வெளிப்படத் துடிக்கும் உணர்வு ஒன்றுக்கு அழகானதும் அளவானதுமான சொற்களால் கற்பனையும் விற்பனமும் நிறைந்த வடிவம் கொடுத்தல்.

இது என்னுடைய விளக்கம். கவிதை என்றால் என்ன என்று கேட்டு என்னிடம் வருகின்றவர்களுக்கு நான் சொல்லுகின்ற வரைவிலக்கணம். நாம் காணும் காட்சிகள் உண்டுபண்ணும் பெரும்பாலான உணர்வுகள் மறைந்து போகின்றன. சில உணர்வுகள் அவ்விதம் மறையாது உள்ளத்தில் ஊன்றி உறுத்திக்கொண்டே இருக்கும். அவற்றுள்ளும் மற்றவர்களுக்குப் பயன்படத்தக்கதான ஒன்றைத் தெரிந்தெடுத்துப் பாடும்வகையறிந்து பாடுவதுதான் கவிதையாகும்

பாடும் வகை அறிதலாவது செய்யுள் இலக்கண மரபுகளை அறிதல், கற்றல். உணர்வுக்கு நான் கொள்ளுகின்ற பொருள் சொல்லவருகின்ற உரிப்பொருள். ஒரு தாயின் வயிற்றில் கரு வளர்ந்து பிறத்தலுக்குச் சரியானது கவிதையின் பிறப்பு. அழகான சொல் என்பது படிப்பவரைக் கவர்ந்திழுக்கக்கூடிய சொல். கொண்ட பொருளுக்கு அது பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். அதனையும் அளவாகப் பாவித்தல் வேண்டும். கவிதையில் ஒரே சொல் திருப்பித் திருப்பி வருதல் நல்லதல்ல.

அடுத்து, கவிதைக்கு வேண்டுவது கற்பனை. கற்பனையின்றிக் கவிதை இல்லை. அது கவிஞனின் கற்பனை வளத்தைப் பொறுத்தது. ஒரு பொருளை எவ்விதம் கையாளலாம்? பலவிதமாகக் கையாளலாம். அதற்கு விதம் விதமான உத்திமுறைகளைக் கவிஞர்கள் கையாளுவது வழக்கம். சிறந்த உத்திமுறைகளுக்கு வேண்டப்படும் கெட்டித்தனத்துக்கு விற்பன்னம் என்று பெயர்.

இவ்விதமான கவிதைத் திறத்துக்கு உதாரணமாக சங்ககாலத்துப் பாடல் ஒன்றைக் காட்டலாம்.

கெடுக சிந்தை கடிது இவள் துணிவே
மூதிர் மகளிர் ஆதல் தகுமே
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை
யானை எறிந்து களத்து ஒளிந்தனனே
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலக்கி ஆண்டுப் பட்டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே!

இதனைப் பாடியவர் ஒக்கூர் மாசாத்தியார் என்ற ஒரு பெண்புலவர். ஒரு பெண்ணின் நாட்டுப் பற்றையும் அவளின் வீரத்தையும் சொல்லவருகிறார். அதனை அவர் சொல்லியிருக்கும் முறையும் பயன்படுத்தியிருக்கும் சொற்களும் உன்னதமான கவிதை ஒன்றை எமக்குத் தந்துள்ளன.

எடுத்த எடுப்பிலேயே கெடுக சிந்தை என்கிறார். என் சிந்தை கெட்டுவிடுவதாக! ஏன் இப்படித் தன்னையே நொந்துகொள்கிறார் புலவர்? இரண்டே இரண்டு சொற்களால் கவிதையைத் தொடர்ந்து படிக்கும் ஆவலை அவர் தூண்டிவிடுகிறார். எங்கள் கேள்விக்கு உடனேயே பதிலும் கிடைத்துவிடுகிறது. கடிது இவள் துணிவே என்கிறார். இவளது துணிவு மிகவும் கடுமையானது. என்ன துணிவு? ஏன் அது கடுமையானது? கேட்கத்



**கவிஞர் வி. கந்தவனம்**

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

நிப்ளக்ஸ்
REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS


Here to support you
L'aide dont vous avez besoin
If you've recently lost your job, or are afraid you might, Canada's Economic Action Plan can help.
• Five extra weeks of Employment Insurance (EI) regular benefits
• Increasing the duration of EI benefits in regions of high unemployment
• Faster EI claims processing
• Extended benefits and skills training for workers who have paid into government programs for all those years and now need assistance
Si vous avez récemment perdu votre emploi ou craignez de le perdre, le Plan d'action économique du Canada peut vous aider.
• Jusqu'à cinq semaines de prestations d'assurance-emploi régulières supplémentaires
• Prolongation de la période de prestations d'assurance-emploi dans les régions les plus touchées
• Traitement accéléré des demandes de prestations d'assurance-emploi
• Prestations additionnelles et formation professionnelle pour les travailleuses et travailleurs qui ont participé pendant des années aux programmes du gouvernement et ont aujourd'hui besoin d'aide
Call or visit to learn more.
Appelez ou visitez le site Web pour en savoir plus.
actionplan.gc.ca
1 800 O-Canada
plandaction.gc.ca
1 800 O-Canada
CANADA'S ECONOMIC
ACTION PLAN
PLAN D'ACTION
ÉCONOMIQUE DU CANADA
Canada


# வயிற்றுப்புண்ணும் (குடற்புண்ணும்) உணவும் (Ulcer and Food)

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

நாம் பிறக்கும்போது சில பரம்பரையான தொடர் வியாதிகள் அல்லது தாய் தந்தையர்களிடம் காணப்படும் சில வியாதிகள் எம்மைப் பற்றிக்கொள்ள முடியும். அது தவிர பொதுவில் கூறினால் நாமே நமக்கு வியாதி-களை தேடிக் கொள்கிறோம். இவற்றில் ஒன்றான இரைப்பைப்புண் பற்றி அலசி ஆராய்ந்து பார்ப்பதனால் முன்கூட்டி எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

நமது வயிற்றில் உள்ள இரைப்பையில் ஏற்படும் புண்ணைத்தான், ஆங்கிலத்தில் அல்சர் என அழைக்கப்படுகின்றது. வயிற்றுப்பகுதியில் காணப்படும் குடலானது வாயில் இருந்து குதம் (Anas) வரை தொடர்புடையது. நாம் உண்ணும் உணவுகள் உரிய இடத்தில் சென்று தங்க வைத்து சீரணிப்பதற்கு முக்கிய இடமாக அமைவது இரைப்பையாகும். இந்தப்புண் குடலில் எப்பகுதியிலும் வரலாம். இதில் பெரும்பாலும் முன்சிறு குடலில் வருகின்ற புண்ணை டியோடினல் அல்சர் (Duodenal Ulcer) என்றும், இரைப்பையில் வரும் புண்ணை Gastric Ulcer என்றும் அழைக்கப்படுகின்றது. ஆனால், சீரணக்குடற்பகுதியில் புண் எங்கு தோன்றினாலும் பெப்டிக் அல்சர் (Peptic Ulcer) எனப்பொதுவில் கூறிக் கொள்வார்கள். முன் சிறுகுடலில் ஏற்படுகின்ற புண்ணைப்பற்றி கவனிக்கும் போது இரைப்பை வெற்றிடமாக இருக்கும் நிலையில் வயிற்றின் மேற்பகுதியில் கடுகடுப்போடு கூடிய வலி உணர்வு காணப்படும். இவ்வேளையில் உரியவர் உணவை உண்டால் அவ்வேதனை குறைந்து காணப்படும். வலி உணர்வு தென்படாது. ஆனால், உண்ட உணவு செரிமானம் பெற்று விட்டால் மீண்டும் அவ்வலியுணர்வு தென்படும். அத்துடன் நின்றுவிடாது குமட்டல், வாந்தி, புளித்த ஏப்பம் அதாவது இரப்பையில் சுரக்கின்ற அமிலம் (HCL) அதிகரித்து உணவுக் குழாய் மூலம் மேலோங்கி வருவதனாலே நிகழுகின்றது. அத்துடன் நெஞ்செரிவு, அசீராணம், மலபந்தம், மலச்சிக்கல் இருப்பதுடன் மலம் கழியும் போது இரத்தம் கரு நிறம் கொண்டதாகக் காணப்படலாம்.

மேலும் இவர்களின் உடல் நிலையைக் கவனிக்கும்போது சிலர் பருத்த தோற்றமுள்ளவர்களாக இருப்பார்கள். ஓரளவு காரணத்தைக் கவனிக்கும்போது பசிக்கும் தன்மை அதிகரிக்கும்போது அளவு மீறிய உணவை உண்பார்கள். உண்பதினால் வயிற்றில் ஏற்படும் வலித்தன்மை அவர்களுக்கு அவ்வேளை தென்படாது.




இதனால் மீண்டும் மீண்டும் உணவை உண்ண விரும்பிக் கொள்வர். இதனால் உடல்த் தோற்றம் பருத்த நிலையில் காணப்படும். உணவை உண்ணும் நேரத்தைக் கவனிக்க மாட்டார்கள். இதனால் அசீரணம் நிலை ஏற்பட இடமுண்டு. ஓங்காளம், வாந்தி இரத்தமும் கலந்த வண்ணம் வரலாம். எனவே எதற்கும் தங்கள் வைத்தியரிடம் சென்றால் தகுந்த சிகிச்சை பெறுவதுடன் சிறந்த ஆலோசனைகளையும் பெற்று சுகம் பெற முடியும். இந்நிலை இருக்கும்போது தாமதித்து விடாதீர்கள். சில வேளைகளில் குடல்பகுதிகளில் துவாரங்கள் ஏற்படலாமெனக் கூறப்படுகின்றது.

அடுத்து இரப்பைப்புண் (Gastric Ulcer) உள்ளவர்களுக்கு இரைப்பையில் உணவு இருக்கும்போது வலி தென்படும். இந்நிலையில் உரியவர் வாந்தி எடுத்தால் வலி தெரியாது. இதனால் அடுத்தடுத்து வாந்தி எடுக்க தாங்களே முயற்சி எடுப்பார்கள். இதனால் சாப்பிட விரும்பமின்றி இருக்கும் நிலை ஏற்படும். ஆனால் பசி இருக்கும். சாப்பிட பயப்படுவார்கள். மெலிந்த தோற்றமுள்ளவர்களாக இருப்பார்கள். மலம் கழியும்போது இரத்தம் கலந்து காணப்படும். தாமதியாது வைத்திய பரிசோதனை செய்து சுகம்பெற வழியைத்தேடிக் கொள்ளுங்கள்.

எனவே மேற்கூறிய வியாதி வருவதற்கு என்ன முக்கிய காரணம் என்பதையும் அதனைத் தவிர்த்து கொள்ளுவதற்கு எதனைக் கையாள வேண்டுமென்பதையும், பாவிக்கும் உணவ-ினால் என்ன பலாபலன் உண்டு என்பதையும் ஓரளவு பார்ப்போம்.

நாம் நாளாந்தம் உண்ணும் உணவில் எண்ணெயில் வதக்கிய கரியல் பொரியல், மாசாலா வர்க்கங்கள், அளவுக்குமீறி உண்ணுதல், சிகரட் புகை போன்ற நிகோடின் போன்ற பொருட்களைத் தவிர்த்தல், அளவுக்குமிஞ்சிய குடிப் பழக்கம். இவற்றினால் ஏற்படும் காரத்தன்மை வயிற்றிலுள்ள அமிலத் தன்மையோடு சேர்த்து தாக்கத்தை குடலில் உண்டாக்கி புண் (Ulcer) நிலையை ஏற்படுத்தும். மேலும் குடலில் இருந்து போக வேண்டிய மலம் போக வேண்டிய நேரம் போகாமல் இருந்தால் குடல்பகுதியில் வாயுத்தன்மை அதிகரித்து குடல் உட்பகுதியில் அமிலத்தினால் சளிச்சவ்வு அரிக்கப்பட்டு புண் ஏற்படும்.

நாம் உண்ணும் உணவு, நீர் அதிக சூடாக இருந்தாலும் குடலில் தாக்கம் ஏற்படும். மற்றும் உணர்ச்சி வசப்படுதல், கோபம், அதிக கவலை, பயம் இவற்றினால் உணவு உண்ண முடியாமல் இருக்கும்போது குடலில் உள்ள அமிலம் அதிகரித்து புண் வரலாம். அளவுக்கு மிஞ்சிய உறைப்பு, புளிப்பு என்பவற்றை தவிர்த்துக் கொள்வது நன்றாகும். அடுத்து இரசாயனப் பொருட்கள் கலந்து தயாரித்த மருந்துகளை எடுத்தாலும் சிலருக்கு ஏற்பட வாய்ப்புண்டு.

உண்ணாவிரதம் இருப்போருக்கு குடலில் அமிலம் அதிகரித்து வயிற்றில் அவியல் ஏற்பட்டு புண் நிலை ஏற்பட இடமளிக்கப்படும். இந்நோயிலிருந்து விடுபட சில வழிகள் உண்டு. மலச்சிக்கல் நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேற்கூறிய குடலில் உள்ள அமிலம் கூடாதபடி கூறியவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பசியை அடக்க முடியாத நிலை ஏற்படும்போது உணவு உண்ணல் தாமதமாகில் ஏதவாது திரவம் அருந்துவது அதாவது தண்ணீர், பழரசம் போன்றவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும். இதனால் குடலில் ஏற்படும் அமிலத்தன்மையைத் தவிர்த்துக் கொள்ள முடியும். மேலும் உணவில் சீரணச்சக்தியை ஏற்படுத்தக்கூடிய புதினா, மல்லி, கீரை வகை, வெந்தயம், நற்சீரகம் போற்றவற்றையும் மரக்கறி வர்க்கங்களையும், சாலட், நூடில்ஸ் என்பவற்றை எடுத்து வருவதினால் குடல் தாக்கப்படாது பாதுகாக்க முடியும். உணவு தயாரிக்கும்போது தாவர வர்க்க எண்ணெய் அளவுடன் பாவிப்பதினால் நன்மையுண்டு. காலை வேளைகளில் பெரும்பாலும் புதினா நீர், நற்சீரகம், வெந்தயம் இவற்றில் ஏதாவது குடிநீர் அத்துடன் கருவேப்பிலையும் (கறிவேம்பு) சேர்த்து பாவிக்கலாம். மேலும், தேங்காய்ப்பாலில் பழ வர்க்கம் இட்டு இடையிடையே சாப்பிட்டு வருவதினாலும் குடலில் அவியல் புண் நிலை மாற்றமடையும்.

மதிய உணவில் அவல், உப்பு அற்ற சாதம், கோதுமைக்கஞ்சி, கருவேப்பிலை கூட்டிய தேங்காய்த் துவையல் சேர்த்து பாவித்து வரலாம்.

இரவு உணவில் கோதுமை உணவுடன் உள்ளி சேர்த்து தயாரித்த உணவு மிக நன்று. தவறாது கீரை வர்க்கங்களை உணவுடன்

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



தொடர்ச்சி 16ஆம் பக்கம்

**என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்**



**Interest Rate going up soon best time to buy Real Estate**

**3 bedroom Condo. Markham / Eglinton Low Maintenance**

*A few Bungalow houses near Universities London, Waterloo, Hamilton, Peterborough Good investment for your children*

Gas Stations 4 million litres / year in Peterborough, Oshawa, Hamilton with 6/49, good income

Home Based Business for *Senior Care*
Over 65 years old with *Property*
*100 Acres Farm with Income North of Markham*
*5 year plan 3.9% interest* **Power of Sale**
*Properties with Tenant's Pay the cost What's your Risk?*

வீடும் வியாபாரமும் *Business Zoning*
**Future long term Investment**

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு
அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666
150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

# அமெரிக்கப் பயணம் - 1

## லூறே பெருங்குகை (Luray Caverns)

சென்ற டிசம்பரில் ரொரன்ரோவில் இருந்து எம்மவர் சிலர் சொகுசு பஸ்ஸில் அமெரிக்காவிலுள்ள சில உல்லாச பயணிகள் செல்லும் பிரபலமான இடங்களுக்குப் பிரயாணஞ் செய்தனர். அப்பிரயாணத்தில் அவர்கள் பார்த்து அனுபவித்த இடங்களைப் பற்றி வாசகர்களுக்குத் தெரியப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.



- துறையூரான் -

ஒரு ஞாயிறு காலை புறப்பட்டு, இடைக்கிடை உணவுக்காகவும் கழிப்பிடங்களுக்காகவும் பஸ்ஸை நிறுத்தி வழி நெடுக அழகான காட்சிகளைப் பார்த்துக்கொண்டே சென்று, இரவு பத்துமணிக்கு மேல் வேஜினியாவிலுள்ள லூறே என்ற இடத்திலுள்ள விடுதியைச் சென்றடைந்தனர்.

அடுத்தநாள் காலை 10 நிமிடப்பிரயாணத்தில் பெருங்குகையை சென்றடைந்தனர். இது ஒரு சரித்திரப் பிரசித்தியும், உல்லாச பிரயாணிகளுக்கிடையே நன்கறியப்பட்டதுமான சிறந்த இடமாகும். இங்கே நுழைவுக் கட்டணமாகச் சிறுதொகை அறவிடப்படுகின்றது. வாயிலுக்கூடாக கீழே நிலத்துக்குள் இறங்கி போவதற்கு படிகள் அமைத்திருக்கின்றார்கள். உள்ளே மின்விளக்குகள் தேவையான இடங்களில் அளவான வெளிச்சத்தோடு அமைத்திருக்கிறார்கள். இங்கே பல்வேறு வடிவங்கள், உயரங்கள், நிறங்களில் கனிப்பொருள்களாலான இயற்கை அமைப்புக்ளை காணலாம். காடுகள் போலவும், உயர்ந்த கட்டிடங்கள் போலவும், கோவில்கள், மசூதிகள், கோபுரங்கள், கூரான கூம்புகள் போன்று எண்ணற்ற வடிவங்கள் இங்கே ஏராளமாக இயற்கையாகவே அமைந்திருந்தன.

இவை யாவற்றையும் புதைபொருள் ஆய்வாளர் ஸ்பிளெயோதெம்ஸ் (Speleothems) என்று அழைக்கிறார்கள். இவை குகை நீரிலுள்ள கனிப்பொருள்கள் படிவதால் உண்டாகும் அமைப்புக்கள் எனக் கூறுகிறார்கள். இது இயற்கையின் வர்ணஜாலங்களில் ஒன்று. இவை எவ்வாறு உண்டாகின்றன என்பது பின்னால் விளக்கப்படுகின்றது. இவ்வமைப்புக்களில் சில குகையின் கூரையில் இருந்து தொங்குகின்றன. இவை கீழே சிந்துகின்ற நீரிலுள்ள கல்சியம் உறைவதினால் ஏற்படுகின்றன. இவற்றை ஸ்ரலக் ரைற்ஸ் (Stalactites) என அழைக்கிறார்கள். இன்னும் சில அமைப்புக்கள் நிலத்திலிருந்து மேலே கிளம்புகின்றன. இவையும் நீரிலுள்ள கனிப்பொருள்கள் உறைவதால் அல்லது படிவதால் ஏற்படுகின்றன. இவற்றை ஸ்ரலக் மைற்ஸ் (Stalacmites) என அழைக்ககிறார்கள்.

இவ்வமைக்களோடு பல முருகைக் கற்றூண்கள், மண்சரிவுகள், மேடுகள், பள்ளங்கள், குளங்கள், நீர்ச்சுனைகள் எனப் பல்வேறுஅமைப்புக்களும் கீழே உள்ளன. இக்குகை 1878 இல் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் வரலாறு பற்றி பின்னால் பார்ப்போம். மேலும் இக்குகையில் கனிப்பொருள் குழாய்களாலான ஒரு வீணையும் உண்டு. இது ஒரு பெரிய குழாய் வீணை போன்று (தென்னங்குற்றிகளை அருகருகே அடுக்கியவாறு) மிக உயரமாக அமைந்துள்ளது. சில மாதாகோவில்களில் இவ்வாறான குழாய் வீணைகள் உலோகத்தால் செய்யப்பட்டுள்ளன. உங்களில் சிலர் இவற்றைப் பார்த்திருக்கலாம். இக்குகையிலுள்ள பெருங்குழாய்கள் (கனிப்பொருள்களால் ஆனவை) மேல் கம்பிச் சுருள்களான காந்தத் தடிகளைப் பொருத்தி இருக்கிறார்கள். இத் தடிகளுக்கூடாக மின்சாரம் பாயும் போது இவை மேற்கிளம்பி அடித்து ஓசைகளை உண்டாக்குகின்றன. குழாய்களின் நீளத்திற்கேற்ப இவ்வோசைகள் வேறுபட்டு பல்வேறு இராகங்களை ஏற்படுத்துகின்றன. இவற்றைக் கேட்கும்போது ஆச்சரியமாகவும் ஆனந்தமாகவும் இருக்கும். ஒரு பெரிய மண்டபம் போன்ற இடத்தின் ஒரு பகுதியில் இம்மாவீணை அமைந்துள்ளது. போதியளவு ஆட்கள் அவ்விடத்தில் கூடியவுடன் அங்குள்ள ஊழியர், மின்சாரப் பொத்தானை அழுத்தியதும் இசை கேட்கத் தொடங்கும் ஏறக்குறைய எட்டு அல்லது பத்து நிமிடங்களுக்கு இவ்விசையைப் அனுபவிக்கலாம்.

**பூமியப்பையில்** (Geology)

இனிக் குகையின் அமைப்பியல் பற்றி பார்ப்போம். இப்பெருங்குகை வேர்ஜினியாவிலுள்ள லூறே எனுமிடத்தில் அப்பாலாச்சியன் மலைத்தொடரிலுள்ளது. குகை மலை எனப்படும் இது கடல் மட்டத்துக்கு மேல் 927 அடி உயரத்திலுள்ளது. இப்பகுதியில் பல வட்டமான பள்ளங்களும் குழிகளும் இருப்பதால் பல காலமாக பலருடைய கவனத்தையும் ஈர்த்தது. அதன் காரணமாகவே இக்குகை கண்டு பிடிக்கப்பட்டது. இக்குகை ரேசியறிக் காலத்து (Tertiary Period) க்குப் முற்பட்டதாய் இருக்காது எனினும் இங்கு காணப்படும் அமைப்புக்கள் சிலூறியன் காலத்துச் (439 - 409) மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டது) சுண்ணாம்பு கல்லாலாணவை. ரேசியறிக்காலம் 2588 மில்லியனுக்கும் 65 மில்லியனுக்கும் முற்பட்ட காலம் எனப்படுகின்றது. ஒரு காலத்தில் ஏற்கனவே இருந்த நிலவறைகளும், மாடங்களும், அமிலங்களும் கலந்த நீரினால் நிரம்பியிருந்தன. இந்த அமிலம் கூரை, சுவர், நிலம் ஆகியவற்றிலிருந்து மிருதுவான பகுதிகளை அரித்த காரணத்தால் இவ்வமைப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம். நீர்மட்டம் கூரைவரை உயர்ந்திருந்ததற்கு அடையாளமாக எலபின் றாம்பிள் (Elfin Rable) என்ற ஒரு பகுதியில் நீரசைவுகளும் அலைகளும் கூரையில் பதிந்திருக்கின்றதைக் காணலாம். இக்குகைக்குள் வெப்பநிலை ஓரே சீராக எங்கும் 12 பாகை செல்சியசாக உள்ளது.

SMILE.....



• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

PL. CALL: 905.887.7457 / 905.751.7537


24 hrs, 365 days

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

www.vlambaram.com

TORONTO BUSINESS COLLEGE

கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



COMPUTERIZED ACCOUNTING DIPLOMA

● EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✔
● 3 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள் ✔
● 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள் ✔

அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்

DIPLOMA முடித்தவர்கள்

ACCOUNTS CLERK / COST CLERK
AUDIT CLERK / PAYROLL CLERK
ACCOUNTS RECEIVABLE / ACCOUNTS PAYABLE
ACCOUNTS ASSISTANT / BOOK KEEPER

போன்ற பதவிகளைப் பெற்று உங்கள் எதிர்காலம் மிளிர்வதைக் காண்பீர்

INSTRUCTORS

★ PUSHPA ★ SP ★ RAM

CERTIFICATE COURSES

Buy One Get One Free

WINDOWS, WORD, EXCEL, POWER POINT, ACCESS, OUTLOOK
PHOTO SHOP, QUICK BOOKS, SIMPLY ACCOUNTING, ACCPAC
DAY, EVENING, WEEK ENDS

416-291-5155

4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH
t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

# மூட்டு தேய்மானத்திற்கு யோகாவில் தீர்வு


## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

அன்புள்ள யோகா வாசகர்களுக்கு வணக்கம். தினமும் வாழ்வில் எந்தவித நோயும் இல்லாமல் வாழ்வில் இன்பம் என்றும் இருக்க யோகாவும் ஒரு முதன்மையான வழியாகும். தினமும் நாம் ஒரு அரை மணி நேரமாவது யோகாசனம் பழகிவரவேண்டும். இப்போதெல்லாம் நோய்கள் எவ்வாறு வருகின்றதென்று நமக்குத் தெரியாது. மனித வாழ்வில் நாம் உணவுப் பழக்கத்தை மாற்றி இயற்கை உணவு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மூட்டு தேய்மானம் என்பது பொதுவாக வயதானவர்களுக்கே வரும் ஆனால் இப்போதெல்லாம் இளைஞர்கள் மத்தியிலும் காணப்படுகின்றது. மிகவும் கடினமான வேலைப்பழுவினாலும் அளவுக்கு அதிகமாக நடந்து திரிவதாலும் மூட்டு தேய்வதற்கு வாய்ப்பாகின்றது. எலும்பு இணைப்புகளில் இருக்கக்கூடிய மஜ்ஜை சற்று இறுகி இருந்தால், நடக்கும்போதும் அசைவுகளின் மூலம் வலிகள் ஏற்படும். காலையிலும் அல்லது மற்ற நேரங்களில் நடைபயிற்சி ஓடுதல் Thread Mill அதிகமாக ஓடுதல் உடலுக்கு நன்மை தரும் என்று கருதி அவற்றை பெரும்பாலோனோர் மேற்கொள்ளுகின்றனர். ஆனால் இவற்றால் அதிகப்படியான மூட்டுகளின் அசைவுகள் ஏற்பட்டு அவைகள் காலப்போக்கில் தேய்ந்து கொண்டு போகின்றது. எனவே எலும்புகளின் இணைப்புகளில் மஜ்ஜை இறுகாமல் இருக்க வேண்டும்.


மூட்டு தேய்மானம் உடலில் பல இடங்களிலும் வரும். பொதுவாக கைகள் கால் மூட்டுகளைத் தான் இது பொதுவாகத் தாக்கும். இந்நோய் கண்டவுடன் ஆரம்பத்திலேயே தெரிவு செய்து சில யோகாசன பயிற்சிகளை செய்தால் போதும்.

### 1. உட்கட்டாசனம் (Attention Pose)




கால்களை அகலமாக வைத்து நிற்க வேண்டும். கைகள் இரண்டையும் தோள்பட்டையளவில் நீட்டிக் கொண்டு நாற்காலியில் உட்காருவது போல் அந்தரத்தில் அமர வேண்டும். இந்த நிலையில் 20 முதல் 30 வினாடிவரை இருக்க வேண்டும். இதுபோன்று 3 தடவை கள் செய்ய வேண்டும்.

### 2. பத்மாசனம் (Lotous Pose)



விரிப்பின்மீது உட்கார்ந்து கொண்டு கால்களை நேராக நீட்டிக்கொண்டு பின் வலது காலை மடக்கி இடது கால் தொடைமீதும் இடது காலை மடக்கி வலது தொடையின் மீது வைத்து நேராக நிமிர்ந்து கொள்ள வேண்டும். கைகளை சின் முத்திரையில் நேராக வைத்துக் கொள்ள வேண்டும். இந்நிலையில் நன்றாக மூச்சை உள்ளே இழுத்து மெதுவாக வெளிவிட வேண்டும். இது போன்று 10 தடவை மூச்சை இழுத்து விடவேண்டும்.

### வஜ்ராசனம் (Supreme Pose)




இரண்டு கால்களையும் நீட்டிக் கொண்டு மெதுவாக வலது காலை மடக்கி வைக்க வேண்டும். அதே போல் இடது காலை மடக்க வேண்டும். இரண்டு கைகளையும் முட்டியின் மீது வைத்துக் கொண்டு நேராக நிமிர்ந்து உட்கார வேண்டும். இந்த ஆசனத்திலும் 10 தடவை மூச்சை இழுத்து விட வேண்டும்.

### ஜானுசீராசனம்

விரிப்பில் இரு கால்களையும் நீட்டி வைத்துக் கொண்டு பின் ஒரு காலை மட்டும் மடக்கி வைத்துக் கொண்டு நீட்டிய காலை இரண்டு கைகளையும் கொண்டு பிடித்து தலையைக் குனிய வேண்டும். இவ்வாறு மற்றக் பக்கமும் செய்ய வேண்டும்.

### பஸ்ஸி மொத்தாசனம் (Forward Bend Pose)



இரண்டு காலையும் நேராக நீட்டி உட்கார்ந்து கொள்ள வேண்டும். இரண்டு கைகளையும் நீட்டியபடி மேல் உயர்த்தி மூச்சை வெளியே விட்டவாறு முன்னால் குனிய வேண்டும். இந்த நிலையில் 20 முதல் 30 எண்ணிக்கை வரை இருக்க வேண்டும். இதனை மூன்று தடை-வகள் செய்யவும்.

### ஒட்டக ஆசனம் (Camel Pose)



வஜ்ராசனத்தில் உட்கார்ந்து கொண்டு நேராக நிற்க வேண்டும். பின் இரண்டு கைகளையும் கொண்டு பின்புறமாக வளைந்து இரண்டு குதி காலையும் பிடிக்க வேண்டும். இந்த நிலையில் 5முதல் 10 தடவைகள் மூச்சை இழுத்து மெதுவாக வெளிவிடவேண்டும். பின் நேராக வந்து இரண்டு கைளையும் பின்புறம் வைத்து முன்புறமாக குனிய வேண்டும்.

இந்த ஆசனங்களைச் செய்து வந்தால் மூட்டு தேய்மானத்திலிருந்து விடுபடலாம். தினமும் காலையிலும் மாலையிலும் அரை மணி நேரம் யோகாசனங்களைச் செய்தால் போதும் இந்த மூட்டு வலிகள் வாதங்கள் போன்றவற்றிலிருந்து விடுபடுவது உறுதி.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

YOGA - MEDITATION CLASSLESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# மன்னவராகும் மாணவர்கள்

வாழ்வியலில் மிகவும் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டிய மிக முக்கியமான விடயம் என்னவெனில் நாம் ஒவ்வொருவரும் மாணவர்கள் என்பது தான். ஒவ்வொரு உயிரினமும் தனது பிறப்பில் இருந்து இறப்புவரை ஒவ்வொரு கணமும் கற்றுக்கொண்டுதான் இருக்கிறது. இதனால் வாழ்க்கையில் உயிருடன் உணர்வுகள் ஒன்றிணையும் ஒவ்வொருகணமும் நாம் மாணவர்கள் தான். இவ்வாறாக நமது வாழ்க்கைப்பாதையில் நாம் கற்றுக்கொள்ளும் விடயங்கள் அதன் மூலம் நாம் பெறும் அனுபவங்கள் என்பன எமது வாழ்நிலையைத் தீர்மானிக்கின்றன.

நாம் ஒவ்வொருவரும் படிப்படியாக எம்மை முன்னெடுத்துச் செல்வதற்கு மூன்றுவகையான முதிர்ச்சி உதவுகின்றது. ஒன்று அறிவு முதிர்ச்சி. இரண்டாவது அனுபவமுதிர்ச்சி. மூன்றாவது வயதுமுதிர்ச்சி. இந்த மூன்றுவகையான முதிர்ச்சிகளிலும் உள்ள சிறப்புத்தன்மை என்னவெனில் இவை மூன்றும் ஒருபோதும் பின்னோக்கிச் செல்வதில்லை. மாறாக எப்போதும் முன்னோக்கிச் செல்பவையே. இந்த மூன்று முதிர்ச்சிகளில் வயது முதிர்ச்சியைத் தவிர மற்றைய இரண்டும் ஒவ்வொருவருக்கும் வேறுபட்டதாக அமையும். இந்த இரண்டு முதிர்ச்சிகளின் தன்மையைக் கொண்டே ஒருவரது சிறப்புத்தன்மை அறியப்படுகின்றது. ஒருவரது அறிவுத்திறன் வளர்ச்சி வேகம் அறிவுமுதிர்ச்சியின் அளவையும், பண்புகள், பழக்கவழக்கங்கள் அனுபவமுதிர்ச்சியின் அளவையும் தீர்மானிக்கின்றன.

கற்றல் என்பது வாழ்க்கையில் தொடர்ச்சியானதும் தவிர்க்கமுடியாததாயினும் கற்றலின் பிரதான அம்சங்களை மிகப் பெரும்பான்மையானவர்கள் அறிந்து கொள்வது மில்லை. அறிவதற்கான ஆர்வத்தைக் கொண்டிருப்பதுமில்லை. இவர்கள் கற்றல் என்பது அறிவுத்திறன் சம்பந்தமாக மட்டுமே இருப்பதாக கருதுகிறார்கள். அதுமட்டுமன்றி கற்றல் என்பது ஒவ்வொரு கணமும் இடம்பெறுகின்றது என்பதை அறியாமல் கல்விக்கூடங்களில் மட்டும்தான் கல்வியென்பது கிடைப்பதான ஒரு கருத்தைப் அதிபெரும் பான்மையானவர்கள் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமன்றி கல்விக்கூடங்களில், பல்கலைக் கழகங்கள் உள்ளடங்கலாகக் கிடைக்கும் அறிவே ஒருவரது எதிர்காலத்தை முழுமையாகத் தீர்மானிப்பதாகவும் நம்புகிறார்கள். இதனால் தான் பெரும் பாலானவர்கள் புத்தகப்படிப்பில் புலமைப்பரிசில் களைப் பெறுவது தமது வாழ்க்கையை முழுமைப்படுத்தி விடும் எனக்கருதுகிறார்கள்.

நடைமுறையில் புத்தகக்கல்விகளும் வாழ்க்கைக்கல்விக்கும் இடையில் பெரியதொரு வேறுபாடு உண்டு என்பதை காலப்போக்கில் உணர்ந்து கொள்கிறோம். பாடசாலைகளில் பல்கலைக்கழககங்களில் நாம் கற்றகல்வி எங்களை நாம் தெரிவு செய்த துறையில் ஒரு திறமைசாலி ஆக்குவதாகவே அமைகின்றது. இந்தத் திறமையானது தொழிற்சந்தையில் நம்மை விற்பனை செய்வதற்கான ஒரு வாய்ப்பைக் கொடுப்பதாக அமைகின்றது. ஒரு வருமானத்தை உழைப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுக்கின் றது. இந்த வருமானத்தை உழைப்பதற்கு வாய்பளிக்கும் இந்தக் கல்வி, அதாவது அறிவுத்திறன் ஒருதுறையில் நிபுணத்துவம் பெற்றிருப்பதால் ஒருவரையறுக்கப்பட்ட வாய்ப்பையே கொடுக்கின்றது. அதுமட்டுமன்றி பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கல்வித்திறனால் பெறப்பட்ட வாய்ப்பைக் கைநழுவ விட்டுவிட்டால் இன்னொரு திறனைக் கற்பதற்கு இன்னும் சிறிது காலத்தையும் பணத்தையும் விரயம் செய்ய வேண்டும் என்பதாலும், சிலருக்கு மீண்டும் ஒருமுறை புதிய துறையில் கற்பதற்கான வாய்ப்புக்கள் இல்லாமையாலும் ஏற்கனவே செய்கின்ற தொழிலில் விருப்பம் இல்லாவிட்டாலும்கூட அதைத் தொடர்ந்து செய்யவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் அகப்பட்டுக் கொள்கிறார்கள்.

KG Master-kgmaster@rogers.com

கல்வி என்பது புத்தகக்கல்வியாக மட்டும் இருந்து புத்தகக் கல்வியில் புலமை பெற்றவர்கள் அனைவரும் வெற்றியாளர்கள் என்று கருதப்படுமாயின் உலகில் வாழும் மனிதர்களில் கணிசமான பகுதியினர் வெற்றியாளர்களாக வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் 'உலகமோ ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது' என்பதை மிக ஆணித்தரமாக உறுதி செய்துள்ளது. புத்தகக்கல்வி ஏட்டுச்சுரக்காயாவதற்கான காரணம் என்வெனில் கேட்டால் அதற்கான விடை பலருக்குத் தெரிவதில்லை. ஏனெனில் பரம்பரை பரம்பரையாக கல்வியென்பது ஒரு குறிப்பிட்டமுறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட பாட அமைப்பு என்றும் அந்தப்பாடத்தை ஆசிரியர் ஒருவரிடம் இருந்து கற்பதன் மூலம்தான் பெறப்படுகின்றது என்றும் அவை கல்விக் கூடங்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்றும் கருதப்படுவதாகும்.

கல்விக்கூடங்கள் ஒருவரது ஆரம்ப வளர்ச்சிக்காலங்களில் ஒரு நெறிப்படுத்தப்பட்ட முறையில் அறிவியில் சம்பந்தமான விடயங்களைப் போதிப்பதாக அமைவது அவசியமாகின்றது. ஒரு குழந்தையின் ஆரம்பகால உளவளர்ச்சியில் இந்தக் கல்விக் கூடங்களின் பங்களிப்பு மிகமுக்கியமானவை. இதனால்தான் ஒருகுறிப்பிட்ட வயதுவரை கட்டாயக்கல்வி அவசியமாகின்றது. இங்கே ஒரு குறிப்பிட்ட காலம்வரை வழங்கப்படும் இந்தக் கல்வியானது ஒரு குழந்தையின் மனோநிலையில் நேர்த்தியான பாதையை வழங்குவதாக அமைதலும் அத்தியாவசிய மாகின்றது. ஏனெனில் கல்வி என்பது அறிவுத்திறனையும் சிறந்த பண்புகளையும் உள்ளடக்கியதாக அமைவது ஒவ்வொரு வருக்கு மான அடிப்படைத் தேவையாகின்றது.

கல்வி என்பது அறிவுப் பண்பும் சமநிலைப்படுத்தப்பட்ட முறையில் அமையும் போது அந்த மாணவன், அவனது எதிர்காலம் என்பன சந்தேகத்திற்கு இடமின்றிச் சிறப்பாக அமையும். பெரும்பாலான சந்தர்ப்பங்களின் இந்தச் சமநிலை பேணப்படுவதில்லை. இந்தச் சமநிலை தவறும் போது அறிவா அல்லது பண்பா அதிகமாக உள்ளது என்பதைப்பொறுத்து ஒருவரது எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை முன்கூட்டியே வரையறை செய்யமுடியும். உதாரணமாக ஒருவர் அறிவில் மிகச் சிறந்தவராகவும் பண்புகளில் பின்தங்கியவராக வும் இருப்பாராயின் அவரது எதிர்காலமானது புத்திசாலித்தனமான அடிமைத்துவமாக அமையும். அதாவது அறிவில் மட்டும் தன்னை முன்னிறுத்தி பண்புகளில் தம்மைப் பின்தங்கிய நிலைக்கு உருவாக்கியவர்கள் தம்மைத் தாமே அடிமைகளாக்கியவர்களாகிறார்கள்.

மாறாக அறிவில் சராசரியாகவும் பண்புகளில் சிறந்தவராகவும் வளர்ப்பவர்கள் எதிர்காலத்தின் சிற்பிகளாகிறார்கள். இவர்களின் சிறப்பம்சம் என்னவெனில் இவர்கள் கல்வி என்பது ஏட்டுக்கல்வியும், வாழ்க்கைக்கல்வியும் இணைந்ததாகும். ஆரம்பகாலங்களில் இருந்ததே இவர்கள் தமக்குள் புத்தக அறிவினையும் வாழ்க்கை அறிவையும் படிப்படியாக வளர்த்துக் கொள்கிறார்கள். அறிவு என்பது கல்வியின் ஒருபாதி மட்டுமே என்பதை உணர்ந்து அதன் மறுபகுதியாகிய பண்புகள் நல்ல பழக்கவழக்கங்கள் என்பவற்றையும் கற்றுக் கொள்கிறார்கள். இதனால்தான் இவர்களே எதிர்காலத்தைத் தமக்குச் சொந்தமாக்கும் தகைமையுடையவர் களாகவும் உருவாகுகிறார்கள்.

விஞ்ஞானம் விண்ணைத்தொட்டு விட்டது. விரல் நுனியால் உலகத்தை வலம்வரக்கூடிய அளவுக்கு தொடர்பு படுத்தல்கள் வளர்ந்துவிட்டன. கணத்துக்குக் கணம் கண்டுபிடிப்புக்கள். இன்று அதிசயமானவை நாளை பழங்கதை களாகின்றன. உலகின் ஒரு கரையில் இருந்துகொண்டு மறுகரையில் நடக்கும் விடயங்களை நொடிப் பொழுதில் அறிய முடிகிறது. இப்படி எத்தனை எத்தனை மாற்றங்கள் சாதனைகள்? இவையெல்லாம் கல்வியின் அறிவு சார்ந்த பகுதியே. ஆனால் இவை அனைத்துக்கும் அடிப்படையாக இருக்கும் இன்னொரு பாதி தான் மனிதனின் பண்பு சார்ந்த பகுதி. ஏனெனில் சாதனைகளின் சாதனையாளர் என வரலாற்றில் பதியப்பட்ட, பதியப்படுகின்ற அனைவரும் சிறந்த பண்பாளர்களே.

ஒருவரது வெற்றிக்கும் தோல்விக்கும் இடையில் காணப்படும் இடைவெளி மிகக்குறுகியது என்பதை நாம் அறிந்து கொள்ளல் அவசியம். வாழ்க்கையில் வெற்றி பெறுவதும் பெறாமல்விடுவதும் நமது தெரிவினால் ஏற்படுத்தப்படுவதே. ஒருவரது மனநிலையின் தன்மைகள் அவரது வாழ்வியலில் விடயங்களைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கை வகிக்கின்றன. இதனால்தான் பிறப்பு முதல் இறப்புவரையான காலப்பகுதியில் சிறந்த மனோபாவங்களை வளர்ப்பவர்கள் மற்றவர்களையும் வழிப்படுத்துகிறார்கள். கடந்த காலங்களில் கல்விக்கூடங்கள் பாட அறிவை மட்டும் போதிப்பதாக இல்லாமல் நல்ல பண்புகளைப் புகட்டும் இடங்களாகவும் அமைந்திருந்தன. உடற்சுத்தம், உளச்சுத்தம், உண்மை பேசுதல், பெரியோரை மதித்தல், ஒற்றுமை உணர்வு, முன்னேற்றச் சிந்தனைக் கான வழிகள், இறையுணர்வு எனப் பல வழிகளில் மாணவர்களை நெறிப்படுத்துபவை யாக அமைந்திருந்தன. ஆனால் காலப்போக்கில் குறிப்பாக வளர்ச்சியடைந்த பல நாடுகளில் கல்விக்கூடங்கள் அறிவுக் கூடங்களாக மாற்றமடைந்து விட்டன. இதனால்தான் அறிவில் சிறந்தவர்களாயும் பண்புகளில் தரம் குறைந்தவர்களுக்குமான மாணவ சமுதாயம் உருவாக்கப்படுவதை நாம் காண்கிறோம்.

## ஆம் வாசகர்களே!

கல்வியென்பது அறிவும் பண்பும் உள்ளடங்கியதே. நாம் வாழும் நாடும், சூழலும், சமூக பொருளாதார அமைப்பும், கல்விமுறைகளும் அறிவியலுக்கு அதிகளவான வாய்ப்பைக் கொடுக்கின்றன. இதனால் அறிவுசார்ந்த மாணவர்கள் உருவாக்கப்படுகிறார்களேயன்றி தரமான சிறந்த பண்புகளைக் கொண்ட மாணவ சமுதாயம் உருவாக்கப்படு வதற்கான வழிமுறைகளும் வாய்ப்புக்களும் மிக அரிதாகவேயுள்ளன. இதனால் சமுதாய வேறுபாடுகளுக்குள்ளும் கலாசார வேறுபாடுகளுக்குள் வாழும் நாம் சிறந்த பண்புகளின் முன்னோடிகளாக இருந்து நமது குழந்தைகளும் தரமான பண்புகளைக் கற்று சிறந்த மாணவர்களாக பாடசாலைக்கல்வியில் மட்டுமல்ல வாழ்க்கைக் கல்வியிலும் சிறந்தவர்களாக உருவாகட்டும். அப்போது தான் அறிவுமுதிர்ச்சியும் பண்புகள் நிறைந்த அனுபவமுதிர்ச்சியும் கொண்ட மாணவ சமுதாயம் உருவாகும். இவ்வாறு உருவாக்கப்படும் மாணவர்களே எதிர்காலத்தைத் தமதாக்கும் திறன்மிக்கவர் கள் மட்டுமல்ல தம்மையும் இந்தத் தரணியையும் ஆளும் தகைமை யுடையவர்கள். இவர்கள் தன் மன்னவராகும் மாணவர்கள்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹாராஜியின் உரைகள்**

**On DVD**

இலவச DVDக்கு அழையுங்கள்

**(416) 431-5000**

**1 877 707 3221**

**On TV**

**Saturdays at 11:00 am**

**Rogers Cable Channel - 20**

**Bell Express vu Channel - 219**



# கம்பனியில் வாங்கிய புதிய வாகனத்தில் கோளாறுகள்!

## Brand New Vechile

## கனடிய தகவல் தொடர் 119

## நியாயமான தீர்வே காணமுடியவில்லை! எங்கே? எப்படி? கனடாவில் தீர்வு காண்பது?

சில மாதங்கள்! அல்லது ஒரு வருடங்கள் மட்டும் புதிதாக வாங்கி உபயோகிக்கப் பட்ட அந்த வாகனம்! திடீர் என சில கோளாறுகள்!

கம்பனி உற்பத்தியாளரின் குறைபாட்டினால் ஏற்பட்ட கோளாறுகள் (Automobile Manufacturing Defects) என்பது ஓரளவு புரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.

ஆரம்பத்திலிருந்து உபயோகிக்கும் ஒரு குறிப்பிட்ட சில கிலோ மீற்றர் தூரம்வரை அல்லது முதல் சில வருடங்கள்வரை ஏதாவது கோளாறுகள் ஏற்பட்டால் இப்புதிய வாகனங்களை கம்பனியே இலவசமாக திருத்தித் தரப்படும் என்ற ஒரு உத்தரவாதத்தினை (New Vechile Warranty) கம்பனி நிச்சயமாக தந்திருக்கும். அந்த "உத்தரவாதம்" என்ற வாக்குறுதியின் அடிப்படையில் கம்பனி விற்பனை முகவரிடம் எடுத்துச் சென்று அதனை நிவர்த்தி செய்து கொள்ளலாம். அங்கும் நிவர்த்தி செய்யும் தீர்வு பூரணமாக திருப்தியாக கிடைக்க வில்லையேல் கனடாவில் எங்கே போவது?

(a) கனடாவில் உற்பத்தி செய்யப்படும் வாகனங்கள் (Manufacturing Vehicles In Canada)
அல்லது

(b) ஏனைய நாட்களில் உற்பத்தி செய்யப்பட்ட உதிரப்பாகங்களை கொண்டு கனடாவில் உருவமைக்கப்படும் வாகனங்கள்! (Manufacturing Vehicles In Canada By Imported Engines & Parts)
அல்லது

(c) ஏனைய நாடு ஒன்றில் உற்பத்தி செய்யப்பட்டு கனடாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டு அந்நாட்டு கம்பனியின் பெயரால் விற்பனை செய்யப்படும் வாகனங்கள் (Imported Vechiles In Canada)

எதுவாகவிருந்தாலும் அதனை புதிதாக வாங்கி உபயோகிக்கும் ஒருவர் எதிர்கொள்ளும் நியாயமான பிரச்சனைகளை விசாரணை செய்து இதுவே இறுதியான தீர்வு!
என முன்வைத்து வாடிக்கையாளர்களுக்கு உதவும் ஒரு நிறுவனம் கனடா முழுவதும் இயங்கி சேவை வழங்கி வருகின்றது என்பதனை அறிந்து கொண்டீர்களா?

இவ்வாறு தீர்வு வழங்கும் இம் மத்தியஸ்தர் திட்டத்தினை இயக்கும் நிறுவனத்தின் ஒன்ராறியோ மாகாணத்தின் முகவரி ரொறொன்ரோவில் பின்வரும் முகவரியில் செயல்பட்டு வருகின்றது.

***CANADIAN MOTOR VECHICLE ARBITRATION PLAN (ONTARIO PROVINCIAL ADMINISTRATOR)***

***55, ST. Clair Ave . West,***
***Suite #255***
***Toronto, Ontario M4V 2Y7***
தொலைபேசி : ***1-800-207-0685***
அல்லது ***(416)-921-2686***
தொலைநகல் : ***(416)-967-6320***
இணையத்தளம் :
***www.camvap.ca***

இது கனடிய மத்திய, மகாண, நகரசபை அரசுகளின் சட்ட விதிகளின்படி அமைக்கப்பட்டு நடாத்தப்படும் ஒரு நியாயமன்றம்.

புதிதாக வாகனத்தினை வாங்கி உபயோகிக்கும் ஒரு வாடிக்கையாளர் விடயத்தில் தீர்ப்பு வழங்கினால் அது அப்பீல் பண்ண முடியாத தீர்வாகவே இருக்கும். வாகன கம்பனிகள் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும் என்பது நிபந்தனை ஆகும்.

இதுவரைகாலமும் பல வாகன கம்பனிகளோடு வாடிக்கையாளர்களுக்கு உள்ள பிரச்சனைகளுக்கு தீர்வினை வழங்கியுள்ளன. வாடிக்கையாளரின் பிரச்சனையில் நியாயம் இல்லையேல் இம்மத்தியஸ்தர் குழு வாடிக்கையாளரின் முறைப்பாட்டினை நிராகரித்தும் உள்ளனர்.

(a) வாகனத்தின் உதிரிபாகங்களை கொண்டு உருவமைப்பதில் ஏற்பட்ட தவறுகளினால் ஏற்படும் கோளாறுகள். (Manufacturing defecs)

(b) புதிய வாகனத்தின் உத்தரவாதம் தொடர்பான பிணக்குகள் (Warrenty Disbute)

இப்படி இந்த இரு விடயங்களிலும் பிரச்சனைகள் வாடிக்கையாளர் ஒருவருக்கு உருவானால் எழும்போது முதலில் வாகனம் வாங்கிய கம்பனியில் தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்ய வேண்டும். (Talk with Dealer first) அங்கும் சரியான தீர்வு கிடைக்காவிட்டால், இரண்டாவதாக

வாகன உற்பத்தியாளரின் வாடிக்கையாளர் உதவிப்பிரிவுக்கு (Manufacturer's Customer Assistance Center) இம்முறைப்பாட்டினை எடுத்துச் செல்லவேண்டும். அங்கும் தீர்வு இல்லையேல் இறுதியாக தீர்வு காணும் இடமே இந்நியாய மன்றம் ஆகும்.

தீர்வுகள் என்பது பின்வருமாறு அமையும்!
(1) வாகனத்தினை திருத்திக் கொடுத்தல் வேண்டும் என கம்பனியை நோக்கி உத்தரவு வழங்கலாம்.

(2) கால தாமதம் காரணமாக உரிமையாளர் வாகனத்தினை சொந்த பணம் கொடுத்து திருத்தியிருந்தால் அந்த பணம் முழுவதும் திருப்பி வழங்குதல் வேண்டும். (Reimburse Repair Expenses)

(3) மேலதிக செலவுகள் வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்டிருந்தால் அதனையும் திருப்பி வழங்குதல் வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கலாம்.

உதாரணமாக கட்டி இழுத்து கொண்டுபோன செலவுகள் (Towing charges), வாகனம் நின்றதால் ஏற்பட்ட ராக்ஸி, வாடகை கார் செலவுகள், வாகனம் தரித்து நின்ற செலவுகள் (Parking Storage Charge) மற்றும் கோளாறு எது என்பதனை கண்டறிந்த செலவு (Diagnostic Testing) என்ற செலவுகளை குறிப்பிடலாம். இதற்கு ஆகக்கூடுதலாக $500 டொலர் வரையே கிடைக்கும்.

(4) வாகனத்தினை கம்பனியே திருப்பி விலை கொடுத்து வாங்குமாறு கம்பனியினை நோக்கி தீர்ப்பும் வழங்கலாம். (Buy Back Order)

**வாகனம் எந்த தகைமைக்குள் இருந்தால் இவ்முறைப்பாட்டினை வாடிக்கையாளர் ஒருவர் முன் எடுத்து செல்லாம்?**

(1) கடந்த நான்கு வருடத்தினுள் உற்பத்தி செய்யப்பட்ட வாகனமாக இருத்தல் வேண்டும்.

(2) 1,60,000 கி.மீற்றருக்குள் உபயோகித்ததாக இருத்தல் வேண்டும்.

(3) கம்பனியினை அணுகி தீர்வு எதுவும் வழங்கப்படாத நிலையில் மேன்முறையீடு செய்யும் நிலையில் இருத்தல் வேண்டும்.

(4) ஏதாவது வர்த்தக நோக்கத்திற்கு வாகனம் உபயோகித்து இருத்தல் கூடாது.

**முக்கிய தகவல்**
கம்பனி வழங்கிய உத்தரவாதத்திற்கு மேலால் 2005 மற்றும் 2006 இல் உற்பத்தி செய்யப்பட்ட "ரொயோற்கு" (Toyota) கம்பனி வாகனங்கள் ஏதோ உற்பத்தியாளரின் குறைபாட்டினால் சில வாகனங்களுக்கு கோளாறுகள் ஏற்படுகின்றது எனவும், இவை இத்தகைய கோளாறுகள் ஏற்பட்டு அது 1,60,000 கி.மீற்றருக்குள் உள்ளே இருந்தால் கம்பனியின் செலவில் திருத்தி வழங்கப்படுகின்றது என அண்மையில் கனடிய ஆங்கில தொலைகாட்சி பிரிவு ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

கடந்த மாதம் (ஜனவரி 2010) இறுதியில் கனடாவில் சகல செய்தி தொடர்பு சாதனங்களில் மீண்டும் இத்தகைய செய்தியினை சற்று அழுத்தமாக தெரிவித்திருந்தனர். அதாவது ரொயற்றா கம்பனியின் உற்பத்தி வாகனங்களில் "வேக மிதி பெடல்" (Accelerator Pedals) பொருத்தப்பட்டது தவறு எனவும், உலகம் முழுவதும் விற்பனை செய்யப்பட்ட இக்கம்பனியின் சில வாகனங்களை திருப்பி எடுத்து அதனை தங்கள் செலவில் திருத்திக் கொடுப்பதாகவும் செய்தியாக வெளியிட்டிருந்தது. 2007 ஆம் ஆண்டுக்கு பின்னர் உருவமைக்கப் பட்ட சில வாகனங்களையே எச்சரிக்கையாக குறிப்பிடப்பட்டிருந்தன.

**தங்கள் வாகனம் திருப்பி வாங்க வேண்டும் என உத்தரவு வழங்கப்பட்டதா?**
(check for Camvap buybacks)

ஜனவரி/01/1999க்கு பின்னர் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வந்து தங்களின் உபயோகத்தில் இருக்கும் ஒவ்வொரு வாகனமும் சில நேரங்களில் கம்பனியின் உற்பத்தி தவறு காரணமாக சிலநேரங்களில் திருப்பி வாங்கியே தீரவேண்டும் என உத்தரவு இந் நிறுவனத்தினால் வழங்கப்பட்டதாக இருக்கலாம். அப்படி இருக்குமா? என்ற சந்தேகம். ஏற்படுமாக இருந்தால் அதனை தாங்கள் இலகுவாக வீட்டில் இருந்தபடியே பரிசீலனை செய்து பார்க்கலாம்.

www.campvap.ca/eng/vinsearch.html என்னும் இணையத்தளத்திற்கு செல்லுங்கள்.

அங்கு தங்கள் வாகன உரிமை பத்திரத்தில் (Vehicle Ownership Document) அல்லது வாகனத்தில் முன் கண்ணாடியில் உள்பக்கமாக உள்ள பாதையில் குறிப்பிட்டுள்ள பதினேழு இலக்கம், கொண்ட உள்ள வாகன அடையாள இலக்கத்தினை (Vehicle Identification Number) பதிவு செய்து பரிசீலனை செய்து பாருங்கள்.

தங்கள் வாகனம் கம்பனியினால் திருப்பி தங்களுக்கு பணம் தந்து வாங்கவேண்டிய வாகனம் என உத்தரவு வழங்கப்பட்டதா? அல்லது இல்லையா? என தெளிவாகக் காட்டும்.

உத்தரவு வழங்கப்பட்டதாக இருந்தால் நேரடியாக கம்பனிக்கு எடுத்து சென்று அவர்களோடு பரிசீலனை செய்து பார்த்து அடுத்தகட்ட நடவடிக்கைக்கு செல்லுங்கள். திருத்தவேலைகள் இருந்தாலும் கம்பனியின் செலவில் திருத்தி கொள்ளலாம்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# பலிக்காத காதலே ஜொலிக்கின்ற காதல்

அன்பெனும் சொல்லுக்கு மாற்றாக பாசம், நேசம், பரிவு, பிரியம், சினேகம், நட்பு, பற்று, காதல், போன்ற சொற்களை நாம் கையாள்கின்றோம். அன்பின் மேலானதோர் நிலையை காதல் என்று கொள்ளலாம். பருவவயதுடைய ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஊற்றெடுக்கும் உணர்ச்சியை மட்டுமே சொல்வது காதல் இல்லை. "காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி" என்று அடியார் கூட்டம் இறைவனைப் பாடியதுண்டு. "பொய் படாக் காதல் ததும்பி மேற்பொங்கிற்று என்பது திருவருட்பா. தசரதன் மனைவி, இலக்குவன் தயார் சுமத்திரை "மா காதல் இராமன் அம்மன்னன் சென்று குறிப்பிடுவாள். தாயன்பு, உற்றார் அன்பு, ஊரவர் அன்பு, உலகத்தவர் அன்பு, உற்ற நண்பர் அன்பு, உமைபங்கன் அன்பு என விரிவடையும்.

காதல் என்பது ஆண் பெண் இருபாலாருக்கும் இடையில் தோன்றும் அன்பின் பெருக்கு என்று பின்னர் கொள்ளப்பட்டது. கிட்டத்தட்ட காமம் என்ற சொல்லும் இந்தப் பொருளில் கையாளப்பட்டதுண்டு. "கற்பகத்தின் பூங்கொம்போ காமன் தன் பெருவாழ்வோ" என்கிறார் சேக்கிழார். கள்ளினும் காமம் இனிது என்பது திருக்குறள். ஆண் பெண் உறவின், அன்பின் உச்சநிலையை குறிக்க சங்க காலத்தில் இருந்தே காதல் எனும் சொல் கையாளப்பட்டு வந்திருக்கின்றது. காதற் கிழத்தி, களவுக்கிழத்தி, காமக்கிழத்தி என்றெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளது. "யாரைவிடவும் உன்மீது காதலுடையவன் நான்" என்று காதலன் காதலியிடம் கூறியபோது யாரைவிட என்று கொண்டு துளைத்து துளைத்து கேட்கின்றாள்.

**யாரினும் காதலம் என்றோனா ஊடினாள்**
**யாரினும் யாரினும் என்று என்பது திருக்குறள்**

காதல் எனும் சொல் ஆண், பெண் இருவரினதும் பரிபூரண அன்பு நிலையைத்தான் பேசி வந்திருக்கின்றது. கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் ஜானகியை மணச் சிறையில் கரந்த காதல் - என்று

இராவணனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளான் கம்பன். காதல் அன்பு மயமான ஆண் பெண் உறவின் நிலை என்பதற்கு உலக இலக்கியங்களின், இதிகாசங்களின் ஏராள-மான எடுத்துக்காட்டுக்கள் உண்டு. ரோமியோ யூலியற், கயல் லைலா, சலீம் அனார்க்கலி, அம்பிகாவதி அமராவதி, ஆண்டனி கிளியேஹபத்தரா இதற்கு உதாரணங்களாகும். இலக்கிய, இதிகாச காதல் பெரும்பாலும் நிறைவேறாத காதலாக துன்பம் தழுவிய காதலாக முடிவடைந்திருக்கின்றது. உண்மைக் காதலுக்கு தோல்வியும் கிடையாது. கடிமணம் செய்வதும் சாத்தியமில்லாமால் போகலாம். கடிமணம் தோற்றுப்போன காதல் காலம் காலமாக நிலைத்து நின்றும் இருக்கின்றது.

காட்டிக் கொடுக்கப்பட்டவர், தூக்கு மேடை ஏறியவர், கொலைக்களப்பட்டவர், துரோகத்தில் நஞ்சுண்டு இறந்தவர், சந்தேகக் கத்தியால் குத்தப்பட்டவர் என நீண்ட துன்பியல் அத்தியாயங்கள் கொண்டது காதலின் வரலாறு. எனினும் சகல சீவராசிகளையும் ஆட்டிவைக்கும் ஆற்றலுடையது காதல். அன்றில் பறவைகளின் கதை நமக்குத் தெரியும். தண்ணீர் வறண்டுபோன கோடை காலத்தில் தண்ணீருக்காகத் தவித்து தேடி, ஓடி களைத்து உயிர் பிரியும் நிலையிலும் ஆண் மானும் பெண் மானும் சிறியதொரு குட்டையில் மிகக் கொஞ்சமாக நீர் கண்டு ஒன்று பருகினால் மற்றதற்கு இருக்காது எனும் கருத்தில் இரண்டும் நீர் பருகுவதாக பாவனை செய்யும் சங்ககால சித்திரம் ஒன்றுண்டு. இணை இறந்து போக கண்ட பெண் பறவை உணவு உட்கொள்ளாமல் இறந்து போனது பற்றிய தகவலும் உண்டு. இவை காதலுக்கு சிறந்த உதாரணங்களாகக் கொள்ளலாம்.

காதலுக்கு இன, மத, மொழி, சாதி, வயது, பொருளாதார வேறுபாடுகள் கிடையாது என்பர்.

**கண்ணோடு கண்இணைகவ்வி ஒன்றை ஒன்று**
**உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள்**

என்பது கம்பனது வரிகள். தென்னானுடைய சிவன் உடலின் இடப்பாகத்தில் உமையைக் கொண்டிருப்பதும், நெடுமால் நெஞ்சில் திருமகளைக் கொண்டிருப்பதும், நான்முகன் நாக்கில் கலைமகளைக் கொண்டிருப்பதும் தமது காதற் கிழத்தியரை வைத்திருக்கும் சிறப்பை உணர்த்துகின்றது.

**பாகத்தில் ஒருவன் வைத்தான்**
**பங்கயத்து இருந்த பொன்னை**
**ஆகத்தில் ஒருவன் வைத்தான்**
**அந்தணன் நாவில் வைத்தான்**

காதல் மனையாட்டிகளைப் பெறுவது பெரும்பேறு என்பதனை பின்வரும் கம்பன் பாடல் கவிநுரக் காட்டுகின்றது.

**இந்திரன் சசியைப் பெற்றான்**
**இருமூன்று வதனத்தான் தன்**
**தந்தையும் உமையைப் பெற்றான்**
**தாமரைச் செங்கணானும்**
**செந்திரு மகளைப் பெற்றான்**

காதல் என்பது பெரும்பேறு. அது உயிரின் மீட்சி என்றும் இகவாழ்வின் ஈடற்ற இன்பம் என்றும் கருதினார்கள். அது அற்புதமான ஆழ்மன வெளிப்பாடு.

**காதல் காதல் காதல்**
**காதல் போயிற் காதல் போயிற்**
**சாதல் சாதல் சாதல்**

என்று வெளிப்படையாக பாடினான் பாரதி. காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம் என்றாள் ஔவை. காதல் கசக்குமா அல்லது இனிக்குமா? என்ற சினிமா பாடலும் நினைவு கொள்ளத்தக்கது. காதலின் வலுவை பின்வருமாறு காட்டுகிறார் பாரதிதாசன்

**கண்ணணின் கடைப் பார்வை**
**காதலியர் காட்டிவிட்டால்**
**மண்ணில் குமரர்க்கு**
**மாமலையும் ஓர் கடுகாம்**

காதலினால் கிடைக்கும் பலன்களைப் பட்டியல் இட்டு காட்டுகின்றான் பாரதி.

**காதலினால் மானிடர்க்கு**
**கலவி உண்டாம்**
**கலவியினால் மானிடர்க்கு**
**கவலை தீரும்**
**காதலினால் மானிடர்க்கு**
**கவிதை உண்டாம்**
**கானம் உண்டாம்**
**சிற்பம் முதற் கலைகள் உண்டாம்**
**காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்**



இருந்தும் வீட்டினர் காதலை விருப்புடன் ஏற்பதில்லை. ஆமோதிப்பதில்லை. சினிமாவில் சீரியலில் காதலைக் கண்டு ரசிப்பவர்கள் நிஜத்தில் காதலை நிர்மூலமாக்கவே விரும்புகின்றனர். காதலின் மேன்மை, உயர்வு, இறவாமை, இன்பம் பற்றி யாருக்கும் எந்த ஐயமும் இல்லாத போதிலும் உள்வீட்டிலும் காதல் என்றால் உறுமுகின்றார்கள்.

**நாடகத்தில் காவியத்தில் காதல் என்றால்**
**நாட்டினார் தாம் வியப்பெய்தி நன்றாம் என்பார்**
**ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே**
**ஊரினிலே காதல் என்றால் உறுமுகின்றார்**
**பாடைக் காட்டி அதைக்கொல்ல வழிசெய்கின்றார்**

என்பது பாரதியாரின் ஆதங்கம். வலிகொடுக்கும் ஒரு பெண்ணால் வருவதுதான் வாஞ்சை என்றாலும் அந்த வலி வாழ்க்கையுடன் வரவேற்கக் கூடிய ஒன்றாகவும் இருக்கவேண்டும் என்பது அவசியமாகும். சட்டரீதியான வயதுவராத யோசித்து சுதந்திரமாக முடிவெடுக்கும் பக்குவம் அற்ற உடல் சார்ந்த இனக்கவர்ச்சிக்கு ஆட்பட்ட இவ்வகை நவீன வகைக் காதல் நம்மை கவலை கொள்ள வைக்கின்றது என்றே கூறவேண்டும்.

மிகவும் வசதி படைத்தவர்கள், கை நிறைய சம்பளம் வாங்குபவர்கள், வாகன வசதி கொண்டவர்கள், செலவு செய்யும் மனநிலை வாய்ந்தவர்கள், காதலர்களாக இருப்பவர்கள் தமக்குள் வாழ்த்துச் சொல்லவும்



**நா. க. சிவராமலிங்கம்**

தொடர்ச்சி 24ஆம் பக்கம்


# S.T Income Tax Services

**Personal | Business | Small and Large Corporation | Truck Drivers | Rental Income Tax Returns | GST, PST Returns | Business Registration |**

***Registered E-Filer***

***Over 17 years Canadian Experience***

Please contact us before you file your return



தனிப்பட்ட அல்லது வியாபாரத்துக்குரிய வரிக்கணக்கை சரியான முறையில் சட்டவிதிகளுக்கமைய பூர்த்தி செய்து மிகக் கூடிய (Refund) மீளப்பணத்தை பெற்றுக்கொள்ள 17 வருடங்கள் கனேடிய அனுபவமுள்ள என்னைத் தொடர்பு கொள்ளுங்கள். E - File செய்வதன் மூலம் 14 நாட்களுக்குள் Refund ஐப்பெற்றுக் கொள்ளலாம்.

**Theva**

**Tax Return** from **$20**

***Tel:*** (416) 671 3789
***Fax:*** (905) 828 6002 ***Email:*** theva57@sympatico.ca


**Scarborough:** G.T.A Square, 5215 Finch Ave. E. (Middlefield/ Finch Ave E)
**Etobicoke:** 900 Albion Road (Albion/Islington)
**Mississauga:** 3206 Respond Road (Winston Churchill/Eglinton West)

AUTHORIZED IRS e-file PROVIDER

# ஆதனத்தின்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

இவ்வாறே, இப்பொழுதும் ஆதன எதிர் கூறுபவர்கள், வீட்டின் விலையில் உடனடி இறக்கம் ஏற்படாது என கூறுவதையும் காணக்கூடியதாக உள்ளது.



வியாழன் மார்ச் 04, 2010 ஆம் திகதி கனடிய மத்திய நிதி அமைச்சர் ஜிம் பிளெய்றிரி (Jim Flaherty) - 2010 / 2011 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு அறிக்கையை (Budget) கொண்டுவர இருக்கின்றார். இந்த அறிக்கையில் அடமானக்கடனை பெறுவதில் மேலதிக இறுக்கத்தை கொண்டுவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. 5% முதலீட்டை 10% ஆக அதிகரித்தல் அல்லது 35 வருடத்தில் திருப்பி செலுத்தப்படும் வீட்டிற்கு எதிரான கடனை 30 வருடமாக குறைத்தல் போன்ற மாற்றங்கள் வரலாம் என எதிர்பார்க்கின்றது அல்லது மாறுகின்ற அடமானக் கடனைப் பெறுபவர்களுக்கு (Variable Mortgage) புதிய கட்டுப்பாடுகளை கொண்டு வரலாம். நிதி அமைச்சர் ஜிம் பிளெய்றிரி அல்லது மத்திய வங்கி ஆளுனர் மார்க் கார்னி போன்றவர்கள் எதுவித சமிக்கைகளையும் இதுவரை காட்டவில்லை.

ஆயினும், வீட்டின் விலை அதிகரிப்பு 2010ஆம் ஆண்டின் இறுதி அரை ஆண்டில், ஒப்பீட்டளவில் இறக்கம் அல்லது மந்த நிலை ஏற்படலாம் என எதிர்பார்க்கலாம். அனேகமான பொருளாதார ஆய்வாளர்கள் ஒருமித்தே உள்ளார்கள். இதற்கு முக்கியமாக வட்டிவீத அதிகரிப்பு HST ஐ காரணமாகக் கொள்ளலாம்.

# கனடாவின் சொந்த...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் எதிரான முதல் ஒருநாள் போட்டியில் ஆவுஸ்திரேலிய அணி 113 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. ஆஸ்திரேலியா சென்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடரில் பங்கேற்று வருகிறது. முதல் ஒருநாள் போட்டி நேற்று மெல்பேனில் நடந்தது. மேற்கிந்திய அணி தலைவர் கிறிஸ் கெய்ல் முதலில் பந்து வீச்சினை தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பாட்டம் செய்த ஆஸ்திரேலிய அணி 50 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 256 ஓட்டங்களை எடுத்தனர். போலார்டு 3 விக்கெட் வீழ்த்தினார். எட்டிவிடும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு வீரர்கள் வரிசையாக ஆட்டமிழப்புச் செய்யப்பட வெஸ்ட் இண்டீஸ் அணி 34.2 ஓவரில் 143 ஓட்டங்களுக்கு வீரர்கள் முழுவதும் ஆட்டமிழக்க தோல்வியடைந்தது.

ஆட்டநாயகனாக ஆஸ்திரேலிய சேன் வொட்சன் தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் 1க்கு0 என அவுஸ்திரேலிய அணி முன்னிலை வகிக்கிறது. இரு அணிகள் இடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி நாளை அடிலெய்டில் நடக்கிறது.

பந்தை சேதப்படுத்துவது தவறா? - கிரிக்கெட் அரங்கில் பந்தை சேதப்படுத்துவது தொடர்கிறது. கிரிக்கெட் வீரர்கள் பலர் அடிக்கடி இப்பிரச்சினையில் மாட்டிக் கொள்கின்றனர். எதிரணி பேட்ஸ்மேன்களின் விக்கெட்டை கைப்பற்ற, பந்து வீசும் அணியின் வீரர்கள் பந்தை சேதப்படுத்துகின்றனர். தலை முடிக்கு பயன்படுத்தும் ஜெல், ஜெல்லி வகை மிட்டாய்கள் உள்ளிட்டவற்றை, பந்தின் மீது தடவுதல், பிளேட் மற்றும் கூரிய கருவிகளால் பந்தை சுரண்டுதல், பந்தை வாயினால் கடித்தல் போன்ற செயல்கள் சேதப்படுத்துதல் குற்றமாக கருதப்படுகிறது.

பெரும் தவறு - இவ்வாறு பந்தை சேதப்படுத்துதல் குற்றமாகும். சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வகுத்துள்ள கிரிக்கெட் விதிகளின் படி (விதி 42, பிரிவு 3) இதற்கு பல வகை தண்டனைகள் உள்ளன. பந்து சேதப்படுத்தப்பட்ட அளவின் படி, மைதானத்தில் உள்ள அம்பயர்கள் உடனடி தீர்ப்பு வழங்குவர். ஒரு வீரர் பந்தை சேதப்படுத்திவிட்டால், எதிரணிக்கு 5 ரன்கள் வழங்கப்படும். இச்சம்பவம் கடந்த 2006 ஆம் ஆண்டு இங்கிலாந்து-பாகிஸ்தான் மோதிய போட்டியில் அரங்கேறியது. அம்பயர்களின் முடிவை ஏற்க மறுத்த பாகிஸ்தான் வீரர்கள் போட்டியை தொடர மறுத்து விட்டனர். இதனால் இப்போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அபராதம் - ஒரு போட்டியில் அடிக்கடி ஒரு வீரர் பந்தை சேதப்படுத்திக் கொண்டிருந்தால், பவுலிங் செய்வதற்கு அவருக்கு தடை விதிக்கப்படவும் வாய்ப்பு உள்ளது. அதற்குப் பின் இவ்வகை குற்றத்துக்கான தண்டனை அதிகப்படுத்தப்பட்டது. அதிக அளவில் அபராதம் விதிக்கப்பட்டது. கடந்த 1994 ம் ஆண்டு தென் ஆப்ரிக்காவுக்கு எதிராக லார்ட்சில் நடந்த போட்டியில், இங்கிலாந்து கேப்டன் மைக்கேல் ஆதர்டன் பந்தை சேதப்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு ரூ. ஒரு லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. தற்போது "டிவி", கேமரா உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் கிரிக்கெட்டில் அதிக பயன்பாட்டில் உள்ளன. இதனால் பந்தை சேதப்படுத்துவோர் எளிதில் கண்டுபிடிக்கப்பட்டு விடுகின்றனர்.

போட்டி தடை பெரும்பாலும் அனைத்து அணி-களைச் சேர்ந்த வீரர்களும் பந்தை சேதப்படுத்திய குற்றத்துக்கு உள்ளாகி உள்ளனர். கிரிக்கெட்டில் பல்வேறு சாதனை-களை படைத்துள்ள இந்திய மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சினும், பந்தை சேதப்படுத்தி உள்ளார் என்றால் நம்ப முடிகிறதா? கடந்த 2001 ம் ஆண்டு தென் ஆப்ரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், சச்சின் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டு ஒரு போட்டி தடை விதிக்கப்பட்டது. 2004 ம் ஆண்டு இவ்வகை குற்றத்துக்காக மற்றொரு இந்திய வீரர் ராகுல் டிராவிட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

பாக்., ஆதிக்கம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர்கள் தான், அதிக அளவில் பந்தை சேதப்படுத்திய குற்றத்துக்கு உள்ளாகி உள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. கிரிக்கெட் அரங்கில் இதற்காக முதன் முதலில் தடையை எதிர்கொண்ட வீரர், பாகிஸ்தானின் வக்கார் யூனிஸ் தான். கடந்த 2000 ல் ஒரு போட்டியில் பங்கேற்க இவருக்கு தடை விதிக்கப்பட்டது. சமீபத்தில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில், பாகிஸ்தான் வீரர் அப்ரிதி பந்தை கடித்து சேதப்படுத்தினார். இவர் மீதுள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டு 2 சர்வதேச போட்டிகள் தடையை எதிர்கொண்டுள்ளார்.

"ரிவர்ஸ் ஸ்விங்" காரணம்: பல்வேறு தண்டனைகள், வழங்கப்பட்டு வரும் நிலையிலும், கிரிக்கெட் அரங்கில் பந்தை சேதப்படுத்துதல் தொடர்கிறது. இதற்கு பந்தை "ரிவர்ஸ் ஸ்விங்" செய்ய வேண்டும் என்பதே முக்கிய நோக்கம். இது பாரம்பரியமிக்க கிரிக்கெட் போட்டிகளுக்கு ஒரு களங்கமாக அமைந்து உள்ளன. தடை மற்றும் அபராதத்தை அதிகப்படுத்தும் பட்சத்தில், இச்சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமல் கட்டுப்படுத்த முடியும்.

# மரபுக் கவிதை

08ஆம் பக்கத்தொடர்ச்சி

தோன்றுகிறது அல்லவா? தொடர்ந்து படிக்கத் தூண்டுகிறது அல்லவா?

இவள் தொன்றுதொட்டே வந்த வீரர் குலத்திலே தோன்றியவள் என்று சொல்லத் தகுந்தவள்தான். முன்பு நடந்த போரிலே இவளது தமையன் பகைவரின் யானையைக் கொன்று தானும் மடிந்தான். நேற்று நடந்த போரிலே இவளது கணவன் தனது நாட்டுப் பசுக்கூட்டத்தை காப்பாற்றும் கடமையில் தனது உயிரைப் பறிகொடுத்தான். இன்றும் போர்ப்பறை கேட்கின்றது. அது கேட்டு மயங்கி, தனது பங்களிப்பை நாட்டுக்குச் செய்ய வேண்டும் என்று விரும்பி, சிறுவனாகிய தனது மகனை அழைத்து, தலையை வாரி, வெள்ளை ஆடையை உடுத்து, கையில் வேலைக் கொடுத்து, போர்க்களம் சென்று போராடு என்று அனுப்பி வைத்தாள்.

கவிதையின் உச்சமான செய்தி என்னவென்றால் இவளுக்கு வேறு பிள்ளைகள் எவரும் இல்லை என்பதுதான். அதனை 'ஒரு மகன் அல்லது இல்லோள்' என்று இறுதியாகப் புலவர் சொல்லும்பொழுது, கெடுக சிந்தை என்று அவர் தொடங்கிய சொற்களின் பொருள் நன்கு விளங்குகின்றது. கணவனும் இறந்துவிட்டமையால் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் அவளுக்கு இல்லை. மறவர் குலத்துப் பெண்கள் இரண்டாம் கலியாணத்தை விரும்புவது மில்லை.

இவ்விதம் இந்தக் கவிதையின் சிறப்புகள் சொல்லிமுடியா.

கவிதை எழுதும்பொழுது எடுத்துக்கொண்ட பொருள் சமூகத்துக்கு எந்த அளவுக்குப் பயன்படும் என்பதுபற்றியும் கவிஞர்கள் சிந்திக்க வேண்டும்.

ஊருக்கு நல்லது சொல்வேன் - எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன்

என்று பாரதியார் பாடுகின்றபொழுது சமுதாயத்துக்குப் பயன்படத்தக்க கவிதைகளையே பாடவேண்டும் என்ற கருத்தை அவர் வலியுறுத்தி நிற்பதைப் பார்க்கிறோம். சமூக சீர்திருத்தம், சமூக முன்னேற்றம், சமூகப்பண்பாடு மற்றும் விழுமியங்களைப் பேணுதல் போன்றவற்றுக்கு உதவும் வகையில் கவிதைகள் அமைதல் வேண்டும். அத்துடன் கவிதைகள் மக்களுக்கு விளங்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

தமிழுக்கு ஓசைத்தமிழ் என்று ஒரு பெயர் உண்டு. இந்தப் பெயரைத் தமிழுக்கு வழங்கியவர் புலவர்கள்தாம். மரபுக் கவிதை யில் எதுகை மோனைகள் முக்கியமானவை. அவை மட்டுமன்றி வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூவகை எழுத்துக்களையும் சுவைகளுக்கு ஏற்பப் பயன்படுத்திப் பொருளுக்கு அழுத்தம் கொடுப்பது சிறந்த புலவர்களது மரபாகும்.

காட்சிகளையும் அவைக்கேற்ற சொற்களைக் கொண்டு சித்திரிக்கலாம். கம்பராமா யணத்தில் யுத்தகாண்டத்தில் வல்லின எழுத்துக்களைப் பயன்படுத்திப் போர்க் காட்சிகளைக் கம்பர் விவரிக்கும் திறத்தால், எப்பொழுதோ நடந்த போர் கண்முன்னே நடப்பது போன்ற உணர்வு தோன்றும்.

நல்ல மரபுக் கவிஞராக வரவிரும்புகின்றவர் செய்யுள் இலக்கணத்தைக் கற்றல் வேண்டும். கவிதை பாடாதுபோனாலும் சங்க இலக்கியங்கள் மற்றும் கம்பராமாயணம், வில்லிபாரதம், திருவாசகம், திருத்தொண்டர் புராணம், நளவெண்பா போன்ற சிறந்த செய்யுள் நூல்களைச் சுவைக்கும் தகுதியையாவது நீங்கள் பெறுவீர்கள்.

இத்தகுதி பெற்றவர்கள்தாம் கற்றறிந்த தமிழர் என்ற பெயருக்கு உரியவர்கள்.

நீங்கள் கற்கின்ற கல்வி உங்களைத் தகுதிவாய்ந்த தமிழர்களாக ஆக்க வேண்டும் என்று வாழ்த்தி அமைகின்றேன். வணக்கம்.

# வயிற்றுப்புண்ணும்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

சேர்த்துக் கொள்ள வேண்டும். வேர்க்கொம்பு (சுக்கு)த்தூள் மிளகும் சேர்ந்த குடிநீர் இடையிடையே பாவிப்பதினால் மலச்சிக்கல் ஏற்படாது பாதுகாக்க முடியும். அருள்நெல்லிச்சாறு அல்லது நெல்லிரசம் பாவிக்கலாம்.



மேலும் இங்கு பெறக்கூடிய மூலிகை வர்க்கத்தைச் சேர்ந்த வில்வை, வேம்பு, மணத்தக்காளி போன்றவற்றில் எதாவது ஒன்றை எடுத்து சாறு பெற்று ஒரு மேசைக்கரண்டி காலை மாலை பாவித்து வருவதினால் அவியல் புண் குடலில் இருந்து தணிவடைய உதவும். பழங்களில் மாதுளம்பழம், தோடம்பழம் போன்றவற்றை எடுப்பதினால் நன்மை பயக்கும். இருந்தும் தங்கள் வைத்தியரிடம் சென்று குடலில் ஏற்பட்டிருக்கும் புண் நிலையை நன்கு பரீட்சித்து வருவதினால் தாக்க நிலை கண்டு அதற்கேற்ப சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும். சிலவேளை அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய நிலை வரலாம் அல்லது புற்று நோயாகவும் ஏற்படலாம். எனவே, எதற்கும் தங்கள் வைத்தியரிடம் சென்று பரீட்சிப்பதினால் நற்பயன் உண்டு.

# MARKHAM WARD COUNCILLOR

## WARD NO 8

# JOSEPH (MOHAN) REMISIAR

20 வருடங்களுக்கு மேலாக
மார்க்கம் நகரில் வசிக்கும்
"சஹானா" மோகன்
ஆகிய நான் எனது பகுதி
மக்களுக்கு சேவை
செய்யவேண்டும் என்ற
விருப்பத்துடன் உங்கள்
முன் வந்துள்ளேன்.

எனக்கு ஆதரவு தருமாறு
அன்புடன் கேட்கின்றேன்.
யோசவ் (மோகன்) றெமிசியார்



**மார்க்கம் நகரசபை உறுப்பினருக்கான
உங்கள் வாக்குகளை
யோசவ் (மோகன்) றெமிசியார்
ஆகிய எனக்கு வழங்குவதன் மூலம்
8ம் வட்டாரத்தின் உங்கள் பிரதிநிதியாக
தேர்ந்தெடுக்குமாறு அன்புடன்
கேட்டுக்கொள்கின்றேன்.**

**Tel: 416-528-0372
905-415-8508
905-944-1229**

# முட்டம் - கடலோரக்கவிதை



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 72

அழகிய இயற்கை எழில் நிறைந்த சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும்போது, மனம் இலகுவாகும், உற்சாகம் பிறக்கும், சில நேரங்களில் அந்த உற்சாகம் நம்மை நிலை மறக்கவும் செய்யும், மனம் இளகிப் பறக்கும். அப்படி, நம்மை காற்றினில் அலையும் கீதமாக பறக்கச் செய்யும் ஒரு அழகிய கடற்கரை கிராமம், முட்டம். அலை புரளும் கடலும், பாைறகள் நிறைந்த கடற்கரையும், வெண்ணுரை பொலிய அலைநீராடும் கடற்பாறைகளும், மேடு பள்ளமான நிலப்பரப்பும், எப்பொழுதும் ஓயாத அலைகளின் சத்தமும், செம்மண் அகளிகளுமாக முட்டத்தின் இயற்கை எழிலுக்கு அளவேயில்லை.

கன்னியாகுமரியை தவிர்த்தால் குமரி மாவட்டத்தில் பெயர்போன ஒரு கடலோர கிராமம், முட்டம். இந்தியாவுக்குள் இருந்தும் பல்வேறு நாடுகளில் இருந்தும் கன்னியாகுமரி வரும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது முட்டம். அவ்வளவு பிரசித்தமான ஊர், மிகப் பெரியதாக இருக்கும் என நினைத்துக்கொண்டு சென்றால், ஏமாந்துவிடுவீர்கள். முட்டம், கிட்டத்தட்ட ஒரு குன்று தான். அதுதான் அதன் தனித்துவத்துக்கு காரணமும்கூட. கடலை இருபக்கங்களிலும் உள்விட்டு நிலம் முட்டிக் கொண்டிருக்கும். அலைகள் கரைகளை தினம் தினம் மாற்றியமைத்துக் கொண்டிருக்கும். நிலமெங்கும் கரையெங்கும் பாறைகள். தவளைபோல் ஒன்று, பூமியில் விழுந்து உறைந்துபோன விண் தட்டு போல ஒன்று, குகை அமைப்பில் இன்னொன்று என்று வகை வகையாய் பாறைகள். முட்டத்தின் அழகே அதன் பாறைகள் நிறைந்த சமச்சீரற்ற நிலப்பரப்புதான். நாய்குட்டிகள் செல்லமாய் கடித்து விளையாடுவதுபோல அலைகள் பாைறகளை அடித்து விளையாடுவதும், கடற்கரையின் நண்டு ரேகைகள் படர்ந்த மென்மணல் பரப்புகளும் கொள்ளை அழகு. அடடா என்ன ஒரு அருமையான பகுதி என அப்படியே அமைதியாக நேரம் போவது தெரியாமல் மணற்பரப்பில் அமர்ந்துவிடுவீர்கள்.

வழிப்போக்கன்

நீங்கள் தமிழ் திரைப்படங்கள் பார்ப்பவராக இருந்தால், நிச்சயம் முட்டம் உங்களுக்கு ஏற்கெனவே அறிமுகமாகி இருக்கலாம். ஏனெனில், கடந்த இருபது வருடங்கள் அத்தனை தமிழ் படங்கள் முட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கிராமத்தின் அழகியலை பல தமிழ் திரைப்படங்கள் படம் பிடித்திருந்தாலும் அனைவருக்கும் முதலில் அறிமுகப்படுத்தியது இயக்குநர் பாரதிராஜாதான். 20 வருடங்களுக்கு முன்பே முட்டத்தின் அழகை பாரதிராஜா படமாக்கினார். அலைகள் ஓய்வதில்லை தான் முதல் படம். தொடர்ந்து, கடலோரக் கவிதைகள், கடல்பூக்கள், பகல் நிலவு, தாய்மேல் ஆணை, அம்மன்கோயில் கிழக்காலே, உயிரே உனக்காக, நிலாவே வா, பாடு நிலாவே, நான் பாடும் பாடல், ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, மஞ்சள் நிலா, சின்ன மேடம் எனப் பல படங்கள் முட்டத்தில் படமாக்கப்பட்டுள்ளன. இவ்வளவு படங்கள் எடுக்கப்பட்டிருந்தாலும், முட்டத்து மக்களுக்கு கடலோரக் கவிதைகளே செல்லம். அதையே ஊரின் அடையாளமாகவும் சொல்கிறார்கள். முட்டத்தில் இருந்து தூரத்தில் சென்றால், எந்த ஊர் என கேட்பவர்களுக்கு, கடலோரக் கவிதைகள் முட்டம் என்றுதான் கூறுகிறார்கள்.

முட்டத்தின் அழகியலில் அதன் செம்மண் காடுகளும் அடக்கம். இரத்தச் சிவப்பில் மண்மேடுகள். அகளிபோல பள்ளங்கள். மழை நாட்களில் இங்கு ஓடும் வெள்ளம் கடலை சிவப்பாக்கும் என்கிறார்கள். முட்டத்தில் உள்ளவர்களுக்கு மீன் பிடிப்பு தான் தொழில். முட்டத்தில் அனைவரது வீடும் கடல் ஓரமே இருக்கிறது. இத்தனைக்கும் இங்கு சுனாமி வந்து சென்றுள்ளது. ஒரு சுனாமி நினைவு ஸ்தூபியும் உள்ளது.

கிட்டத்தட்ட நூறு வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கத்தோலிக்க ஆலயம் ஒன்றும் முட்டத்தில் உள்ளது. இது சகல புனிதர்கள் கோவில். நவம்பர் மாதம் ஒன்றாம் தேதி சகல புனிதர்களையும் கத்தோலிக்க திருச்சபை நினைவு கொள்கிறது. அன்றுதான் முட்டம் கோவில் திருவிழா நடைபெறும். முதல் நாள் கொடியேற்றம் துவங்கி கடைசி நாள் கொடியிறக்கம் வரைக்கும் பத்து நாட்கள் முட்டத்துக்கு திருநாள் கொண்டாட்டம் தான். இந்தத் திருநாட்களின் போது ஊர் முழுக்க தோரணம் கட்டி மின்விளக்குகளும் தொடர் மின் விளக்குகளுமாக ஊரே ஜொலிக்கும். மிட்டாய்க் கடைகளும் ராட்டினங்களும் பலூன் காரர்களுமாக கோலாகலிக்கும் ஊர். முட்டம் கோவில் மேட்டில் இருக்கிறது என்பதால் அதன் திருவிழா ஒளி அலங்காரம் கன்னியாகுமரி மாவட்டத்தின் பல கடற்கரை கிராமங்களில் காணக் கிடைக்குமாம். ஒன்பதாம் நாள் மாலை ஒரு சிறப்பு வழிபாடும், பத்தாம் நாள் காலை ஒரு சிறப்பு திருவழிபாடும் நடக்கும். பெரிதாய் நடக்கும் திருநாட்களுக்கு ஆயர் வருவது வழக்கம். திருவிழா நாட்களில் சப்பரம் தூக்குவதும் வழக்கம்.

பழமையான கலங்கரை விளக்கம் ஒன்றும் முட்டத்தில் உள்ளது. முட்டம் மேடானதால் கடலை கீழ்நோக்கிப் பார்க்கும் அபூர்வக் காட்சி இந்த கலங்கரை விளக்கத்தில் ஏறி பார்க்கும்போது கிடைக்கிறது. ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட இந்த கலங்கரை விளக்கமும், சூரிய அஸ்தமனமும் மேலும் முட்டத்திற்கு அழகு சேர்க்கின்றது

முட்டத்தில் பெயர்போன படகு கட்டும் கம்பனி ஒன்றும் இருக்கின்றது. வளையும் தன்மையுள்ள ப்ளைவுட் மரப்பலகை கொண்டு இங்கு படகுகள் செய்யப்படுகின்றன. வேலை நாட்களில் செம்பு ஆணிகளை அறையும் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும்.


இப்பொழுதே முட்டத்தைப் பார்க்க வேண்டும் என ஆசை எழுமே. நியாயம்தான். கன்னியாகுமரியில் இருந்து நாற்பது கி.மீட்டர் தொலைவில் இருக்கிறது முட்டம். குமரியில் இருந்து முட்டத்துக்கு செல்லும் சாலை கடற்கரையோரமாகவே செல்கிறது என்பதால், இந்த பயணமே கூட மிக இனிமையானதாக இருக்கும். எந்த ஊராக இருந்தாலும், கடற்கரைச் சாலையில் செல்லும் போது திடீரென ஓர் இடத்தில் கடலின் அழகிய வளைவொன்று நம்மை நிறுத்தி வியந்து பார்க்கச் செய்யும். அப்படி வியப்படையச் செய்யும் அனேக இடங்கள் இந்த பயணத்தில் குறுக்கிடும். சங்குத்துறை கடற்கரை, சொத்தவிளை கடற்கரை, தேங்காய்ப்பட்டிணம் கடற்கரை, சின்ன முட்டம், சின்ன முட்டம் மீன்பிடித் துறைமுகம் என பல. கடற்கரையோரமாக வாகனங்கள் செல்வதற்கு நேர்த்தியான சாலை அமைக்கப்பட்டுள்ளது. கடற்கரை பயண ஆர்வலர்களுக்கு இந்தப்




பயணம் நிச்சயம் மிகப் பிரியமானதாக இருக்கும். இந்த சாலை நெடுகிலும் கடற்கரையோரமாக ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் வளர்ந்திருப்பது இந்தக் கடற்கரையின் அழகை மேலும் கூட்டும். இந்த வழியில்தான் தாமிரபரணி ஆறு கடலில் கலக்கிறது. ஆறு கடலோடு சங்கமிக்கும் கழிமுகப் பகுதி இயற்கை எழில் வாய்ந்தது. இந்தப் பகுதியில் படகுச் சவாரியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 24ம் பக்கம்



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# நல்ல தருணம் இது... நழுவ விடலாமோ?

மிகக்குறைந்த வட்டி வீதம்
கட்டுபடியாகும் அடமானக் கட்டணங்கள்
புதிய வீடு வாங்கவும்,
ஏற்கனவே வீடு வைத்திருப்பவர்கள் கடன் பழுவைக் குறைத்துக் கொள்ளவும்
**நல்ல தருணம் இது... நழுவ விடாதீர்கள்...**



- digi Media -

**Veriable Rate • Fixed Rate • Closed Mortgage • Open Mortgage • Short Term • Long Term • Cash Back Mortgage**
எதைத் தேர்ந்தெடுப்பது என்று குழப்பமாக இருக்கிறதா?

ஒவ்வோருவருடைய அடமானத் தேவைகளும், சூழ்நிலைகளும் வேறுபட்டவை. தனித்துவமானவை. உங்களுக்குப் பொருத்தமான அடமான வகையைத் தேர்ந்தெடுக்க அனுபவமும், நம்பிக்கையும் நிறைந்த ஒரு முகவரை நாடுங்கள்

## Das Narayanasamy

Mortgage Broker

**416-543-6614**

Fax: 1-888-511-8960
E-mail: das@centumoptima.com


Lic# M08007147



CENTUM™
Optima Mortgages Inc.
Lic# 10894

என் பணி கடன் செய்து கொடுப்பதே!

# புதியதொரு வீட்டுக்கான நகர்வு...



- digi Media -



## Ahilan Thanabalasingham

Sales Representative

**416.617.1767**

Office: 905.471.0002
Fax: 905.471.7441

RE/MAX
**Dynasty Realty Inc., Brokerage**
Independently owned and operated

# Up in the air, Antaheen படங்களை முன்வைத்து

வானரன்

Up in the air ஒஸ்காரின் இறுதிச்சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பத்து படங்களுள் ஒன்று.

Antaheen கடந்த ஆண்டு இந்தியாவின் சிறந்த படமாக தேர்வு செய்யப்பட்ட படம்

இலங்கையில் அந்தக் காலங்களில் வேலைக்குச் செல்வோர் ஒரு நிறுவனத்தில் பல வருடங்களாக, அநேகமாக தமது வாழ் நாளில் பெரும் பகுதியை அந்த நிறுவனத்திலேயே கழிப்பார்கள். வேலை இழப்பு என்பது பெரும் குற்றம் செய்பவர்களுக்கே ஏற்படுவது போன்ற ஒரு மாயை அக்காலத்தில் நிலவி வந்தது. காலமாற்றங்கள், அரசியல் மாற்றங்கள் எம்மை புலம் பெயர் மக்களாக்கி விட்டது. இங்கு



நாங்கள் எமது வேலைக் காலங்களில் குறைந்தது 5-15 வரையான நிறுவனங்களில் வேலை செய்து விடுவோம். சில சமயங்களில் நாங்களாக வேலையில் இருந்து இராஜினாமா செய்வதும், சில சமயங்களில் அவர்களாக வேலை நீக்கம் செய்வதும் உண்டு. இந்த மாற்றங்களில் பல சமூக உண்மைகளை நாங்கள் கற்றிருப்போம். ஒவ்வொரு மாற்றத்தின் போதும் ஏற்படும் மனோநிலை தாக்கங்கள் என்பன விபரிக்க முடியாதவை. புது வேலை எடுக்கும் வரை பல அனுபவங்களையும், கஸ்ரங்களையும் அனுபவித்திருப்போம். இன்ரவியு, காத்திருப்பு போன்ற வலியை எங்களில் பெரும்பாலானோர் அனுபவித்திருப்பார்கள்.

இப்பொழுது பலர் அதிகாரி நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கின்றார்கள். இந்நிலையில் விரும்பியோ, விரும்பாமலோ பலரை வேலை நீக்கம் செய்திருப்பீர்கள். முதல் வேலை நீக்கம் செய்த அன்றிரவு நித்திரை கொள்வதே கடினமாவிருக்கும். இதன் தொடர்ச்சி பழகி விடும். நீங்கள் வேலையில் மிகவும் திறமையானவராக இருந்தாலும், வேலை நீக்கம் செய்யப்படலாம். இதற்கு பல காரணங்களை கூறுவார்கள். நான் முன்பு வேலை செய்த நிறுவனத்தில் 25 வருடங்களாக வேலை செய்த எனது மேலதிகாரியை, திடீரென ஒரு நாள் வேலை நீக்கம் செய்துவிட்டார்கள். அந்த நிறுவனத்துக்காக உண்மையாக உழைத்தவர். 'உங்களது சேவைக்கு நன்றி' என்ற அழகான ஆங்கில வார்த்தைகளில் அழவைத்து விடுவார்கள். பொருளாதார மந்த நிலைக் காலங்களில் இதனை காரணங்காட்டியே பல சுத்திகரிப்பு வேலைகளை நிறுவனங்கள் செய்வதுண்டு. இவ்வாறு செய்யும் போது இதற்கென உள்ள நிறுவனங்களை அழைப்பதுண்டு. இந்த நிறுவனங்கள் தமது விசேட பயிற்சி பெற்ற அதிகாரிகளை வேலை நீக்கம் செய்யப்படும் நிறுவனங்களுக்கு அனுப்புவார்கள். இந்த அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப்படுபவர்களை அழைத்து அவர்களிடம் 'இன்று உங்களுக்கு புதிய எதிர்காலம் தொடங்குகின்றது. இவ்வாறு வேலை இழந்தவர்கள் இன்று உயர்ந்து புதிய முதலாளிகளாக உள்ளனர். இத்துடன் உங்களுக்கு சேர வேண்டிய சம்பளம் போன்றன உள்ளன. அத்துடன் உங்களது புதிய முயற்சிக்கு அடுத்த 12 மாத காலம் நாங்கள் உதவ தயாராக உள்ளோம். இப்பொழுது கையொப்பமிடத் தேவையில்லை. ஆறுதலாக வாசித்து விட்டு கையொப்பமிட்டு அனுப்பவும். தயவு செய்து உங்களது அனுமதி அட்டைகளை எங்களிடம் உடனடியாக தாருங்கள். இப்பொழுது உங்களது உடைமை-களை எடுத்துச் செல்லவும். தவறும் பொருட்களை இரு வாரங்களின் பின்னர் பெற்றுச் செல்லவும். நீங்கள் காரில் வராவிட்டால் உங்களுக்காக வாடகை வண்டி வாசலில் காத்து நிற்கின்றது. தயவு செய்து உங்களது உடைமைகளை எடுத்துக் கொண்டு வாசலுக்கு செல்வோம்' என்பார்கள். உங்களை கட்டிட வாசலில் வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டு தான் அவர்கள் செல்வார்கள். நீங்கள் வேலை செய்த நிறுவனத்தில் இரண்டு நிமிடங்களில் அனாதையாக்கப்பட்டுவிடுவீர்கள்.

எங்களது கதாநாயகன் ஜோர்ஜ் குளூனி (George Clooney) யும் வேலை நீக்கம் செய்பவர்களை நிறுவனத்திலிருந்து அகற்றும் நிறுவனத்தின் அதிகாரி. இந்த வேலையை தூக்கில் போடுபவருடன் ஒப்பிடலாம். நீதிபதியின் தீர்ப்பை குறிப்பிட்ட நாளில் நிறைவேற்றுபவர் தூக்கலிடுபவர். அடூர் கோபாலகிருஸ்ணனின் 'நிழல் குத்து' என்ற படம் தூக்கிலிடுபவர் பற்றிய படம். இங்கு நாயகன் பறப்பவர். வருடத்தில் 322 நாட்களுக்கு மேல் விமானத்தில் நகரத்துக்கு நகரம் பறப்பவர். இவரது அனுபவம் இந்த வேலையை இலகுவாக்கின்றது. பலர் தூசன வார்த்தைகள் பேசுவார்கள். பலர் உறைந்து போவார்கள். ஒரு சிலர் அழுவார்கள். குறிப்பாக 55வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இவ்வாறான வேலை நீக்கங்கள் பெரும் சுமையே. அவர்களால் வேறு வேலை தேடுவது பெரும் கடினமான முயற்சியே. ஜோர்ஜ் அவர்களது கண்களை நேரில் சந்தித்து கைகுலுக்கி விடைபெறச் செய்யும் நிமிடங்கள் பயங்கர நில நடுக்கம் ஏற்படுவதைப் போன்றது. சந்திரனுக்கு செல்லும் துாரத்தை விட அதிக துாரம் பயணம் செய்தவர் ஜோர்ஜ். வாடகைக் கார், ஹோட்டேல், விமானம் என அவரது வாழ் நாள் சுழல்கின்றது. தான் தங்கியிருக்கும் அறைக்கு எப்போவாதாவது தான் வருவார்.

ஜோர்ஜன் 'மு' (முதலாளி) இளம் பட்டதாரி Natalie (Anna Kendrick) யை நியமனம் செய்கின்றார். இவர்களது தலைமையகத்தில் நடைபெறும் கூட்டத்தில் 'மு' 'இன்றைய கால கட்டம் பொருளாதார நலிவு பெற்றுள்ள காலம். அதுதான் எமது பொற்காலம், பல நிறுவனங்கள் எம்மை அழைக்கின்றன. இதனை சாதகமாக்க எமது புதிய அதிகாரி சில புதிய முயற்சிகளை பற்றி கூறுவார். புதிய அதிகாரி 'நாங்கள் பறந்து சென்று வேலை நீக்கம் செய்வதை கணினி தொலைக்காட்சியூடாக இலகுவாக செய்யலாம்' என்கின்றார். இதை எதிர்க்கும் ஜோர்ஜ், நட்டலியாவை நேரில் அழைத்துச் செல்கின்றார். ஒரு நிறுவனத்தில் ஒரு பெண்மணியை இவர்கள் அழைத்த போது 'வேலை நீக்கமா?' என அமைதியாக கேட்கின்றார். 'நான் என்ன செய்ய முடியும், பாலத்திலிருந்து குதித்து தற்கொலை தான் செய்ய வேண்டும்' என்கின்றார். இந்த வேலை நீக்கத்தை நட்டலியே செய்தார்.

இவர்களது பயணத்தில் பல முகங்களை சந்திப்பார்கள். பலர் மனதில் நிற்பார்கள். பலர் மனதில் வந்து போவார்கள், பலரை மறந்து விடுவோம், பலர் எம்முடன் உலாவுவார்கள். ஜோர்ஜக்கு இவ்வாறான பயணப் பூச்சி Alex Goran - Vera Farmiga யுடன் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இருவம் இந்த நட்பை தொடர் வாழ்க்கையாக மாற்ற விரும்பவில்லை. மாறாக மட்டுபடுத்தப்பட்ட செக்சுக்கான நட்பாக நினைக்கின்றனர். ஜோர்ஜின் சகோதரியின் மகளின் திருமணத்திற்கு அழைப்பு வருகின்றது. ஜோர்ஜ் அலெக்சுடன் செல்கின்றார். அங்கு மணமகன் திருமண நாளன்று, திருமணத்தில் இருந்து பின்வாங்குகின்றார். அதற்கு அவர் கூறும் காரணம் 'திருமணம், மனைவி பிள்ளைகள், அவர்களுடன் நேரத்தை செலவிடல், பின்னர் பேரப்பிள்ளைகள், ஓய்வு என்ற வட்டத்திற்குள் நானும் செல்கின்றேன். அதற்குள் நான் செல்ல விரும்பவில்லை' என்கிறார். இவரை சமாதானப்படுத்தும் ஜோர்ஜ், 'நானும் திருமணத்தை வெறுக்கின்றேன். ஆனால் வாழ்க்கையின் இறுதி நாட்களுக்கு ஒரு துணை தேவை' எனக் கூறி சம்மதிக்க வைக்கின்றார்.

ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கும் பொழுது ஜோர்ஜக்கு தனிமையின் வெறுமை தெரிகின்றது. தமிழ்ப்பட கதாநாயகர்கள் போல் கூட்டத்தை பாதியில் நிறுத்திவிட்டு அலெக்சின் இல்லம் உள்ள சிக்காகோவிற்கு பறக்கின்றார். அவரது வீட்டு மணியை அழுத்தி, அலெக்ஸ் கதவை திறந்த போது அலெக்சிற்கு குடும்பம் இருப்பது தெரிய வருகின்றது. அங்கு அலெக்ஸ் தனது கணவன் பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றார். இதற்கிடையில் நட்டலியின் காதலன், தனது காதல் முறிவை ரெக்ஸ் (text) செய்தியாக அனுப்பி வைக்கின்றார்.

ஜோர்ஜ் அலுவலகத்திற்கு திரும்பும் பொழுது, ஜோர்ஜின் 'மு' தாங்கள் தொலைக்காட்சியூடாக வேலை நீக்கம் செய்யும் முயற்சியை கைவிடுவதாக கூறுகின்றார். பின்னர் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தில் வேலை நீக்கம் செய்த பெண்மணி ஒருவர் பாலத்தில் இருந்து தற்கொலை செய்து விட்டதாக கூறுகின்றார். அதன் தொடர்ச்சியாக நட்டலி தனது வேலையை இராஜினமா செய்து விட்டார் என்கின்றார். ஜோர்ஜன் பயணம் தொடர்கின்றது.

இவ்வருடம் ஒஸ்காருக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பத்து படங்களுக்குள் இதுவும் ஒன்று. பல ஊடகங்களூடாக எதிர்பார்ப்பை அதிகப்படுத்திய படம். ஜோர்ஜ் குளூனி என்ற நடிகரின் பெயருக்காகவே பல லட்சங்களை சம்பாதித்துள்ளது. திரைக் கதையில் இறுக்கம் இல்லை. ஜோர்ஜ்யைப் போன்று பல மைல்கள் திரைக்கதை பயணம் செய்கின்றது.

வேலை நீக்கம் செய்வதற்கென தனியான திறமையான நிறுவனங்களும், இறுக்கமான அதிகாரிகளும் உள்ளனர் என்ற செய்தியை விட வேறெதுவும் படத்தில் இல்லை. ஜோர்ஜ் குளூனியும் மோகன் போன்றே தனது நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். இந்த நடிப்புக்காக இவர் ஒஸ்காரின் இறுதிச்சுற்றுக்கு தேர்வாகியுள்ளார்.

ஓஸ்காரின் வியாபாரத் தனத்திற்கு இப்படம் உதாரணம். ஹொலிவூட் என்பது 'செய்திகளற்ற பிரமாண்டம்' என பொருள் படும். ஜோர்ஜ் குளூனி ஒஸ்காரின் சிறந்த நடிகர் விருதைப் பெறுவார் என பல ஊடகங்கள் தெரிவிக்கின்றன. படத்தில் அழுத்தமாக கூறப்பட்டுள்ள செய்தி ஒன்று இது.

"Losing your job is the best thing for you.!" 'இது எப்படி இருக்கு'.

இவ்வருடம் இந்தியாவின் சிறந்த படமாக தேர்வு செய்யப்பட்டுள்ள படம் Antaheen. ஒரு

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

விற்பனையாகின்றது குறமகளின்

• கூதிர்காலக் குலாவல்கள்

• அகணிதன் அல்லது நதியின் பிழையன்று

என்ற இரு குறுநாவல்கள் அடங்கிய நூல்

கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்
தொலைபேசி இலக்கம்: 416.282.8059
**GTA Square - 5215 Finch Ave. E., #201**
**Middlaefield & Finch**

# BASEMENT RENT

**MORNINGSIDE & McLEVIN**
New One Bedroom walk-out bsmt. apt for rent. Laundry & Cable. Close to TTC, school. Wal-Mart & many malls. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.519.2899

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.899.4823

HWY **401 & KINGSTON**
Bachelor walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, 401. Avail. immediately. Rent negotiable.
தொடர்புகளுக்கு: 416.422.0691

**MCCOWAN & HIGHGLEN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, mall, bank. Avail. immediately. No smoking. Single or couple preferred.
905.201.8922 / 647.286.8922

**BIRCHMOUNT & SHEPPARD**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவோ அல்லது முழுமையாவோ கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: 416.804.8435

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.836.0010

**NEILSON & MCLEVIN**
1 Bedroom furnished bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.206.3436

**NEILSON & MCLEVAN**
2Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, mall. Avail.immediately. No smoking & No drink
தொடர்புகளுக்கு: 416.728.7153

**KENNEDY & ELLESMERE**
தனி அறை ஒன்று BSMT இல் வாடகைக்கு உண்டு. Sep. kitchen, washroom. Close to Kennedy road. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.830.5560

***14th Ave. 9 th line - Markham***
one bed room bsmt apt. for rent. Kitchen, washroom, sep. entrance, parking, cable. Available any time.
தொடர்புகளுக்கு: 416 662 1418.

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom walkout bsmt for rent. 2 parking. All facilities available. Close to TTC, school & mall. Avail. immediately.
416.879.6801/416.293.6253

**BIRCHMOUNT & SHEPPARD**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Also 1 room available for rent. Parking, cable & laundry. Close to mall, school, TTC, bank. etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.298.4945

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.286.8450/416.459.3006

**NEILSON & SHEPPARD**
2 Bedroom walk out bsmt for rent. Parking, utilities inclu.. Close to bus, school, shopping, Centennial college, Scarborough campus . Couple / single preferred. Avail. immediately.
416.913.4094 / 647.237.4094

**MIDDLEFIELD & FINCH**
2 அறைகள் கொண்ட bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable & laundry. Close to mall, school, Aiyappan temple & tamil stores. Avail. immediately. பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.328.1545

**NEILSON & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, University. Avail. immediately. Working ladies, Old people or couple preferred.
தொடர்புகளுக்கு: 416.278.0606

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to 24 hrs. bus service, school. Avail. May 01, 10.
தொடர்புகளுக்கு: 416.272.4921

**MARKHAM & DENISON**
2 Bedroom brand new bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, walmart, bank, school. Avail. immediately.
416.908.3081 / 905.479.5599

**WARDEN & FINCH**
சந்திக்கருகில் சகல வசதிகளும் ஒருங்கமைந்த இடத்தில் bsmt வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.997.1289

**MCCOWAN & 14TH AVE.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.315.5375

**NEILSON & SHEPPARD**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to mall, highschool, library, TTC, bank. Available immediately.
416.546.2937/647.402.2937

**BRICHMOUNT & FINCH**
2 Bedroom walkout-out bsmt. apt. for rent. Sep. entrance, laundry facilities. Close to TTC, tamil stores, school, etc. No smoking. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.568.0686 / 647.864.7426

**KENNEDY & EGLINTON**
1 Room available for rent. Sep. entrance. Cooking facilities. Ideal for working ladies. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.930.1171

**OLDFINCH & MORNINGSIDE**
Bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to mall, TTC, school. Avail. immediately.
647.388.5295/416.724.7653

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt apt. for rent. Sep.entrance. Close to TTC, YRT, Walmart, Nofrills. school. Very convenient location. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.566.2601 After 6:00pm

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, library. Avail. immediately.
416.439.4054 / 416.899.4835

**MEDDLEFIELD & STEELES**
1 Bedroom bsmt apt. for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to TTC, YRT. Couple, old people or ladies preferred. Avail. March 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.399.5192

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom walkout bsmt apt. for rent. Sep.entrance, parking, laundry, cable, internet, utilities. Close to TTC, mall, library, U.F.T Scar., centennial college Tamil stores. Students, Small families, working ladies preferred. Avail.immediately.
416.830.0643/416.533.0768

**WARDEN & FINCH**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, bakery, mall, sneha college. Ladies preferred. Avail. immediatelty.
தொடர்புகளுக்கு: 416.894.1187

**SCAR. GOLF CLUB & ELLSEMERE**
1 Large bedroom bsmt for rent. Living room, kitchen, washroom, sep. entrance, parking, laundry. Avail. immediately. Close to school, ttc & all amenities.
416.431.9428 / 416.878.7231

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, mall, school, temple. Avail. March 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.291.2796

**MARKHAM & BRIMORTON DR.**
3 Bedroom house for rent. - Main floor.
3 bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC. Avail. Anytime. அறைகள் தனித்தனியாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:
416.938.6725 / 416.807.6977
416.289.7651

**MARKHAM & PAINTED POST DR.**
2 bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry, cable. Close to school, mall. Avail. immediately. Single family preferred.
தொடர்புகளுக்கு: 416.400.8125

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc. தொடர்புகளுக்கு: 416.551.8379

**McCOWAN & DENISON**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Washer, dryer, internet, cable & parking. Close to mall, TTC, tamil stores & hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.554.2496

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, shopping mall & other all facilities. Avail. Anytime.
416.902.1758 / 416.724.4752

## வீடு விற்பனைக்கு

நல்லூர், யாழ்ப்பாணத்தில் 4.5 பரப்புக்கொண்ட தென்னைமரங்கள் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. நல்லூர் கோயிலிற்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இந்நிலம் பழைய கல்வித் திணைக்களத்திற்கு (Old Education Department) முன்பாக உள்ளது.
மேலதிக விவரங்களுக்கு: ***416.315.9397***

*விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு*
***www.vlambaram.com***

# HOUSE FOR RENT

**FINCH & NEILSON**
3 Bedroom house for rent. Rent $1200 + utilities. Bsmt for rent $650 including utilities.
தொடர்புகளுக்கு: 416.786.2463

**STAINES & STEELES**
4 Bedroom house for rent. Single garage with all facilities. Close to TTC, mall, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.786.2013

**NEILSON & SHEPPARD**
3 Bedroom bungalow house for rent. All facilities house. Close to TTC, mall, school. Avail. March 01, 2010.
தொடர்புகளுக்கு: 647.287.6810

**MIDLAND & EGLINTON**
2 Bedroom house. Main floor only. Close to TTC subway. Lot of parking big backyard. No smoking & No pets. Rent 1200 + hydro 50%.
416.629.7800 / 416.629.1256

**DONMILLS & SHEPPARD**
3 Bedrooms house for rent. Parking, laundry, cable, internet. Close to 5 நிமிட நடை தூரத்தில் பஸ் தரிப்பிடம், Donmills Subway, school, mall, DVP, hwy 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.502.8053

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த நன்கு படித்து பட்டதாரியான( M.A பொது நிர்வாகம்) தற்பொழுது நூலகராக பணிபுரியும் 1981 ஆம் ஆண்டு பிறந்த செவ்வாய் குற்றம் உள்ள அழகிய பெண்ணுக்கு தகுந்த நல்ல வரனை பெற்றோர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேடுகின்றார்கள். (வெளிநாடு விரும்பத்தக்கது)
உள்நாட்டில் - 011.94.021.3214223
வெளிநாட்டில் - 416.710.2686

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட யாழ். பல்கலைகழகத்தில் Physical Science 4th year இல் படித்துக் கொண்டிருக்கும் 21.08.1984 ஆம் ஆண்டில் பிறந்த பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுகின்றோம். Sponsor செய்யக் கூடிய வரனாக இருக்க வேண்டும்.
தொடர்புகளுக்கு: 416.284.8757

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த கொழும்பில் தொழில்புரியும் 36 வயதுடைய மணமகளுக்கு தாயார் தகுந்த வரனை தேடுகிறார்.



தொடர்புகளுக்கு: 416.562.1573

# CARS FOR SALE

2002 Honda Accord Coupe - $4,700,
2005 Honda Accord - 2 door - $ 9,500,
2006 Ford fusion - $5,500,
2007 Acura CSX, 5 speed $15,900.
தொடர்புகளுக்கு: 416.575.5055

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கம் 23, 25

# ROOM RENT

**KENNEDY & EGLINTON** சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள BSMT இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, cable. No alcohol, no smoking. Avail. anytime. Rent $375. Close to bus, Kennedy subway, stores, etc.
647.290.8636 / leave message

**NEILSON & FINCH**
வீட்டின் மேல்தளத்தில் ஒரு அறையும், 1 bedroom bsmt apt. உம் வாடகைக்கு உண்டு. Full bath, kitchen, sep.entrance.
தொடர்புகளுக்கு: 416.412.7468

**BIRCHMOUNT & MCNICOLE**
Upper level 3 broom for rent. 2Washrooms, kitchen, living room, parking, laundry. Close to TTC, hospital. Avail.immediately
தொடர்புகளுக்கு: 416.335.8055

**MEADOWVALE & ELLESMERE**
1 Room for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. March 01, 2010. Males only.
416.754.4237 / 416.918.9868

**BIRCHMOUNT & MCNICOLL**
2 Bedroom upper level for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.335.8055

**PHARMACY & FINCH**
1 Bedroom in condo. for rent. Laundry, kitchen, living room. Close to TTC, mall, college, school. Cable & internet free. Avail. immediately. Students preferred.
647.221.2252 / 416.496.8488

**MCCOWAN & FINCH**
**SANDHURST CIRCLE EAST**
1 Room for rent. Close to tamil stores, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.298.3797

**MORNINGSIDE & FINCH**
3 rooms for rent. Parking, laundry, cable. Close to TTC, mall. Avail. Anytime. அறைகள் தனித் தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.351.0422

**KENNEDY & LAWRENCE**
1 Room for rent. Attached washroom, 3 min. walk to Lawrence RT. Meals optional. Available immediately.
416.994.9635 / 416.757.9456

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**FINCH & WARDEN**
One room for rent. Laundry, internet. Close to TTC, shopping mall. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.938.7510

**MARKHAM & STEELES**
1 Bedroom for rent. Close to TTC, YRT, walmart. வயதானவர்கள் அல்லது மாணவர்கள் அல்லது பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.726.0897

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Call: 416.335.8055/905.294.2674

**DANFORTH & EGLINTON**
Shared Room for rent in bsmt. Another room available for a lady in main floor. Close to bus, stores, 5 min. to Kennedy subway. Males only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.201.3111

**McLEVIN & TAPSCOTT**
1 Master bedroom for rent. Attached washroom. Parking & cable.Close to TTC, mall, school. Backyard patio. Avail. immediately. 292 McLevin Avenue.
தொடர்புகளுக்கு: 905.640.0833

**McLEVIN & TAPSCOTT**
1 Master bedroom for rent. Attached washroom. Parking & cable.Close to TTC, mall, school. Backyard patio. Avail. immediately. 292 McLevin Avenue.
தொடர்புகளுக்கு: 905.640.0833

**WARDEN & FINCH**
Condo. இல் 1 அறை வாடகைக்கு உண்டு. Parking. Close to bus, Tamil stores, Tamil restaurant. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.499.6437
416.844.6437 / 416.855.9232

தனிப்பட்டவர் ஆண், பெண், தங்குவதற்கான Room உண்டு. Norht York, Etobicoke பகுதிகளில் சகல வசதிகளும் கொண்டது. Bus Stopற்கு முன்னால் Shopping mallக்கு அருகில்.
தொடர்புகளுக்கு: 416.744.4357

# SPACE FOR RENT

**FINCH & MIDDLEFIELD**
Finch & Middlefield சந்திப்பில் அமைந்துள்ள GTA square mall இல் கடை வாடகைக்கு உண்டு. 2ஆவது மாடியில் #230. எல்லா விதமான வியாபாரங்களும் செய்ய வசதியான இடம்.
416.889.3191/416.497.7660

# HOUSE FOR SALE

**EGLINTON & DANFORTH**
**NEW TOWN HOUSE**
4 Bedrooms house for sale. 1St owner.
தொடர்புகளுக்கு: 647.201.3111

# VAN FOR SALE

**Van விற்பனைக்கு**
Toyota Zeina Van ஒன்று விற்பனைக்கு உண்டு. 217,000km ஓடியது.
416.498.0895 / 647.505.0895

# தமிழ் வகுப்பு

பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தரம் 1 - தரம் 12 வரை உள்ள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகளும் தமிழில் எழுத வாசிக்க அழையுங்கள். 905.554.2496

# TUTION CLASSES

Maths, English, Science, Art & Tamil.
(JK – Gr. 3) Preparation for next grade.
• Homework help • Flexible time.
1 to 1 or group classes.
Call: 905.554.2496

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கம் 22, 25

# CONDO FOR RENT

**MIDDLEFIELD & FINCH (SCARBOROUGH)**
1 Bedroom + den for rent. Laundry, parking. 3 Years old. 24 hrs. TTC, security. Avail. immediately.
416.554.9689 / 416.910.1303

# OFFICE SPACE FOR RENT

**2370 MIDLAND AVE. & SHEPPARD**
Law, Insurance, Realestate, Accident claim, school, College, Tuition Center போடக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. Tamil one தொலைக் காட்சி நிறுவனத்திற்கு அருகாமையில் உள்ளது.
தொடர்புகளுக்கு: 416.744.4357

# JOB JOB JOB

**PART TIME COOK** (பகுதிநேர cook)
**YOUNG & EGLINTON**
இத்தாலியன் உணவு (Italian food), Pizza செய்யத்தெரிந்தவர் (Pizza Maker) வேலைக்குத்தேவை. வேதனம் $10.
தொடர்புகளுக்கு: Selva
***416.305.8738 / 416.932.2837***

Scarborough வில் உள்ள Pub Restaurant க்கு waitress வேலைக்கு பெண்கள் தேவை.
தொடர்புகளுக்கு: ***416.414.5562***

# WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. AC, Airbag.
Raj - 647.269.6552

# HOUSE FOR RENT

**LAWRENCE & EGLINTON ON KENNEDY RD**
3 Rooms with all facilities. Parking, front & backyard with balcony. Avail. April 01, 2010.
தொடர்புகளுக்கு: ***416.264.3899***

# BASMENT FOR RENT

**KENNEDY & EGLINTON**
Very convenient location with all facilities. 2 bedrooms, living / dining, kitchen with stove and fridge, sep. entrance, laundry, Parking. Very good for working couple. Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***416.264.3899***

# JOB JOB JOB

***Office Assistant Wanted for Personal Injury Firm in North York***
Duties include faxing, photocopying and other duties as required. Salary plus benefits.
***Fax Resume to 905-803-9002***

# HOUSE FOR RENT

**NEILSON & SHEPPARD**
3 Bedroom + bsmt house for rent. 4 Car parking with all facilities. Close to TTC, mall, school. Avail. March 01, 2010.
தொடர்புகளுக்கு: 647.830.4644.

# JOB JOB JOB



Roti செய்யத் தெரிந்தவர்கள் முழுநேர வேலைக்குத் தேவை.
***416.799.4528 /416.276.8168 / 289.400.3434***
Cook position also available.



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)


**BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490**

**Tutorial 254**

***Answers to Tutorial 253***

1. To determine the elspsed time, we must count the time intervals between the striking. In timing the 6 O' clock strkings, there are 5 intervals. The elapsed time for 5 intervals is 5 seconds so each interval lasts one second. The 12 strokes at 12 O' clock require 11 untervals, so they take 11 second. The answer in E

2. Start




The Answer is E

3. An equation of the line passing through A(7,3) with direction vector d=(7,3) +t(2,-5) If t = -1, r=(5,8) then p=(5,8). If t = 5 $r_2$ = (17,-22) then Q=(17,-22) is on the line.

4. The lines $l_1$, $r_1$ = (5,2) + t(-3,6), $d_1$=(-1,2) = (5,2) + t(-1,2)

and $l_2$, $r_2$ = (5,2) + t(11,2), d2=(11,2). Interset at pount (5,2)

Let the bisector of there two lines be m. If theta is the angle between in and $l_2$ = $d_2$

Then m d = Iml I$d_2$I cos theta

cos theta = m.d/ Iml I$d_2$I

Then m $d_1$ = Iml I$d_1$I cos theta

Equating cos theta you can find the value of m and then theta. Thus the vector equation of the two lines are (1,2) and (2, -1)

**Questions** ***Tutorial 255***

1. At present, the sum of the ages of a fayher and this son in 33 years. Find the smallest number of years until the father's age in 4 times the son's age. (For Grade 6 to 7)

2. Find the number of digits that are required to number the pages of a book from 1 to 250 (For Grade 6 - 8)

3. Find the value of K that makes the following function continuous.

   f (x) = $x^2$ - k if x < -1

   2x - 1 if x > -1 (For Grade 11 + 12)

4. Suppose that a foreign language student has learned N (t) =20t - $t^2$ vocabulary terms after t hours of unterrupted study. What is the rate in terms per hour at which the student is learning at time t = 2h (For Grade12)

5. If IxI = 11, IyI = 23 and Ix - yI = 30, find Ix +yI (For Grade 12)

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Under taken for all arades from grade 4 to university 1st year. Special classes in advanced functions, vector calculation & data management for grades 11 & 12

Indiouvale and group classes available by an experience teacher Mr. S.F. Xavier. Classes available at 1. Scarborough 2. Stauffville and Richmond Hill

**CONTACT: 647.340.9490 / 647.831.0070**

**Tutoring**

***Tutoring for students from grade 3 to 12.***

Courses include: Math, Science, Algebra and Geometry, Advance Function, Physics, Chemistry and English. Also tutoring available for University student.



***You will have a better chance of achieving your goals. Courses taught by experience University graduates. Cost for the courses areas the following:***

Grade 3 to 5 from $30.00/month
Grade 6 to 8 from $40.00/month
Grade 9 to 12 from $50.00/month
Location: Near **Birchmount & Sheppard.**

For more information contact ***Kula*** (B.Engineer McMaster University Canada, B.Sc Jaffna University SriLanka) at **Home: (416) 850-9397 Cell: (416) 317-9413**

# முட்டம்...



இந்தக் கடற்கரை பயணம் ஏற்படுத்தும் குதூகலத்துடன் முட்டத்துக்குள் நுழையும்போது, அதன் பேரழகு, அது ஒரு முக்கிய சுற்றுலாத் தளமாக விளங்குவதில் ஐயமே இல்லை என நம்மை வரவேற்கும். வானமும் கடலும் ஏதேதோ சொல்லும். எவ்வளவு பெரிய சோகம் இருந்தாலும் கடல் அலையில் கால் நனைத்தால் ஒரு புதிய தெம்பு வந்து விடும்.

வாருங்கள், நீங்களும் அதை உணர்வீர்கள்!

## எப்படி செல்வது? எங்கே தங்குவது?

கன்னியாகுமரிலிருந்து 32 கி.மீ. தொலைவிலும், குமரி மாவட்டத்தில் முக்கிய நகரங்களில் ஒன்றான நாகர்கோவிலிலிருந்து 16 கி.மீ தொலைவிலும் உள்ளது புகழ்பெற்ற முட்டம். கன்னியாகுமரியில் இருந்தும் நாகர்கோவிலில் இருந்தும் அடிக்கடி பேரூந்துகள் இருக்கின்றன. சென்னை, திருச்சி, மதுரை, கோவை உட்பட தமிழகத்தின் முக்கிய நகரங்கள் எல்லாவற்றில் இருந்தும் ரயில் மற்றும் பேரூந்து போக்குவரத்து கன்னியாகுமரி, நாகர்கோயில் இரண்டு ஊர்களுக்குமே உள்ளது. உணவுக்கும் தங்கும் இடத்துக்கும் இந்த இரண்டு ஊர்களும் சிறந்தது.

**Tutoring**

*(Markham & Lawrence, Scarborough)*

**Grade 1-12, College & University**

*English, French, Math, Science*

***High School:*** *English, French, Physics, Chemistry, Biology, Math (Data Management, Calculus, & Advanced Functions included)*

***College (all Years):*** *English, French, Math, Physics, Chemistry, & Engineering Subjects*

***University (1st Year):*** *English, French, Math, Physics, Chemistry, & Engineering Subjects*

**Call Liz/Beena at: 416 859 4492**

**Sales Reps. Welcome**

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran**, P. Eng.

(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

**HomeLife GTA Realty Inc.** Brokerage *

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga -**905.712.2666**

# பலிக்காத காதல்....




பரிசுகள் பரிமாறிக்கொள்ளவும் மதுச்சாலைகளில் உல்லாசக் கேளிக்கைகளில் ஈடுபடவும் நாட்டியங்கள் ஆடவும் முத்தங்கள் பரிமாறிக்கொள்ளவும் ஆண்டு தோறும் காதலர் தினம் வருகின்றது.

காதல் என்பது சிலருக்கு இன்ப விளையாட்டாகவே அமைந்துவிடுகின்றது. வணிகர்களுக்கும் இது வாய்ப்பான தினமாக அமைகின்றது. இதனால் வியாபாரம் கூடி லாபம் அதிகரிக்கின்றது. "வலண்டன் டே" 'Valentine Day' யை இவர்கள் வரவேற்பார்கள். ஆனால் சாதாரண தொழிலாளர்களுக்கு இந்நாள் எல்லா நாளும் போல ஒரு நாளாகவே அமைந்து விடுகின்றது.

காதலன்பின் வேதனைகள் தீருவதுண்டோ அது காதவழி போனாலும் மாறுவதுண்டோ என்பதற்கேற்ப வாழ்க்கையில் காதல் இறுதி வரை இழையோடி இருந்தால்தான் மனமுறிவுகளும் மண முறிவுகளும் ஏற்படாதிருக்கும்.

**வலிக்காத காதல் இல்லை**
**வலிக்காது காதல் என்று**
**வந்தாலது காதல் இல்லை.**

# பொதுத்தேர்தலில் எதிர்கட்சி...

**01ஆம் பக்கத்தொடர்ச்சி**

தாம் தேர்தலில் போட்டியிடப்போவதாக அனோமா தெரிவித்துள்ளார்.

'ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே வி பியும் இணைந்து மீண்டும் புதிய கூட்டணியில் போட்டியிடவேண்டும்' என தடுத்து வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகா, தமது மனைவியின் மூலமும் ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப்பாளர் விஜயதாஸ ராஜபக்ச மூலமும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனையடுத்து இந்தக் கோரிக்கை மீண்டும்



வலியுறுத்துவதற்காக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய கட்சிகளான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி உட்பட்ட கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஒருமுறை சந்திக்கவுள்ளன. நிலைமைகள் இவ்வாறு இருக்க ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு இலங்கை முழுதும் போராட்டங்களும், குரல்களும் எழுந்துள்ளன.

அரந்தலாவ பிக்குவை கொலை செய்து, தலதா மாளிகை மீது குண்டு தாக்குதல் நடத்திய கருணா மற்றும் பிள்ளையானுக்கு அரசாங்கம் அமைச்சு பதவிகளை பெற்றுக் கொடுத்தது போல் தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி, கைதுசெய்யப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேக்காவை சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுக்குமாறு மாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் கேட்டுள்ளனர். அஸ்கிரிய, மல்வத்து, அமரபுர, ராமஞ்ய ஆகிய பௌத்த பீடங்களை சேர்ந்த மாநாயக்கர்கள் கடிதம் மூலம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர். ஆத்திரத்தை ஆத்திரத்தால் தீர்க்க முடியாது என புத்த பகவான் போதித்துள்ளதை பின்பற்றி, பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க நடவடிக்கை எடுத்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேக்காவுடன் காணப்படும் கோபதாபங்களை கைவிடுங்கள். ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்தியேனும் சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிடுத்து, அவர்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என மாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சரத் பொன்சேகாவை சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை செய்யுமாறு மாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் வேண்டுகோள் விடுத்தமைக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பௌத்த பிக்குகளை எதிர்க்கட்சிகளின் பிரசாரக் குரலாக ஒலிப்பதாக எச்சரிக்கை விடுத்துள்ளது. இலங்கை அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக பௌத்த மத பிக்குகளை அரச வானொலி எச்சரித்திருப்பதானது முக்கியத்துவம் பெறுகிறது.

சிங்கள மக்களின் அரச எதிர்ப்புணர்வை அரசிற்கெதிரான ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டமாக மாற்றுவதற்கு இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் பலமான தலைமை இல்லாமை துர்ப்பாக்கியமானது என கொழும்பு ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்தார். மகிந்த எதிர்ப்புப் போராட்டமானது பௌத்த பிக்குகளின் தலைமையிலான இனவாதப் போராட்டமாக மாறும் அபாயம் உள்ளது. 36 வருடங்கள் நாட்டைச் சூழ்ந்திருந்த பிரிவினைவாத அபாயத்திலிருந்து நாட்டைப் பாதுகாத்த கதாநாயகன் சரத் பொன்சேகா எனக் குறிப்பிடும் இந்த அறிக்கையில் பேரினவாதம் இழையோடுவதை அவதானிக்க முடிகிறது.

**VM CAKE HOUSE ALL YOUR CAKE ORDER**

உங்கள் மகிழ்ச்சியில் எங்களையும் இணைத்திட உங்கள் சகல விதமான வைபவங்களுக்கும் ஏற்றவகையில் Birthday cake, wedding cake, rich cake with box மற்றும் பலவிதமான cake வகைகள் செய்து தரப்படும். Short eats, sweets with delivery.

***416.854.8354 / 416.686.3955***



**Guitar Lesson Classes**
**கிட்டார் வகுப்புக்கள்**



பாடசாலைக்கு போய் வந்த பின்பும் விடுமுறை நாட்களிலும் உங்கள் பிள்ளைகள் தங்கள் பொழுதை பயனுள்ளதாக செலவிட அழையுங்கள். திறமை வாய்ந்த ஆசிரியர் வினோத்: **416.444.3402**

*After school & On weekends let your children enjoy their time effectively & wisely call for guitar classes. vinoth: 416.444.3402*

***Car for Sale***



2005 - Honda Accord LX-G Sedan. Automatic, Black, $13500,00 negotiable. Legendary honda quality and reliability. Air conditioning, Alarm, AM/FM stereo, anti - lock brakes, CD player, grey cloth interior, cruise control, dual air bag, heated mirrors, intermittent wipers, keyless entry, power brakes, power locks, power mirrors, power trunk, power windows, rear defroster, tilt steering, Tinted glass, 4 cyl , VTEC automatic 2.4 L engine, accident free/dealer serviced and owned by a non - smoker.

***416.754.0953 - Evenings & Weekends / 416.638.6970 - Daytime***

**APARTMENTS FOR RENT**



**$250 Move In Bonus**

***Best Building in Scarborough!***
***Clean, family building, FREE parking.***
***Close to schools, bus stop, Tamil store in building.***

**Pl. Call: 416.264.2818**

# ரஜினிகாந்த்: ஒன்றிலிருந்து அறுபது வரை

சென்ற இதழ் தொடர்ச்சி:

41. பல கதாபாத்திரங்களில் நடித்திருந்தாலும், ஒவ்வொரு பெரிய நடிகருக்குள்ளும் இந்தப் பாத்திரத்தில் நடிக்க வேண்டும் என ஒரு லட்சியக் கதாபாத்திரம் இருக்கும். ரஜினிகாந்துக்கு அப்படி நீண்ட நாள் ஆசையாக இருந்த லட்சியக் கதாபாத்திரம், 'ஸ்ரீ ராகவேந்திரா'. எஸ்.பி.முத்துராமனிடம் தன் ஆசையை ரஜினி சொன்னாலும், வியாபார பயம் காரணமாக அதைத் தள்ளிப்போட்டுக்கொண்டே வந்தார், முத்துராமன். இந்நிலையில் தனது சிஷ்யனின் ஆசையை நிறைவேற்ற முன்வந்தார் இயக்குநர் கே.பாலசந்தர். அவரது கவிதாலயா நிறுவனம் தயாரிக்க, எஸ்.பி.முத்துராமன் இயக்கத்தில் 'ஸ்ரீ ராகவேந்திரா' கதாபாத்திரத்தில் நடித்தார், ரஜினி. அதுதான் அவரது நூறாவது படம்.

42. இமயமலை மட்டும் இல்லாமல், எந்த ஆன்மீக ஸ்பாட்டுக்குச் சென்றாலும் அங்கிருந்து ருத்ராட்சம் வாங்கி வந்து சேர்த்து வைப்பது ரஜினியின் பழக்கம். இப்படிச் சேர்த்த ருத்ராட்சங்கள் வீட்டில் எக்கச்சக்கமாகக் குவிந்து கிடக்கின்றன! ரஜினி வீட்டில் இருக்கும் நேரங்களில் அவரது அறையில் 'ஓம்' என்னும் பிரணவ மந்திரம் ஒலித்துக்கொண்டே இருக்கும்!

- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -

43. இப்பொழுது மேடைகளில் மனதில் பட்டதை சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் பேசும் ரஜினி, ஆரம்ப காலங்களில் மேடையில் பேச மிகவும் கூச்சப்படுவார். ஏ.வி.எம். நிறுவனம் தயாரித்த 'போக்கிரி ராஜா' வெற்றிவிழாவில் ரஜினியைப் பேசச் சொல்லிக் கேட்டபோது மறுத்துவிட்டார். எஸ்.பி.முத்துராமன், ரஜினி என்ன பேச வேண்டும் என்பதை ஒரு தாளில் எழுதிக்கொடுக்க, அதன்பிறகுதான் பேச ஒப்புக்கொண்டு மேடையேறினார். ஆனால், அதை ஐந்து நிமிடம்தான் படித்திருப்பார், அப்படியே மடித்து பாக்கெட்டில் வைத்துவிட்டு, தானாக பேச ஆரம்பித்துவிட்டார். மேடைப் பேச்சு என்றாலே கூச்சப்பட்ட தன்னை, எஸ்.பி.முத்துராமனும் ஏ.வி.எம்.சரவணனும்தான் பேச்சாளராக்கினார்கள் என்று இப்பொழுதும் குறிப்பிடுவார், ரஜினி.

44. ரஜினி, திரையுலகுக்கு வந்து 25 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி லதா ரஜினிகாந்த் ஒரு கண்காட்சி நடத்தினார். அது அனைவராலும் பாராட்டப்பட்டது, மிகவும் பேசப்பட்டது. ஆனால், ரஜினி தான் அதை விரும்பவில்லை என்றார். வெளியில் தோன்றுவது போல் வீட்டிலும் எளிமையாகத்தான் இருப்பார் ரஜினி. "ஏன் இவ்வளவு சிம்பிளாக இருக்கிறீர்கள்?" என்று மகள்கள் கேட்டால், "கண்ணா... உங்க அப்பா சூப்பர் ஸ்டார். நீங்க எப்படி வேணும்னாலும் இருக்கலாம். எங்க அப்பா சாதாரண போலீஸ்காரர். நான் இப்படித்தான் இருப்பேன்" என்பாராம்.



45. ரஜினி, கர்நாடகத்தில் வளர்ந்தவர் என்பதாலும் அவரது தாய்மொழி தமிழ் இல்லையென்பதாலும், அவரது சக கலைஞர்களாலேயே அரசியல் ரீதியாக மிக மோசமாக விமர்சிக்கப்பட்டுள்ளார். ஆனால், பதிலுக்கு சர்ச்சை செய்யாமல் கலைஞர்கள் எளிதில் உணர்ச்சிவசப்படுபவர்கள் என்றுகூறி மௌனத்தையே கேடயமாக முன்வைத்தார் ரஜினி.

46. அடிக்கடி நண்பர்களின் வீடுகளுக்கு சர்ப்ரைஸ் விசிட் அடிப்பது ரஜினியின் பழக்கம். சினிமா நகைச்சுவை நடிகர்களில் ரஜினிக்கு இஷ்டமானவர் வடிவேலு. அவ்வப்போது அவருடன் பேசிச் சிரிப்பார். "உங்ககிட்ட பேசினா, எனக்குப் புதுசா ரீ-சார்ஜ் பண்ணின மாதிரி இருக்கு வேலு" என்பாராம்.

47. யாரிடம் பேசினாலும் யாரையும் குறை சொல்லிப் பேசவேமாட்டார், ரஜினி. சமீப காலங்களில் இதை மேலும் தீவிரமாகக் கடைப்பிடிக்கிறார்! "பைன், குட்" இவைதான் ரஜினியின் உதடுகள் அடிக்கடி உச்சரிக்கும் வார்த்தைகள்!

48. வீண் வம்பு பேசுவது ரஜினியிடம் சுத்தமாகக் கிடையாது. பக்கத்திலேயே வேறு இரண்டு பேர் வீண் கதை பேசிக்கொண்டிருக்கும் நிலையில் இருக்க நேரிட்டால்கூட, கண்களை மூடி அமர்ந்து கொண்டிருப்பாரே தவிர அவர்கள் பேச்சில் கலந்துகொள்ள மாட்டார்.

49. தன் குருநாதர் பாலசந்தர் மீது ரஜினி வைத்திருக்கும் மரியாதை அளவிட முடியாதது. பாலசந்தர் போன் பண்ணினால்கூட எழுந்து நின்றுதான் பேசுவார் ரஜினி!

50. படப்பிடிப்பின் போது, எந்தக் காரணத்தைக் கொண்டும் கேரவனில் ஓய்வெடுக்க மாட்டார். காலையில் வந்தவர், மாலை படப்பிடிப்பு முடியும் வரைக்கும் செட்டுக்கு உள்ளேதான் இருப்பார். மதிய இடைவேளையில் அங்கேயே துண்டை விரித்துப்போட்டு சற்றுக் கண்ணயர்வார்!

51. ராகவேந்திரா மண்டபத்தில் வெயில் காலத்தில் மக்களுக்கு இலவசமாக மோரும் ஐஸ் வாட்டரும் வழங்குவார்கள். இதைத் தன் அறையில் அமர்ந்து பார்த்துக்கொண்டு இருப்பார் ரஜினி! ராகவேந்திரா கல்யாண மண்டபத்தின் தொலைபேசிக்கு இன்னொரு இணைப்பு உண்டு. ரஜினி மண்டபத்தில் இருக்கும்போது ரசிகர்கள் யாராவது போன் பண்ணினால், அந்த இன்னொரு இணைப்பு வழியாக எல்லாவற்றையும் மௌன-மாகக் கேட்டுக்கொண்டு இருப்பார். அந்த ரசிகருடன் பேச வேண்டும் என்று விரும்பினால் அவரே லைனில் வந்து ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி தருவார்!

52. அடுத்தவர் மனது நோகும்படி எதுவும் செய்துவிடக்கூடாது என்பது ரஜினி தன் வாழ்வில் விடாமல் கடைபிடித்து வரும் பாலிசி. ரசிகர்கள் உட்பட யார் தன்னைப் பார்க்க வந்தாலும், வயது குறைந்தவர்களாக இருந்தால்கூட, எழுந்து நின்று வரவேற்பது ரஜினியின் வழக்கம். வந்தவர் அமர்ந்த பின்புதான் இவர் அமர்வார்! தன்னுடன் போட்டோ எடுத்துக்கொள்ள வருபவர்களுடன் குழந்தைகள் இருந்தால், குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு போஸ் கொடுப்பதுதான் ரஜினியின் பழக்கம்!

53. பெரும் செலவில் தயாரிக்கப்பட்ட 'சிவாஜி' படத்துக்கு ரஜினி வாங்கியது வெறும் 1001 ரூபாய் மட்டும்தான். படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கும் போதும் பலமுறை பணம் கொடுக்க ஏ.வி.எம்.சரவணன் முயன்ற போதும், "இது மெகா பட்ஜெட் படம். பணம் எக்கச்சக்கமாக செலவாகும். எனவே, உங்களுக்கு எப்பொழுதும் பணம் தேவைப்பட்டுக் கொண்டிருக்கும். படம் முடிந்து பிசினிஸ் பண்ணிய பிறகு என் சம்பளத்தை வாங்கிக்கொள்கிறேன்" என்று சொன்னதுடன், அதன்படியே படப்பிடிப்பு முடிந்த பிறகே தன் சம்பளத்தை வாங்கினார், ரஜினி.

54. ரஜினி ஒரு குளியலறை பாடகர். குஷி மூடில் இருந்தால் அப்போதைய ஹிட் பாடல்களை முணுமுணுக்க ஆரம்பித்துவிடுவார். அப்படி ஒரு பாடல் மனதுக்குப் பிடித்துவிட்டால், சம்பந்தப்பட்ட இசை அமைப்பாளர், பாடகருக்கு திடீரெனப் போன் போட்டுப் பாராட்டுவது ரஜினி வழக்கம்.

55. ரஜினிக்குப் பழக்கமான வாடகை கார் டிரைவர் இருக்கிறார். இரவு நேரங்களில் திடீரென அவருக்கு போன் செய்து வரச் சொல்லி, எங்காவது கையேந்தி பவனில் சாப்பாடு வாங்கி காருக்குள்ளேயே உட்கார்ந்து சாப்பிடுவார்!

56. ஒரு படத்தின் படப்பிடிப்பு முடியும்போது அந்தப் படத்தில் பணிபுரிந்த உதவி இயக்குநர்களுக்கு ஒரு தொகையைப் பரிசாகத் தருவது ரஜினியின் பழக்கம். அந்தப் பரிசில் குறைந்தது 50 ஆயிரம் ரூபாயாவது இருக்கும்.

57. ரஜினி, வேலைகள் இல்லாமல் ஓய்வாக இருந்தால், அடையாளத்தை மறைக்கும் அளவுக்குச் சின்னதாக கெட்டப் சேஞ்சுடன் வெளியே கிளம்பிவிடுவார். பெரும்பாலும் தலையில் மப்ளர் கட்டிக்கொள்வார்.

58. ரஜினி, தனிமையில் இருக்கவும் தியானம் செய்யவுமே அதிக நேரம் செலவிடுவார். தனிமையில் இருக்க ரஜினி பெரும்பாலும் தேர்வு செய்யும் இடம், பெங்களூரில் உள்ள தன் அடுக்குமாடி குடியிருப்பு வீடு. புத்தகங்கள், டி.வி.டி-க்கள் என ரஜினியின் தனிமை தவம் இங்கேதான்! சமீப காலமாக ஆன்மிகப் புத்தகங்கள் அதிகம் படிக்கிறார், சொற்பொழிவுகள் கேட்கிறார்.



59. ரஜினி, கண்டக்டராக வேலை பார்த்தப்ப 'குருஷேத்திரம்' என்ற நாடகத்தில் துரியோதனன் வேடத்தில் நடித்தார். பார்த்தவர்கள் அனைவரும் ரஜினியைப் பாராட்ட, அவருக்குள் ஒரு உற்சாகம் பீறிட்டது. ஏதோ ஒரு திறமை தன்னிடம் ஒளிந்திருக்கிறது. தனக்கு தெரியாமலே தன்னுள் வளர்ந்திருக்கிறது. அதை நோக்கிச் செல்ல வேண்டும் என அவர் மனது சொன்னது. அப்பொழுதுதான், இந்தக் காலகட்டத்தில்தான் சென்னை பிலிம் இன்ஸ்டிட்டியூட் விளம்பரம் அவர் கண்ணில் பட்டது. இன்ஸ்டிட்டியூட்டில் சேர்வது என்று அவர் முடிவெடுத்த அந்தக் கணம்தான், இன்று சூப்பர் ஸ்டார் என்ற பெரிய நடிகராக ரஜினியை மாற்றியிருக்கிறது.

60. பிரபல பெரிய நடிகர்கள் பலருக்கும் அமைந்த வேடம் மாதிரி, ராகவேந்திரா தவிர குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு தனக்கு விருப்பமான வேறு வேடம் எதுவும் தன் நடிப்பு வாழ்க்கையில் அமையவில்லை என தன் ஆதங்கத்தை ஒருமுறை வெளிப்படுத்தினார் ரஜினி. "சிவாஜியின் 'பார் மகளே பார்', 'வியட்நாம் வீடு', 'தங்கப்பதக்கம்' போன்ற கண்டிப்போடு கூடிய பாசமுள்ள அப்பா கதாபாத்திரம் செய்ய எனக்கு விருப்பம். அப்படிப்பட்ட வேடம் எதுவும் அமையறது இல்லை. இனிமேல் எதிர்பார்க்கவும் முடியாது" என்றார். முற்றும்.

A1 கொழும்பு
டிஜிற்றல் போட்டோ ஸ்ரூடியோ & வீடியோ

| | |
|---|---|
| 2 பாஸ்போட் OR 2 லான்டட் காட் 5 நிமிடத்தில் | $10.00 |
| 2 சிற்றிசன் or அனைத்து ஐ. டி. 5 நிமிடத்தில் | $10.00 |
| 3 - 5X7 ஸ்ரூடியோ போட்டோ | $30.00 |
| From: அல்பத்துடன் முதல் தரமான போட்டோ PACKAGES | |
| 25 - 5X7 பிறந்த நாள் or முதன் நன்மை | $125.00 |
| 50 - 5x7 பூப்புனித நீராட்டு விழா | $250.00 |
| 75 - 5x7 திருமணவிழா or அரங்கேற்றம் | $375.00 |
| 25 - 5x7 போட்டோக்கள் வீட்டிற்கு வந்து எடுப்பதற்கு | $125.00 |


2296 EGLINTON AVE. EAST @ BIRCHMOUNT ROAD
UNIT 3 LOWER LEVEL, SCARBOROUGH 416-752-4444
E-Mail: WWW.TYP@GMAIL.COM 416-613-2818
Web: www.tamilsyellowpages.com

# கருந்துளைகள் -10

சென்ற தடவையில் கருந்துளைகளை எவ்விதம் வான்பரப்புகளில் இனம் காணலாம் என்பது பற்றிப் பார்த்தோம். அதில் அக்கிரேசன் தட்டுப் பற்றியும் எக்ஸ் கதிர்கள் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். நியூத்திரன் விண்மீன்களும் இந்த வகையான அக்கிரேசன் தட்டுகளையும் எக்ஸ் கதிர் வெளிவீச்சு இயல்பையும் கொடுக்க வல்லன. ஏனெனில் இவையும் தமது சோடி விண்மீனுக்கு அண்மையில் வருகையில் சோடி விண்மீனில் இருந்து சடங்களை இழுத்துக் கொள்ளுகின்றன. ஆனால் வலிமையான துணிக்கைப் படையை வெளிவீசும் அளவிற்குப் போதுமான காந்தப்புல வலிமையை ஏற்படுத்திக் கொள்ளமுடியாதவை என்பதாகக் கூறுகின்றார்கள். இந்த ஒரு வித்தியாசத்தினைத்தான் விண்மீன்களில் இருந்து சுப்பநோவாவின் பின்னராகத் தோன்றுகின்ற, கருந்துளைகளிலும் நியூத்திரன் விண்மீன்களிலும் காண்கின்றார்கள்.

இந்த இடத்தில் அக்கிரேசன் தட்டினையும், எக்ஸ் கதிர்களையும் காணுமிடத்தில், மத்தியில் இருப்பது கருந்துளையா? அல்லது நியூத்திரன் விண்மீனா எனப் பிரித்துப் பார்ப்பதற்கு அங்கு காணப்படும் திணிவின் அளவினைத்தான் ஆய்வாளர்கள் இந்நாட்களில் பாவிக்கின்றார்கள். ஏனெனில் நியூத்திரன் விண்மீனும் மிகச் சிறியதாகையினால், அக்கிரேசன் தட்டுகளின் ஒளிர்வினால் நமக்குத் தெரிவதில்லை. அக்கிரேசன் தட்டின் மத்தியில் உள்ள பொருளின் திணிவு எமது கதிரவனின் திணிவினையும் விட மூன்று மடங்குகளுக்கு அதிகமாக இருப்பின், அங்கு கருந்துளைதான் உள்ளது எனத் துணியலாம் என்கின்றார்கள் ஆய்வாளர்கள்.

கருந்துளைகளுடன் அதற்கு மிக அண்மையாக உள்ள அண்டவெளியின் சடங்கள், (அவை வேறு விண்மீன்களின் சடங்களாக இருக்கலாம், அல்லது வான்வெளி இடையூடகத் துணிக்கைகளாக இருக்கலாம்) சேர்ந்து கொள்கின்றன எனத் தெரிந்து கொண்டோம். இதனால் அக்கருந்துளையில் என்னென்ன மாற்றங்கள் உண்டாகின்றன எனப் பார்ப்போம். கருந்துளையுடன் இணையும் துணிக்கைகள் அக்கிரேசன் தட்டினை உண்டாக்கி, பின்னர் நிகழ்வெல்லை என்ற 'இவன்ர் கொறிசோன்'ஐத் தாண்டி, கருந்துளையின் மையத்தில் உள்ள ஒருமத்துடன் ஒன்றிணைந்து கொள்கின்றன எனத் தெரிந்து கொண்டோம்.



## பேரண்டம் - 58

எவ்வளவு திணிவுடைய சடங்கள் ஒருமத்துடன் இணைந்தாலும் ஒருமத்தின் பருமனில் எதுவித மாற்றங்களும் ஏற்படுவதில்லை. ஒருமம் பெரியதாகவோ அன்றேல் சிறியதாகவோ மாறுவதில்லை. முன்னர் இருந்ததைப் போலவே, ஒரு புள்ளியின் அளவிலேயே காணப்படும். ஆனால் கருந்துளையின் திணிவானது எவ்வளவு சடங்கள் கருந்துளையினுள் விழுந்தனவோ அவ்வளவால் அதிகரித்துக் கொள்ளும். இப்படியாகக் கருந்துளையில் ஏற்படும் திணிவதிகரிப்பானது ஒருமத்தின் பருமனில் மாற்றத்தினை ஏற்படுத்தாமல் இருப்பினும் (ஏற்படுத்த மடியாது) கருந்துளையின் பருமனை அதிகரிக்கச் செய்கின்றது. கருந்துளைகளின் பருமனானது அவற்றின் திணிவில் தங்கியுள்ளது என்பதனை முன்னரே தெரிந்து கொண்டோம். எனவே கருந்துளைகளின் இந்தத் திணிவு அதிகரிப்பானது கருந்துளையின் பருமனை பெரியதாக்குகின்றது. அதாவது விண்பரப்பில் உள்ள துளையானது பெரியதாகின்றது. எனவே கருந்துளையின் மத்தியில் உள்ள ஒருமத்தைச் சுற்றிக் காணப்படும் நிகழ்வெல்லையின் தூரமானது முன்பிருந்ததையும் விடக் பெரிய-தாக வந்துவிடும்.

சடங்கள் கருந்துளையினுள் வந்து விழுவதினால்தான் கருந்துளையானது பெரிய-தாக வரும் என்றில்லை. அருகருகே வரும் இரண்டு கருந்துளைகளும் ஒன்றாகக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. அப்படி இரண்டு கருந்துளைகள் ஒன்றாக இணையும் போதும், புதியதாகத் தோன்றிய கருந்துளையின் பருமனும் அதிகரிக்கும். அதனால் புதியதாகத் தோன்றிய கருந்துளையின் நிகழ்வெல்லை யானது அப்புதிய கருந்துளையின் ஒருமத்தில் இருந்து அதிக தூரத்தில் இருக்கும்.

இன்னொரு விடயத்தினையும் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இவ்விதம் இரண்டு கருந்துளைகள் இணையும் போது அல்லது ஒன்றுடன் ஒன்று மோதும் போது தோன்றும் புதிய கருந்துளையின் பருமனானது இரண்டு கருந்துளைகளினதும் பருமனின் மொத்தமாக இருக்கும் அல்லது இரண்டினதும் மொத்தப் பருமனை விடவும் கூடுதலாக இருக்கும். இந்த இயல்பினை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், ஒரு காலகட்டத்தில் பேரண்டத்தின் எல்லாக் கருந்துளைகளும் ஒன்றிணையக் கூடிய வாய்ப்பு இருப்பது போலத் தோன்றும். அப்படி எல்லாமுமே ஒன்றிணைந்து ஒரு தனிப் பெரும் கருந்துளையினை உண்டாக்கினால் பேரண்டத்தின் அத்தனையுமே அத் தனிக் கருந்துளையினால் உறிஞ்சப்பட்டு, பேரண்டமே இருளினுள் வந்துவிடும். அல்லாமலும் எல்லாமும் சடங்கள் எல்லாமுமே ஒருமத்தினுள் அழிந்து போவதினால் அதுதான் பேரண்டத்தின் இறுதிக் காலமாக இருக்கும் எனவும் சிலர் கருதுகின்றார்கள். அந்த வகையில் இந்தக் கருந்துளைகள் ஆபத்தானவை: பேரண்டத்தினையே அழித்துவிடக் கூடியவை என்பது சிலரது கருத்து.

அயன்ஸ்ரைனின் வெளிநேரம் இல்லாமற் போவது கருந்துளைகளின் ஒருமம் என்கின்ற சிங்குலாரிற்றிகளில்தான் என்பது நிறுவப்பட்ட ஒன்று. அத்துடன் பேரண்டத்தின் (ஒருவேளை) பேரொடுக்கம் (Big Crunch) எனும் நிலையிலும் வெளி-நேரம் இல்லாமல் போகலாம் என்றும் பொதுச்சார்புத் தத்துவம் கூறுகின்றது. பேரொடுக்கம் என்பதனை இவ்வாறு கூறுவார்கள். இன்று விரிவடைந்து கொண்டே போகின்ற பேரண்டம், ஒருநிலைக்கு அப்பால் விரிவடையும் சக்தியை இழந்து, பின்னர் ஒடுங்கிக் கொண்டு வந்து, ஒரு புள்ளியில் முற்றாகவே ஒடுங்கிவிடும். இவ்விதம் பேரண்டமானது ஒரு புள்ளியில் ஒடுங்குதலைத்தான் பேரொடுக்கம் என்பார்கள்.

இந்த பேரண்ட ஒடுக்கமானது கொள்கையள வில் மாத்திரம்தான் கூறப்பட்டுள்ளது. ஆனால் கருந்துளைகள் எல்லாமுமே ஒரு காலத்தில் ஒன்றிணையக் கூடியனவா என்றால் இல்லை என்றேதான் கூறவேண்டும். இதனை கருந்துளைகளுக்கு அப்பால் கொஞ்சம் தள்ளி நின்று, அடுத்த தடவையில் இருந்து பார்போம்.



**- கனி -**


## எட்டாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா படைப்புகளுக்கானகோரல்

சுயாதீன கலை திரைப்பட மையத்தால், கனடாவின் ரொரன்ரோ நகரில் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன.

படைப்புக்கள் ஆங்கில துணைத் தலைப்புக்களை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

தாயக நிலைமையை வெளிப்படுத்தும் படங்கள் வரவேற்கப்படுகின்றன.

விழாவில் சிறந்த திரைப்படைப்புக்களுக்கான 3 பரிசுகள் வழங்கப்படும். அவையாவன:
- முதற் பரிசு -- 500 கனடிய டொலர்
- இரண்டாம் பரிசு -- 300 கனடிய டொலர்
- மூன்றாம் பரிசு -- 200 கனடிய டொலர்

படைப்புக்கள் பின்வரும் விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும்:

- படைப்புக்கள் தை 15, 2010க்கு (Jan. 10, 2010) முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்பக்கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.

- படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
  Tam Sivathasan
  Exceutive Director - IAFS
  1345 Morningside Ave., Unit # 8, Toronto, ON. Canada, M1B 5K3

மேலதிக தொடர்புகளுக்கு: 1-416-450-6833, 1-416-804-3443, rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com

*Independent Art Film Society of Toronto*



## வீடு, மனை, நிலம், வியாபாரம், வியாபாரக்கட்டிடம் வாங்க, விற்க அழையுங்கள்





**KESH DOSANJH** *M.A. ECON.*

Sales Representative

**Cell: 416-836-9530 Office: 416 - 321-6969**

**Email: kdosanjh@trebnet.com**

*HomeLife GTA Realty Inc.,* Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

*1711 McCowan Rd. #206, Toronto*

*145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666*

**Independently owned & operated*

**கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது**

# ‘சினிமாவுக்கு வியாபார முக்கியத்துவம் அதிகம்!’

## சந்திப்பு: இயக்குநர் வெற்றிமாறன்

இயக்குநர் வெற்றிமாறன், தன் முதல் படத்திலேயே (‘பொல்லாதவன்’) அனைவரையும் தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தவர். ஒரு கதையை அலுப்புத்தட்டாத, வெகு சுவாரஸ்யமான திரைப்படமாகத் தந்து எல்லா தரப்பு மக்களையும் பார்க்க வைக்க முடியும் என்று நிரூபித்திருப்பவர். இயக்குநர் பாலுமகேந்திராவிடமும் இயக்குநர் கதிரிடமும் பணியாற்றியவர். தற்போது ‘ஆடுகளம்’ திரைப்படத்தை இயக்கி வருகிறார். ஈழக் கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் மிக முக்கியமான பாத்திரத்தில் நடித்திருக்கும் இப்படம், படப்பிடிப்பு முடிந்து வெளியீட்டுக்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. அதற்கான இறுதிகட்ட எடிட்டிங்கில் மிக பிஸியாக இருந்த இயக்குநர் வெற்றிமாறனை சந்தித்துப் பேசினோம்.

உங்களோட ‘பொல்லாதவன்’ படம் தீவிர தமிழ் சினிமா ஆர்வலர்களிடம் ஒரு பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கு. அடுத்து உங்ககிட்ட இருந்து வர்ற படைப்புக்காக எல்லாருமே காத்துக்கிட்டு இருக்காங்க. இந்நிலையில், ‘ஆடுகளம்’ கொஞ்சம் தாமதமாகறதாவும் ஒரு தகவல். அதுக்கு என்ன காரணம்?

“உண்மையில், இந்தப் படத்தை ரொம்ப சீக்கிரம் பண்ணிக்கிட்டு இருக்கேன் அப்பிடிங்கறதுதான் உண்மை. என்னோட முதல் படத்துக்கு முப்பது வருஷம் நேரம் இருந்துச்சு. முதல் படத்துல நான் முப்பது வருஷமா வாழ்ந்த வாழ்க்கை, குறைந்தபட்சம் பதினைந்து வருஷ கால அனுபவமாவது இருக்கு. என்னோட ஞாபகங்கள், அந்த அனுபவங்கள் எல்லாத்தையும் சேர்த்துப் பார்த்து, அதை கதையா மாத்தி, திரைக்கதை எழுதி, பத்து, பதினைஞ்சு தயாரிப்பாளர்கள்கிட்ட



சொல்லி, ஒரு நடிகர்கிட்ட சொல்லி அவங்களை ஒத்துக்க வச்சு, அதை படமா மாற்றம் செய்யறதுக்கான அவகாசம் இருந்துச்சு. இப்ப அது இல்ல. இந்தப் படத்துக்கு ரெண்டு வருஷம்தான் நேரம். அந்த ரெண்டு வருஷத்துல நான் புதுசா ஒரு வாழ்க்கையைத் தெரிஞ்சுக்கிட்டு, புதுசா ஒரு பண்பாட்டை தெரிஞ்சுக்கிட்டு பண்ண வேண்டியிருந்துச்சு.

அப்புறம் இன்னொண்ணு, வருஷத்துக்கு ஒரு படம் எடுக்கணும், ஆறு மாசத்துக்கு ஒரு படம் எடுக்கணுங்கற நேர நெருக்கடிக்குள் இயங்கறது எனக்குக் கொஞ்சம் கஷ்டமா இருக்கு. அடிப்படையில நான் ஒரு சோம்பேறி. ‘ஆடுகளம்’ படப்பிடிப்பு முடிஞ்சுடுச்சு. இன்னும் ரெண்டு, மூணு மாசத்துல வெளி வந்துடும். ஏப்ரல் 14-ம் தேதி படத்தை ரிலீஸ் பண்றதுக்கு திட்டம் போட்டுக்கிட்டு இருக்கோம். அப்பிடி இல்லைன்னா, மே மாசமாவது வந்துடும்.

ஒரு வெகுஜன கலாசாரத்தை பத்தியோ, வெகுஜன பண்பாட்டையோ டீல் பண்ற படம் இல்ல இது. ஒரு ‘சப் கல்ட்’ பத்தி பேசுற படம். மதுரை பகுதியை பின்னணியாகக் கொண்ட படம். அவங்களோட தொன்மை, பண்பாடு எல்லாமே ஒரு பகுதியா இந்தத் திரைக்கதையில இருக்கு. அதுக்கு பெரிய முக்கியத்துவம் இந்த திரைக்கதையில் இல்லைன்னாலும், மதுரையைப் பத்தி தெரிஞ்சுக்கறதுக்குமே எங்களுக்கு ரெண்டு வருஷ காலம் தேவைப்பட்டுச்சு. ஒரு பெரிய புத்தகத்தோட முன்னுரையை மட்டும்தான் நாங்க படிச்சிருக்கோம்னு சொல்லணும். அதை மட்டும் படிச்சுட்டு பண்ணியிருக்கோம். அதை நாங்க சரியா பண்ணியிருக்கோமா, இல்லியாங்கறது படம் வந்ததுக்கப்புறம் அந்த மக்கள் சொல்றதுலதான் இருக்கு. அதனால, இதுல கால தாமதம்ங்கறதை என்னால ஏத்துக்க முடியல.”

‘ஆடுகளம்’ கதை என்ன? கொஞ்சம் சுருக்கமா சொல்லுங்களேன்?

“இது தனி மனிதனுடைய வாழ்க்கைக் கதை கிடையாது. அதாவது, ஒரு கதாநாயகனோட கதையா இது இருக்காது. ரெண்டு தலைமுறை மனிதர்களைச் சுற்றிப் பின்னப்பட்ட கதை. அதுல ஒரு தலைமுறையைச் சேர்ந்த, ஒரு பையனுக்கு முக்கியத்துவம் குடுத்து, கதையை நகர்த்தியிருக்கோம். அந்தப் பையனா தனுஷ் நடிச்சிருக்காரு. படத்துல அவரைப் பாக்கும்போது எல்லாருமே ‘பரவால்லயே தனுஷ் இப்பிடி ஒரு

தொடர்ச்சி 34ஆம் பக்கம்



# வருது வருது Oscar வருது!

மார்ச் மாதம் ஞாயிறு 07, 2010 இரவு, Oscar Awards Ceremony. சிறந்த திரைப்பட விருதுப் போட்டிக்காக, 10 திரைப்படங்கள் தெரிவு செய்யப்படும் நடைமுறை கட்டக் கடைசியாக 1943 ஆம் ஆண்டு வரை இருந்ததாம், 2010 ஆண்டுக்கு மீண்டும் 10 படங்கள் வரவேற்கப்பட்டிருக்கிறது! இது மிகவும் சூப்பரான விடயம் என்று பரவலாகப் பேசப்படுகிறது. மேலும் பல படைப்பாளிகளை உற்சாகப்படுத்தப்படுவது நல்லதுதானே!



**- கிறிஸ்ரி-**

பல்வேறு பிரிவுகளில் Oscar விருதுகளுக்கான தெரிவுகள் அறிவிக்கப்பட்ட நாள் பெப்ரவரி 02, 2010. சிறந்த பட விருதுக்காக போட்டியிடப்போகும் 10 படங்கள்:

| | |
|---|---|
| Avatar | The Blind Side |
| District 9 | An Education |
| The Hurt Locker | Inglourious Basterds |
| Precious | A Serious Man |
| Up | Up in the Air |

இதில் Avatar, வசூல் சாதனையில் இதுவரை "மூழ்காது" முன்னணியில் இருக்கும் 'Titanic' நோக்கி அதிபயங்கர வேகத்தில் பறந்து முன்னேறி வருகின்றது. படம் பார்க்க "பசங்க" முதல் "பெருசுங்க" வரை எல்லோரும் ஒரே lineup! (படம் பற்றி அறிந்து கொள்ள விரும்புபவர்கள், "விளம்பரம்" பெப்ரவரி 1 இதழ் படியுங்கள்). Avatar மற்றும் The Hurt Locker திரைப்படங்கள் தலா 9 Oscar விருதுகளுக்கு (வெவ்வேறு பிரிவுகளில்) முட்டி மோதிக் கொள்ளப் போகின்றன!

விடயம் இதுதான்! கனடாவில் பிறந்தவர் James Cameron, Avatar இன் இயக்குனர். இவரிடம் இருந்து விருதுகளைத் தட்டிக் கொள்ள முயற்சிக்கப் போவது வேறு யாருமல்ல, "சாட்சாத" அவர் முன்னாள் மனைவி, Kathyrn Bigelow, Hurt Locker இன் இயக்குனர். இருவருக்கும் தான் "சபாஷ்! சரியான போட்டி" நடக்கப் போவதாக "கிசு கிசுக்கப்படுகிறது"!

Hurt Locker, மரணத்தை மிக அருகாமையில் கொண்டு வரும் படம்! ஈராக்கில் தீவிரவாதிகளால் அடிக்கடி, ஆங்காங்கே வைக்கப்பட்டு வெடிக்கும் வெடிகுண்டுகள் பற்றிய செய்திகள் படித்திருக்கிறோம். ஆனால் அந்த வெடிகுண்டுகளில் பல வெடிக்காமல் போவதற்கு காரணம் யார் என்று நாம் சிந்தித்திருக்க மாட்டோம். வெடிகுண்டுகளை "அமைதிப்படுத்தும்" அமெரிக்க ராணுவ குழு (Explosive Ordnance Disposal Squad) பற்றிய அதிர்வுப் பதிவே Hurt Locker படம். நம்மில் பல பேர் காலையில் வேலைக்குப் போக அலுத்துக்கொள்வோம். "என்னடா வேலை இது", என்று தம் வேலை பற்றிக் complain பண்ணுபவர்கள், ஒரு முறை Hurt Locker பார்த்தால் "கப் சிப்" தான்!

இராணுவக் குழுவில் வரும் ஒருவராக, மரணத்துடன் ஒவ்வொரு வினாடியும் வரும் Wire இணைப்புகளை, சட சடவென்று வெட்டி விட்டு "அசால்டாக" நிமிரும் போது Jeremy Renner, நடிப்பில் "கலக்கி வெடிக்கிறார்"! சிறந்த நடிகருக்கான விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட ஐந்து நடிகர்களில் இவரும் ஒருவர். ஒரு காட்சியில், குண்டுகளை செயலி ழக்கச் செய்யும் முயற்சியில், wire இணைப்புகளை வைத்து குண்டை கண்டுபிடித்து, வெளியே அதை இழுக்க அதனுடன் இணைக்கப்பட்ட மேலும் 6 குண்டுகள் அவரைச் சுற்றி மண்ணிலிருந்து வெளியே வர..., நம் இரத்தம் மட்டுமல்ல, உடம்பில் உள்ள பல்வேறு அம்சங்களும்(!?) சேர்ந்து உறையும் காட்சி அது!

'Up' திரைப்படம் ஒரு Animated movie. அது எதற்காக சிறந்த திரைப்படத்திற்கான, விருதுக்கான 10 திரைப்படங்களில் ஒன்றாக வந்திருக்கிறது என்பது கொஞ்சம் குழப்பம். ஏனென்றால் அது ஏற்கனவே 'Animated Feature Film" பகுதியில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 'Precious' படத்தில் தாயாக நடிக்கும் Mo 'Nique, மகளை உடல், உள ரீதியாக வதைக்கும் கதாப்பாத்திரத்தில் நடித்திருந்தாலும், அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல்(!?) சிறந்த துணை நடிகைக்கான விருது அவருக்கு வழங்கப்படலாம் என்று பேச்சு அடிபடுகிறது.

Inglourious Basterds மற்றும் A Serious Man இந்த இரண்டு படங்களுமே என்னைப் பொறுத்தவரையில், பார்த்த போது எந்தப் பாதிப்பையுமே ஏற்படுத்தாத படங்களாக இருந்தன. The Blind Side, District 9, An Education, Up in the Air இவைகளை அடுத்த காட்சியில் (மன்னிக்கவும்!) அடுத்த இதழில் பார்த்துக்கொள்ளலாம்!

Avatar ஆ அல்லது Hurt Locker ஆ என்று நிறையப் பேர் bet பிடித்து வைத்திருப்பீர்கள்! Hurt Locker இல் ஒரு காட்சியில் Jeremy Renner ஒரு கார் குண்டை செயலிழக்க வைக்க வியர்வை சிந்திக்கொண்டிருப்பார், இந்த வேலைக்கு "மெகா" பாதுகாப்புகளுடன் கூடிய உடைகள் அணிய வேண்டிய தேவை இருக்கும். மிகச் சிக்கலான வெடிகுண்டு, நேரம் போய்கொண்டு இருக்கும், நமக்கோ இதயமே வெடிகுண்டு போல அடித்துக்கொண்டு இருக்கும்! ஒரு கட்டத்தில் "சர சரவென்று" பாதுகாப்பு உடைகளைக் களைந்து விட்டு "அந்தத் குண்டால், சாகத்தான் போகிறேன் என்றால் comfortable ஆகச் செத்து விட்டுப் போகிறேன்", என்று கூலாக சொல்லிவிட்டு வேலையைத் தொடர்வார். எனவே, Avatar இடம் தோற்றாலும் 'Hurt Locker team' கூலாகத்தான் வெளியேறுவார்கள் போலிருக்கிறது! தோற்பார்களா?

**Bestway Driving school**

Get your **G2** Licence in 3 weeks (If qualified)

**பெண்கள் / ஆண்கள் welcome**

***Very respectfull instructor to ladies.***

**உங்களுடைய தாய்மொழியிலேயே கற்றுக்கொள்ள முடியும்**

**நம்பகமான சேவையும் நாணயமான கட்டணமும்**




**சாரதிப்பத்திரம் உத்தரவாதம்**

*Get your G licence through me.*

*If you fail G test, we will pay your test-booking fee.*

(some condition may apply)

**Approved instructor by M.T.O.**

For further details call ***Vicky: 647.284.5373***

சேவைகள்: ***Brampton - Mississauga - Toronto***

***Road test available in out cities***

**REAL ESTATE வகுப்புகள்**

ரொறொன்ரோவில் இலவச ஆதனவியல் (***Real Estate***) வகுப்பு நடைபெறுகின்றது.

தொடர்புகளுக்கு: ***Vanessa - 416.321.6969***



# Up in the air...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

திறமையான பொலிஸ் அதிகாரி அபிக்கும், தொலைக்காட்சி பெண் ஊடகவியலாளருக்குமிடையில் இன்றநெட் சட்டின் ஊடாக நட்பு ஏற்படுகின்றது. இயல்பு வாழ்க்கையில் இவர்கள் இருவரும் எலியும், பூனையும். பொலிஸ் அதிகாரி ஒரு ஆயுதக்



கடத்தலை பிடித்தமைக்காக ஊடகங்களால் பாராட்டப்படுகின்றார். பிருந்தா தொடர்பு கொண்டு ஒரு தொலைக்காட்சி நேர்முகத்திற்கு கேட்ட பொழுது மறுத்து விடுகின்றார். இதன் பின்னர் இவர்கள் இருவருக்கும் முறுகல் நிலை. இவர்கள் இருவரதும் நண்பர்கள் ரஜ்ஜன், பரோமிதா. ரஜ்ஜன் ஒரு பங்கு சந்தையின் தீவிர பற்றாளர். ரஜ்ஜன், பரோமிதா இருவரும் முன்னாள் கணவன், மனைவி. ரஜ்ஜனின் பிறந்த நாளை பரோமிதா ஏற்பாடு செய்கின்றார். அங்கு சந்திக்கும் பொலிஸ் அதிகாரி அபிக்கும், பிருந்தாவுக்கும் நட்பு மலர்கின்றது. இவர்கள் இருவருக்கும் இன்ரநெட் சட்டில் உரையாடும் நண்பர்கள் தாங்கள் தான் என்பது தெரியாது.

பிருந்தா ஒரு ரியல் எஸ்டேட் அதிகாரியின் ஊழலை அம்பலத்துக்கு கொண்டு வர முற்படுகின்றார். இவரது அதிகாரி, பொலிஸ் அதிகாரி அபிக் ஆகியோர் கவனமாக இருக்குமாறு எச்சரிக்கின்றனர். இதற்கிடையில் சட்டில் சந்திக்கும் நண்பர்கள் நேரில் சந்திக்க விரும்புகின்றனர். இவர்கள் இருவருக்கும் தங்களது நண்பர் யார் என தெரிய வரும் பொழுது பிருந்தா கொலை செய்யப்பட்டு விடுகின்றாள்.

நகரங்களில் மேல் தட்டு வர்க்கத்தினர் மத்தியில் ஏற்படும் தனிமையையும், குடும்ப உறவுகளில் உள்ள நம்பிக்கையின்மையையும், வணிக நிறுவனங்களின் மிருகத்தனமான மாபியாவையும் இப்படம் அழகாக பதிவு செய்துள்ளது.

அபிக் இன் மாமியாக வரும் சர்மிளா தாகூரின் பாத்திரம் முக்கியமானது. இவருக்கு தொலை பேசியில் ஒரு தவறான தொலை பேசி வருகின்றது. ‘தவறுக்கு மன்னிக்கவும். ஆனால் உங்களுக்கு அழகான குரல்’ எனத் தொடங்கும் உரையாடல் தொடர்கின்றது. ஒருவரை ஒருவர் தெரியாது. சர்மிளாவிற்கு அழைத்த தொலை பேசி இலக்கம் தெரியாது. அவர்தான் அழைப்பார். சில காலங்கள் நீடிக்கும் இந்த தொடர்பு திடீரென நின்று விடுகின்றது. பல நாட்கள் காத்திருந்தும் பயனில்லை. இதனை இவரே ஒரு தடவை தனக்கு ஏற்பட்ட ஓர் திடீர் உறவு எனக் கூறுகின்றார். தன்னிடம் தனிமையில்லை. முடிவற்ற உறவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன் எனக் கூறுகின்றார்.

பாத்திரங்கள் அனைவரும் தனிமையில் உள்ளனர். அபிக் தனது மாமியாருடன் வாழ்கின்றார். பிருந்தா தனியே உள்ளார். பின்னர் தாய் இவருடன் இணைந்து கொள்கின்றார். மிற்றா, சோவிக் தம்பதிகள். மிற்றா ஒரு ‘மு’. இவர்களும் தனிமையில் தான் உள்ளனர். இவர்கள் திருமணமானவர்கள் தனிமையில் உள்ளனர். கணவனின் வேலையும், ஆண் என்ற பார்வையும், மனைவியை ஒரு பொருளாகவே பார்க்கின்றார். இவர்களிடம் அன்பு இல்லை. ஏன் பிரியவில்லை.? சமூக அந்தஸ்தே காரணம். பில் கிளின்டனின் சில் மிஷங்களின் பின் கிளரி பிரியாமல் இருக்கும் பொழுது இவர்கள் பிரயாததற்கு நியாயம் தேடத் தேவையில்லை. மற்றொரு தம்பதி ரஜ்ஜன், பரோமிதா விவாகரத்தின் பின்னரும், ஒருவரிடம் ஒருவர் அன்பு செலுத்துகின்றனர். எதிர்பார்ப்பில்லாத அன்பு. பரோமிதா கல்கத்தாவில் இருந்து மும்பைக்கு மாற்றம் பெற்று செல்ல விரும்புவதை உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்துகின்றார். உண்மையில் கணவன் மனைவியான அபர்ணா சென், கல்யான் ரே இதில் பிரிந்த கணவன் மனைவியாக சிறப்பாக நடித்துள்ளனர்.

படத்தின் தலைப்புக்கேற்ப ‘முடிவற்ற’ உறவுகளின் சிக்கலை கவிதையாக்கியுள்ளார் இயக்குனர் Aniruddha Roy Chowchury;. இது இவரது இரண்டாவது படம். வழமையான வங்காளப் படங்களைப் போல் உயர் மட்ட ரசிகர்களுக்கான படமிது. படத்தில் கூறப்பட்டுள்ள தனிமை இங்கு எம்மில் பலர் சந்தித்த, சந்திக்கின்ற விடயம். ராகுல் போஸ் ஒரு சிறந்த நடிகர் என்பதை இப் படம் மீண்டும் நிரூபித்துள்ளது.

up in the air படம் முடிந்தவுடன் வேலை இழப்பின் வலியை உணர முடியவில்லை. அமெரிக்க அரசு பிரச்சார படம் போன்றே இருந்தது. இப் படம் முடிந்த போது தனிமை வலியுடன், வணிக மாபியா கும்பல் மீது கோபமும் எழுந்தது. படத்தின் ஆரம்பத்தில் பாத்திரங்களிடமிருந்த தனிமை படத்தின் முடிவிலும் உள்ளது.

Antaheen படத்தை காலம் செல்வத்திடம் பெற்றுக் கொள்ளலாம் 416-731-0752.

Antaheen (2009)
Release date: January 23, 2009
Cast: Aparna Sen (As Paromita), Sharmila Tagore (As Abhik's Unt) Kalyan Roy (As Ranjan), Mita Vashisth (As Shalini Mehra), Shauvik Kundagrani (As Mr. Mehra), Rahul Bose (As Abhik) , Radhika Apte (As Brinda)
Director/Story: Aniruddha Roy Chowdhury
Music Director: Shantanu Moitra
Screenplay: Shyamal Sengupta
Cenematography: Abhik Mukhopadhyay

# நாடற்றவன் நாட்காட்டி

Virtual realms


கடந்த வருடம் யப்பானின் அனிமேசன் இயக்குனர் ஹயாயோ மியசாக்கி (Hayao Miyazaki) மேற்கத்திய பத்திரிகையாளர்களை பெருமளவு கொண்டிருந்த பத்திரிகையாளர்கள் கூட்டத்தை கூட்டியிருந்தார். அவரது பிந்தைய படமான போன்யோ பற்றி பேசுவார் என எதிர்பார்க்கப்பட்டது. அங்கு அவர் பேசுகையில் “All of our young people today derive their pleasure. Entertainment, communication and information from virtual worlds”. “ All of these worlds have one thing in common : They are making young Japanese weak”. Cell phones, emails, video games, television போன்றவை சிறுவர்கள், இளைஞர்களின் இயல்பான திறமையை மழுங்கடிக்கின்றன. இவர்களது கற்பனை வளத்தை இழக்கச் செய்கின்றது. உலகின் ‘நடைமுறையில் மெய்ம்மையான ஆட்சி’ Virtual realms உற்பத்தியில் யப்பான் முன்னிலையில் உள்ளது. யப்பான் மக்கள் வாழக்கூடிய சிறியளவு நிலப்பரப்பையும், மிகவும் நுணுக்கமான பெரியளவு தொழில்நுட்பத்தையும் கொண்ட நாடு. சாமுராய் எனப்படும் போர் வீரர் கலாச்சாத்தை மிகவும் சிறப்பாக கொண்ட நாடு. யப்பானிய கலாச்சரத்தையும். திறமையையும் கூற பல விடயங்கள் உண்டு. பின்னர் உலகின் முதலாவது Digitla answering machine யப்பானால் கண்டுபிடிக்கப்பட்து. Sony Walkman புற சூழலை மறந்து அகத்தை கேட்க வழிசெய்தது. அழகான பூங்காவில் பறவைகளின் ஒலி கேட்காது. பூச்சிகளின் பாடல் கேட்காது, சிறுவர்களின் இசை கேட்காது ஒரு பாடகரின் ஒலி கேட்கும், பாடலால் உருவான கற்பனை உலகம் தெரியும்.

வில்லியம் கிப்சன் புதிய கலாச்சார மாற்றங்கள் தொழில் நுட்பத்தை மையமாகக் கொண்டிருக்கும் என்கிறார். இரண்டாம் உலகம் என்பது தான் இன்றைய இளைஞர்களின் வாழ்வு. இந்த வாழ்வு எமது அன்றாட வாழ்வை பெருமளவு பாதிக்கின்றது. காலையில் எழுந்தவுடன், இமெயில், வெப் நியூஸ் வேலையிலும் நாம் இன்ர நெட்டுடன் செலவிடும் நேரம் அதிகம். பாடசாலையிலும் ஒரு கட்டுரையில் கூறப்பட்டுள்ள விடயதானத்தை விட பவர் பொயின்ட் பிரசன்டேசன் போன்றன குறிப்பிட்டளவு புள்ளியை இடம் பிடிக்கின்றன. நெட்டில் காதலரை தேடி, சட் பண்ணிய பின்னர், நாங்கள் பொருத்தமான தம்பதிகள் என கற்பனை செய்த பின்னர் நேரில் ஒரு ரெஸ்ரோரன்றில் சந்தித்த ஒரு சில மணி நேரங்களின் பின்னர் பல மணி நேர சட்டும் கற்பனையும் வீண் என்பதே இன்று அதிகளவு உண்மையாக உள்ளது. தேசிய இனப்பிரச்சினை தவிர்ந்த நாடுகளில் யப்பான், அமெரிக்கா தற்கொலைகளில் முன்னணியில் உள்ள நாடுகள். இதற்கான மூல காரணங்களில் ஒன்று இந்த இரண்டாம் உலகம். அமெரிக்காவில் இடம் பெற்ற தற்கொலைகளுக்கு இந்த இரண்டாம் உலகம் தான் நேரடிக் காரணம் என நிரூபிக்கப்பட்டுள்ளது. நுகர்வு கலாச்சார ஆய்வாளர் மாக்கியோ பஜிராரோ தெரிவித்த கருத்தின்படி இந்த இரண்டாம் உலகம் தனிமையையும், அந்நியத்தையும் அதிகரிக்கச் செய்வதுடன் ஊக்கப்படுத்துகின்றது. இரண்டாம் உலக சமூகத்திலும் பங்குபற்றுவோர் சிலர் முழுமையுடன் அர்பணிப்போர் சிலர் வருவோர் போவோர். புளக்ஸ்லில் பெரும்பாலும் எழுதப்படும் விடயதானங்கள் ஏனோதானோவானவை. இங்கு ஆசிரியர் இல்லை கட்டுப்படுத்த. இதனால் இந்த இரண்டாம் உலக வாசிகளிடம் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. கனடாவின் மொத்த சனத்தொகையில் 75வீதமானோர் இன்ரநெட் பாவிப்போர். கனடாவின் சனத்தொகை குறைவாயிருப்பினும் கனடா உலகில் 14ம் இடத்தில் உள்ளது மொத்த

தொடர்ச்சி 32ஆம் பக்கம்

விற்பனையாகின்றன!
கனி விமலநாதனின்
மூன்று நாவல்கள்

1. வேற்றுக்கிரக மனிதர்கள்



யார் இந்த வேற்றுக்கிரக மனிதர்கள்? அவர்களின் பின்னணி என்ன? வேற்றுக்கிரக மனிதர்களை சந்தித்தவர்கள் உண்டா? வேற்றுக்கிரக மனிதர்களுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு?

2. பிரபஞ்சம் பற்றிய வியப்பான செய்திகள்

எமது பிரபஞ்சம் எப்போது தோன்றியது? தோன்றியபோது எப்படி இருந்தது? எவ்விதம் இவ்வளவு பெரிதாக ஆகியது? பிரபஞ்சத்தின் முதல் நட்சத்திரம் எவ்வாறு தோன்றியது?

3. இனம்தெரியாத பறக்கும் தட்டுகள்

பறக்கும் தட்டுகள் என்பது உண்மைதானா? அவை எங்கிருந்து வருகின்றன? பறக்கும் தட்டுகளை கண்டவர்கள் உண்டா?

பிரபஞ்ச இரகசியங்களை தெளிவு படுத்தும் நூல்கள்

கிடைக்குமிடம்: முருகன் புத்தகசாலை

*1241 Ellesmerer Road - Midland & Ellesmere*
*GTA Square - 5215 Finch Ave. E., Middlefield & Finch*



நிரு
பிராண்ட்
Niru BRAND
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
Niru BRAND

211

நகைச்சுவைத் தொடர்


# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



காதல், காதலிக்க நேரமில்லை, காதலர் தினம்

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன.
“இன்னார்க்க இன்னாரென்று எழுதி வைத்தானே தேவன் அன்று...”
“கன்னியர் கடைக்கண் காட்டிவிட்டால் காளையர்க்கு மலையும் கடுகளவு...”
“காதலே போ..போ.. சாதலே வா.. வா”
“அண்ணலும் நோக்கினாள் அவனும் நோக்கினாள்.”
ராமர் சீதையை மிதிலையில் சந்தித்த காட்சியை கம்பர் இாமாயணத்தில் இப்படித்தான் வர்ணித்தார்.



இன்று ரொறொன்ரோ உதவி மேயருக்கு போட்டியிட இருந்தவரை பதவியையும் மானம் மரியாதையையும் சின்னாபின்னப் படுத்தியதும்...
வெள்ளைமாளிகையில் கிளிங்ரனையும் மொனிக்கா லிவிங்சியையும்
ரகளைக்குட்படுத்தியதும் காதல் தான்.



காதலுக்கு நினைவாக என்றும் எம் கண்முன்னால் நிற்பது தாஜ்மகால்.
8வது சாள்ஸ் மன்னன் காதலுக்காக முடிதுறந்தான்.

முன்னர் காதலைத்தடுக்க பெற்றோர் பல தடைகளையும் போட்டார்கள்.
காதல் கடிதத்தடை, நேரில் பார்க்கத்தடை, திருவிழா கலை நிகழ்சிகள் எங்கும் பாதுகாப்பு.

இன்று எல்லாம் தவிடுபொடி..
இன்ரநெற் ஈமெயில். காதலி குறட்டை விடுவதையே காதலன் (காதலிக்கு) ரகசியமாக கமெறாவில் பாாக்கக்கூடியவசதியே வந்துவிட்டது.

வாழ்க நாகரிகம்.



பாவம் பெற்றோர்கள்
அழகுத்தேவதை இளவரசி டயானாவின் மரணத்தின் பின்னணி காதல்
திருமாலையே கணவனாகக் கனாக்கண்டவள் ஆண்டாள்
ஆண்டாளின் பக்திக்கனவு
காதலைக் கனவில் கண்டவள் ஆண்டாழ்.



மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றுாத
முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் தம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி - நான்!

என பாடுவது ஆண்டாள். அதாவது சூடிக்கொடுத்த நாச்சியார் என ஆண்டாள் கதை படித்தவர்களுக்குத் தெரியும்.

காதலுக்குக் கண்ணில்லை. ஆனால் பெத்து வளர்த்த பெற்றோர்க்குக் கண்ணுண்டு.

உலகரின் மனம் பல வருடங்கள் பின்னே சென்றது. ரூபன் - ரூபி காதலும், உலகரும் ரூபனும் பிராங்பேட் பேரம்பலமும் பட்ட வாக்குவாதமும். அவர்களின் காதலை முறியடிக்க உலகர் பட்ட பாடு?






காதலைத் தடுப்பது எப்படி?
காதல் திருமணத்திலும் சீதனம் வாங்கலாமா? ஏன தமிழ்வாணனின் தலையங்கங்களில் புத்தகங்கள் கிடைக்குமா? என அலைந்ததில் தோல்விதான். அதாவது புத்தகங்கள் கிடைக்கவில்லை. அதுதான் தோல்வி. ஆனால் இன்று ரூபன் ரூபி காதலும் திருமணமும் வெற்றியடைந்து பல வருடங்களாகிவிட்டன.

உலகரின் மனம் கஜனி சூரியாவின் நிலை தான். எதைக்கதைப்பது?.
சிவராத்திரியையா ?
காதலர் தினத்தையா?



அல்லது செக்கண்ட்புளோர் செல்லம்மா அடிக்கடி யாரிடமாவது ரெலிபோனில் சரத்பொன்சேகாவை ஏன் பிடிச்சவையாம் அதுகும் ராசபக்ச வெளிநாட்டிலை நிக்கேக்கை அவருக்குத்தெரியதாம். கைதுசெய்து போட்டினமாம். மிருகத்தை போல இழுத்துக் கொண்டு போச்சினமாம். எங்கடை ஆக்களை மிருகங்களைச் சுடுகிற மாதிரி சுடேக்கை ஒருதரும் ஒண்டும் கேக்கேல்லை. என்று செல்லம்மாவின் அரசயில் அரசலை பொறுக்கமு டியாவிட்டால் செல்லம்மா உந்த ரெலிபோனை வை உலகண்ணைக்கு கோல் வந்தாலும் என்று சொல்லி அரசியல் வேகத்தைக் குறைத்துவிடுவா ஆட்டிலறி அன்னம்மா.

சிவராத்திரி இன்றா நாளையா என்று மண்டையைப்போட்டு குழப்பி தூக்கமின்றி சிவராத்திரி தினத்தன்று மறந்துபோய் தூங்கியவர் பலர். அதில் உலகரும் ஒருவர்.
ஆசையே அலைபோல நாமெல்லாம் அதன்மேலே ஓடம்போலே வாழ்ந்திடுவோமே வாழ்நாழிலே.
மன்னாரிலை மாதோட்டத்திலை நாங்கள் நித்திரை முழிச்சகாலம்போய் இப்ப ஆமிக்காரர் ஆந்தைபோல முழிச்சுக்கொண்டிருக்கினம்.



சிவராத்திரி சிவராத்திரி
உலகண்ணை தேவையில்லாததுக் கெல்லாம் எங்களைக் கதைக்க விடாமல் பேசுவியள். இப்ப ஏன் பேசாமல் இருக்கிறியள்.
குண்டு விழுந்ததைக் கண்டும் காணாத உலகநாடுகள்,
செல் விழுவதை செவிசாய்காத சேவை நலம் பேசும் நாடுகள்,
ஆட்டிலெறி விழுமிடத்தில் நிற்காது விலத்தி நில்லுங்கள் என்று ஆறுதல் கூறும் அழிவிற்கு ஆதரவு தரும் நாடுகள்,
தடை செய்யப்பட்ட அழிவுக்குண்டுகளை அள்ளி வீசுவதை பார்த்த பின்னும்

இப்ப இது போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா
என தேர்தல் காலத்தில் கத்துறது போல கேக்கிறது போல கிடக்கு என மூச்சுவிடாமல் பேசி முடித்தா ஆட்டிலறி அன்னம்மா.

செக்கண்ட்புளோர் செல்லம்மா வழமைபோல தொடங்கினா தொட்டிலுமாட்டி பிள்ளையும் கிள்ளுவினம்.

# Up in the air...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

பாவனையாளர்களின் வரிசையில். இது வளர்ந்த நாடுகளில் இன்ரநெட் பாவனை அதிகமாக உள்ளதை காட்டுகின்றது.

2டி லவ் என்ற நூலின் ஆசிரியர் லிசா கட்டயமா குறிப்பிடுகையில் “a man frees himself from the expextions of an ordinary human relationship and expressed his passion for a chosen character without fear of being judged or rejected” என்கின்றார்.. பெருமளவு ஆய்வாளர்களின் கருத்து இன்ரநெட் உலகில் கொமிட்மென்ட் இல்லை, இரண்டாவது பொய்மையை உருவாக்கலாம். சொந்த பெயரில் எழுத வேண்டும் என்ற அவசியம் இல்லை.

எனவே நாங்கள் எங்களது இளைஞர் சமூகத்துடன் பெருமளவு நேரத்தை செலவிடவேண்டும். அதுவே அவர்களை இயல்பு வாழ்க்கைக்கு கொண்டுவரும்.

## பயங்கரவாதம்

I am not ashamed of the west calling me a terriost – Abu bassam shari
ரோம கடவுள் ஜனுஸ்க்கு இரண்டு முகங்கள் உண்டு. ஒன்று முன்பக்கம், மற்றது பின் பக்கம்.

ஜோர்ஜ் வோசிங்டனை பிரித்தானியர் பயங்கரவாதிகள் என்றனர். அல்ஜீரிய போராளிகளை பிரான்ஸ் சொன்னது. காந்தி, மண்டலாவும் இந்த பட்டியலில் அடங்குவர்.

அபு பசாம் செரிப் ஓர் பாலஸ்தீனிய தலைவர். 1972ல் நியு யோர்க்கை மையமாகக் கொண்ட மூன்று விமானங்கள் கடத்தப்பட்டன. இவர் சார்ந்த People front of liberation of Palestine. இதில் பயணித்தோர்களில் பெண்கள் குழந்தைகள் உடனடியாக விடுவிக்கப்பட்டனர். இஸ்ரேல் பிரசைகளும், இஸ்ரேலுடன் தொடர்பானவர்களும் மாத்திரமே பயணக்கைதிகளாக வைத்திருக்கப்பட்டனர். இந்த கடத்தலின் மூளை அபு சாம். இவர் அண்மையில் பிபிசிக்கு அளித்த பேட்டியில் “yes they were victims – But victims who didn't care about others being victimized by their own army or money.” We are victims too and when it comes to the issue of victimization I always ask the questions who disposses whom?

இந்தச் சம்பவம் நடைபெற்றபோது அப்போதைய இஸ்ரேலிய பிரதமர் கோல்டா மேயர் குறிப்பிட்டது குறிப்பிடத்தக்கது. இது எமது சமூகத்தின் இன்றைய நிலையை எடுத்துக்காட்டுகின்றது. It was not as though there was a Palestine people in Plaestine considering it self as a Palestine people and we came and threw them out took their country away from them../ .... They did not exist...

கடந்த மாதம் ரொரண்ரோ ஸ்ரார் பத்திரிகையில் கடந்த பத்தாண்டின் மிக முக்கிய நிகழ்வுகளில் மே 18ம் நாள் நடைபெற்ற நிகழ்வுகளை குறிப்பிடப்பட்டிருந்தன. இதற்கு காரணமாகவிருந்த தளபதி- முன்னாள் இலங்கை இராணுவ தளபதி இன்று சதி என்ற பெயரில் சிறையில் உள்ளார்.

அமெரிக்காவின் நண்பனான சதாம் பின்னர் பயங்கரவாதியாக மாற்றப்பட்டு ஓடி ஒளிந்து தூக்கிலிடப்பட்டார். இன்று பயங்கரவாதத்தை வரையறுப்பவர்கள் உண்மை பயங்கரவாதியான அமெரிக்கா.


யோகா சோதிடம்



• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com




# ஈழத் தமிழியம்

**என் இனிய நண்பர்களே!**
**வாழ்த்துக்கள்**

**நலம்பெறப் பிரார்த்திக்கிறேன்.**

ஈழத்து உணவு இப்பொழுது நமக்குக் கிடைப்பதில்லை. உணவுப் பொருட்களை வாங்கி ஈழத்து உணவாகச் சமைத்து உண்கிறோம். ஈழத்துப் பெயர்களை அந்த உணவுகளுக்கு சூட்டி மகிழ்கிறோம். பல பொருட்களுக்கும் அப்பொருள்களால் பெயர்பெற்ற ஊர்களை நினைவு படுத்தும் வகையில் ஊரைச்சொல்லி பெயரை உச்சரிக்கிறோம். ஈழத்து உணர்வுகள் உணவுகளாலும் உருவாக்கப்படுகிறது. இவற்றிற்கெல்லாம் மேலாக பச்சைமிளகாய் கடித்தால், தக்காளி பழத்தைக்கடித்தால் முருங்கைக் கீரையை உண்டால் நமது ஊர் மணமும் உறவு மனமும் சட்டென வந்துபோவதை அவதானித்திருப்பீர்கள். உடலின் கடின உழைப்பின்போது தாயில் குடித்த பால் நாசியில் மணக்கும் என்பார்கள் நமது ஊர்களில். ஈழம் என்ற நமது தாயகம் குறித்த மனவேதனையின் உச்சத்தில் நமது மண்ணின் மணம் நாசியில் மணந்ததை உணர்ந்திருப்பீர்கள். தமிழ் மணம் தமிழ் மனம் என்ற சொற்பிரயோகம் நம்மிடையே புளக்கத்தில் உள்ளது. இந்த மனத்தோடு ஒரு குணத்தையும் வளர்த்தவர்கள் நமது முன்னோர்கள். இவையெல்லாம் திரண்ட வடிவமே ஈழத்தமிழியம் என்பது.

தமிழ் ஒரு மொழிதான். இந்த மொழி வழிவந்தவர்களின் வாழ்வும் பெருமையும் பீடும் வியக்கத்தக்கவை. இவற்றினை நாம் மட்டும் உணரவில்லை. தமிழியலைப் படித்துப்புரிந்து கொண்டே வேற்று மொழியியலாளர்களும் அறிக்கை செய்திருக்கிறார்கள். வேற்று இனமொழி யியலாளர்கள் இந்தியத் தமிழகத்தையும் இந்திய இலக்கியங்களையும் கல்வெட்டுக் கள் மெய்க்கீர்த்திகள் முதலியவற்றையும் வைத்துக்கொண்டு தமிழ் இயம்பற்றிக் கூறியவை நூல்களாக வெளி வந்திருக்கின்றன.

அவர்கள் ஈழத்து தமிழியம்பற்றி அறிந்திருப்பார்களேயானால் ஈழத் தமிழியம் அவர்கள் உச்சிமேல் வைத்து மெச்சும் இயமாக மிளிர்ந்திருக்கும். ஈழத்தமிழியத்தில் தமிழ் மொழியின் தாய்மை செம்மை மட்டுமல்ல ஒரு வாழ்வும் வளமும் இணைந்திருக்கிறது. 'இருந்தமிழே உன்னால் இருந்தேன். இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என்று தமிழ் விடுதூது சொல்கிறது. இருந்தமிழால் இருந்தது மட்டுமல்ல அத்தமிழால் ஒரு வாழ்க்கையை இருத்தியதும் தமிழியத்தின் சாதனை என்பேன்.

நண்பரே!

'என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே' என்றார் திருமூலர். தமிழுக்கு அன்பு என்றும் ஒரு பொருள் உண்டு. தமிழ் செய்தல் என்பது அன்பு செய்தலாகவும் கருதப்படுகிறது. பிற்காலக் கவிஞன் பாரதிதாசனும் தமிழ் மொழியை அனுபவித்த ஆனந்தத்தில் தமிழுக்கும் அமுது என்று பெயர் என்றார். மொழி அன்பை இறைவனிடத்திலும் மக்களிடத்திலும் காட்டி ஈழத்தமிழியம் வளர்த்திருக்கிறது. ஈழத்தமிழியத்தின் இதயநாதம் அன்பாகவே இருந்திருக்கின்றது. ஈழத் தேசியத்தின் முதல் அலகான குடும்பம் கூடி வாழ்தலைக் குறிக்கோளாக்கியது. கூடிவாழ்ந்தால் கோடி நன்மை என்பதை அனுபவமாக்கியது. ஒற்றுமையின் உறுதியும் அதன் பெறுமானமும் தமிழியத்தின் அச்சாணியாய் இருந்தது. ஈழத்தமிழியத்தின் வாழ்க்கை முறைகளையே ஈழத்து அறிஞர்கள் மேடைகளில் பேசினார்கள். இதழ்களில் எழுதினார்கள். கதை - கவிதை - கட்டுரை - நாடகம் ஆகிய ஊடகங்களில் ஈழத்தமிழியமே உள்ளோட்டமாய் உயிரோட்டமாய் இருந்திருக்கிறது.

இன்று சூழல் பாதுகாப்புப்பற்றிச் சிந்தனைகள் எழுந்துள்ளன. இது புறச்சூழல் பற்றியதே. சுத்தம் சுகாதாரம் ஆரோக்கியம் என்று நீண்டபட்டியல் இட்டு இயங்குகின்றோம். ஈழத்தமிழியம் அகச்சூழல் பற்றிய சிந்தனை-களை வளர்த்தது. இது புறச்சூழல் சுத்தங்களுக்கும் உதவியது. மனித மனத்தின் மேம்பாடு அகத்திலும் புறத்திலும் சுமுகமான சூழ்நிலைகளை அமைத்தன. அமைதியான சூழ்நிலையில் ஆன்மீகம் அரும்பி வளர்ந்தது. வாழவைத்து வாழ்தல் என்னும் மன நாகரிகம் தேசத்தின் குரலாய் ஒலித்தது. மனச்சாட்சி தர்மம் நியாயம் கடவுளுக்கு கணக்கு கொடுப்பது என்ற மனத்தால் வாழும் வாழ்வு ஈழத்தமிழியமானது ஒருவரின் வயிற்றில் அடிக்கக்கூடாது. ஒருவரின் வாழ்க்கையை கெடுக்கக்கூடாது என்ற உன்னத உணர்வுகள் ஆத்மார்த்தமாய் உறைந்திருந்தது.

இத்தகைய ஈழத்தமிழியமே ஏழாம் நூற்றாண்டின் திருஞான சம்பந்தரையும் ஒன்பதாம் நூற்றாண்டின் சுந்தரமூர்த்தி நாயனாரையும் ஈர்த்து இழுத்துப் பாடல்களைப் பாட வைத்தது. சம்பந்த மூர்த்தி நாயனார் திருக்கேதீஸ்வரநாதரையும் திருகோணமலை யில் கோயில் கொண்டிருக்கும் கோணேஸ்வரனையும் பாடிய பாடல்களில் ஆலயங்கள் ஈழத்தில் சமுதாய மையங்களாய் இருந்து தமிழியத்தை கட்டிவளர்த்த பாங்கினைப் பார்க்கலாம். 'மாதோட்டத்து அடிகள் ஆதரித்திருந்த கேதீச்சரம்' என்றார். எல்லையில் புகழ் எந்தைகேதீச்சரம் இராப்பகலாக அன்பர்கள் நினைந்து நினைந்து வாழ்ந்த வண்ணம் காட்டினார். திருக்கோணமலைக் கோணேஸ்வரனைப் பாடியபோது 'தாயினும் நல்ல தலைவர் என்று அடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்' என்றும் 'குருவாய் நின்றார் குரை கழல்வணங்க, கோணமாமலை அமர்ந்தாரே' எனவும் பாடிய அடிகளை நீளநினைந்து பார்த்தோமானால் ஈழத்தமிழியத்தின் வளர்ச்சிக்கு உலகியற்றி யான் என்னும் இறைவனின் அருளிப்பாடும் இருந்தமை புலப்படும்.

சுந்தரர் திருக்கேதீச்சர நாதரைப் பற்றிப் பாடிய பாடல்களிலும் ஈழத்தமிழ் இனத்தை, ஈழத்தமிழியம், ஈழத்தமிழ்த்துவம் வளர்ந்து வளம் பெற ஈஸ்வர கிருபையும் இருந்தமையை அறியமுடிகிறது. 'பத்தாகிய தொண்டர் தொழும்பாலாவியின் கரைமேல் செத்தார் எலும்பணிவான் திருக்கேதீச்சரத்தானே!' எனவும் அங்கத்துறு நோய்கள் அடியார் மேல் ஒழித்தருளி பங்கம் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல் தெங்கம் பொழில் சூழ்ந்திருக்கேதீச்சரத் தானே' என்று பாடிய பாடல்களில் பாடும்பொருளாக இருந்த அடியார்கள், தொண்டர்கள் குருவாய் ஏற்றுக்கொண்ட மாணவர்கள் இவர்களின் ஆன்மீகமேம்பாடு மனித நேயம் என்பவைதாம் ஈழத்தமிழியமாய் எழுந்தது. சம்பந்தரையும் சுந்தரரையும் அக்கரைச் சீமையான இராமேஸ்வரத்தில் நின்றபடி இக்கரைச் சீமையின் பாலாவியின் கரையையும் குரைகடலோத நித்திலம் கொழிக்கும் கோணமாமலையையும் நோக்க வைத்த திருவருளின் சித்தம் சிந்தனைக் குரியது. இதுமட்டுமா? திரு நீற்றுப்பதிகத்தில் திருஞானசம்பந்தர். 'இராவணன் மேலது நீறு' என்றமை ஈழ தமிழியத்தின் நீதி நியாயம் பற்றிய கணிப்பாகும்.

தனிமனிதன், குடும்பம், உறவு, ஊர், பிரதேசம், மாகாணம், தேசம், தேசியம் என்ற படிமுறை வளர்ச்சியை ஈழத்தமிழியம் வளர்த்தது. வாழ்ந்து காட்டியது. இந்த வாழ்க்கையை வியந்த அங்கீகரித்த திருக்கோணமலைப் பதிகமும் திருக்கேதீச்சரப்பதிகங்களும் இன்றுவரை ஈழத்தமிழர்களால் போற்றப்படுகிறது. புலம் பெயர்ந்து சென்றுள்ள நாடுகளிலும் ஈழத்தமிழர்கள் இப்பதிகங்களை நினைவு கூர்ந்து தேசத்தின் கானங்களாய் கொண்டாடுகிறார்கள்.

ஈழத்தமிழ் மக்களிடம் கருத்து வேற்றுமை இருந்தன. அபிப்பிராய பேதங்கள் இருந்தன. அவை மனித வாழ்வைப் பாதித்ததில்லை. கலந்து பேசிப்பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதும் முரண்பாடுகளை இல்லாது போக்கி இணக்கப்பாடுகளை உருவாக்கு வதும் ஈழமக்களின் வாழ்க்கைப் போக்காய் இருந்தது. கருத்து வேறுபாடுகளோ, அபிப்பிராய பேதங்களோ குடும்பங்களை மனிதர்களை பிரித்து வைக்கவில்லை. பிளவுபடுத்தவில்லை. 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்ற மகாமந்திரம் ஈழத்தமிழியத்தின் மூல மந்திரமாய் எல்லாமக்களின் வாய்களிலும் தவழ்ந்தது. ஈழத்தமிழியத்தின் உன்னதமான வாழ்க்கை முறைக்கு ஒரு உதாரணம் சொல்லுகின்றேன்.

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை நாடாளுமன்றத் தேர்தல் வரும். அத்தேர்தலில் பல கட்சிகள் என்றும் கருத்துக்கள் என்றும் பிரதேசமே பிரிந்து நிற்கும். ஒரு குடும்பத்தவர்களே கொள்கை என்றும் நட்பு என்றும் வேறு வேறு அமைப்புக்களில் இணைந்து செயல்படுவார்கள். தேர்தல் முடிந்ததும் குடும்பம், உற்றார், உறவினர், அன்பு, ஆதரவு, பாசம் என்று இணைந்து விடுவார்கள். தண்ணீர் அடித்து தண்ணீர் விலகுமா என்று பேசி அடிபட்டு இரத்தம் சிந்திக் காயம் பட்டவர்களையும் கட்டித்தழுவிக் குலாவச் செய்திடுவார்கள். பெரியோர் கடமை முதியோர் முயற்சிகள் உறவுகளை இணைத்து விடுவதாகவும் சேர்த்து வைப்பதாகவும் இருந்தது. இந்த மேலான பண்பு தொடர்வது இனசனம் தேசம் தேசியம் பண்பு நாகரிகம் கலாச்சாரம் முதலியவைக்கும் உறுதுணையாகும். இன அடையாளத்தை வெளிப்படுத்த ஈழத்தமிழியம் இதயத்தில் இறங்கினால் எல்லாம் இலகுவாகும்.

இந்திய தமிழகத்தினருக்கு இருந்தது போன்ற சங்க இலக்கியச் செல்வங்களோ, பக்தி இயக்கத்தின் பாடல்களோ, சங்கம் மருவிய காலத்து ஆக்கங்களோ ஈழத்தமிழருக்கு இருக்கவில்லை. ஈழத்துப் பூதன்தேவனார் போன்ற ஒரு சிலரின் ஆக்கங்கள் சங்க இலக்கியச் செல்வங்களோடு சேர்க்கப்பட்டன. தமிழ்த்துவத் தொடர்பால் அவ்விலக்கியங்களை இலக்கணங்களை பிற்காலத்திலே தான் ஈழத்தமிழர்கள் கண்டார்கள் - கற்றார்கள் - போற்றினார்கள். இலக்கியங்கள் காட்டிய செம்மையை சீரை தமது வாழ்வில் கலந்து ஈழத்தமிழியத்துக்கு மெருகும் கனதியும் ஏற்றினார்கள். முத்தமிழ் விழா, சிலப்பதிகார விழா, திருவள்ளுவர் விழா, சேக்கிழார் விழா, கம்பன் விழா, பாரதி விழா என விழாக்களை எடுத்து இந்தியத் தமிழ் அறிஞர்களையும் அனைத்து ஈழத்தமிழியத்துக்கு நன்மையும் இந்திய தமிழினத்தோடு நட்பும் உறவும் ஏற்படுத்தினார்கள். இத்தகைய தொடர்புகள் இனப்பற்றையும் உருவாக்கின. நாம் தமிழர் என்ற உணர்வையும் உண்டாக்கின.


ஈழத்து இலக்கியங்களின் ஆரம்பகாலப் படைப்புக்கள் அன்பு, பக்தி, இரக்கம், நன்றி உணர்வுகளைப் பற்றியே பேசின. பிற்காலத்தில் மறுமலர்ச்சி முற்போக்கு, நற்போக்கு என்ற கோட்பாட்டுச் சங்கத்தினரும் முன்னோர் மொழிபொருளை விவாதித்தும், அலசியும் மறுவாசிப்பு செய்தும் தாம் விரும்பிய திருப்பங்கள் கோரிய போதும் ஈழத்தமிழ் இயக்கத்துக்கு இசைவாகவே கருத்துக்களை அமைத்தனர்.

ஈழத்தமிழ் இயத்தின் இலக்கிய, இலக்கண, பக்தி, பண்பாட்டு நிலைகளுக்கு வடக்கில் ஆறுமுகநாவலரும் கிழக்கில் விபுலானந்த அடிகளும் அடிகோலினார்கள். இவ்விருவரும் சிதம்பரத்தில் களம் அமைத்தமையும் காரிய மாற்றியமையும் வரலாறாகும். தமிழைப்படி, கடவுளை நம்பு என்ற இருவாக்கியங்களை அன்று அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்திலே வைத்து அரங்கநாதன் என்ற சிறுவனுக்கு கூறி விபுலானந்தர் ஆசீர்வாதித்ததும் பின்பு அச்சிறுவனே குன்றக்குடி அடிகளாராக மலர்ந்து சமய மறுமலர்ச்சி கண்டமையும் பிற்காலத்தில் ஈழத்தமிழியத்திற்கும் ஈழத்தேசியத்துக்கும் ஆதரவாய் அனுசரணையாய் விளங்கியமையும் பதிவுக்குரியதே.

மேற்குறித்த இரு பெரியார்களின் வழி நின்றே வடக்கில் பண்டிதமணி கணபதிப்பிள்ளையும் கிழக்கில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை யும் தமிழியத்தின் தனியான உன்னதங்களை வளர்த்தனர். உலகத்தமிழ் ஆராச்சி மன்றம் கண்டு 'உலகத்தமிழ் ஆராச்சி மாநாடுகளை நடாத்தி ஈழத்தமிழியத்தை உலக அறிஞர்களும் அறிந்து கொள்ளச் செய்த சுவாமி தனிநாயக அடிகளாரை மறக்க முடியுமா?

நண்பா! கடிதம் நீண்டு விட்டதா? என்ன செய்வது சில விடயங்களை உங்களுக்கு நினைவுபடுத்தவும் வேண்டும். புதியவர் களுக்கு அறிவுறுத்தவும் வேண்டும். காலமாறுபாட்டால் தேசமாறுபாட்டால் ஈழத்தமிழியத்தின் இருப்புக்கும் அடையாளத் திற்கும், சுயநிர்ணயத்திற்கும் சோதனை ஏற்பட்டுவிட்டது. இதனைக் கூட சத்தியம் அகிம்சை விரதம் நோன்பு என்ற வழிகளால் மாற்ற நினைத்தார்கள். யார் செய்த தீவினை இங்ஙனமே வந்து மூண்டதுவோ என்றபடி நமக்கு சோதனை மேல் சோதனைதான். வேறு என்ன?

பிற பின்பு.



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

# 'சினிமாவுக்கு வியாபார...

28ஆம் பக்கத்தொடர்ச்சி



## நேர்காணல்: பாலு சத்யா

கேரக்டர் பண்ணியிருக்காரே!'ன்னு அந்த பாத்திரத்தை தேர்ந்தெடுத்ததுக்காகவே நிச்சயம் அவரைப் பாராட்டுவாங்க. அதுதான் இந்தப் படத்துல அவருக்குக் கிடைக்கிற முதல் பாராட்டா இருக்கும். அதுக்கப்புறம் அவருக்கான உழைப்புக்கு வெவ்வேற தளத்துல இருந்து பாராட்டுகள் வரும்."

ஒரு நல்ல சினிமா வியாபாரரீதியா வெற்றியடையாம போகறதுக்கு நிறைய வாய்ப்பு இருக்கு. இப்போ 'சுப்ரமணியபுரம்' படத்தை நான் ஒரு வர்த்தகரீதியான படமாத்தான் பாக்கறேன். அதே சமயம் சந்தோஷ் சிவனோட 'தஹான்' படமோ, 'காஞ்சீவரம்' படமோ நல்ல படமா அடையாளம் காணப்படுது. ஆனா, அதைப் பத்தின பேச்சே இங்க அதிகமா இல்லை. ஒரு நல்ல சினிமாவை வியாபார ரீதியா வெற்றி அடைய வைக்கமுடியுமா? நீங்க என்ன நினைக்கிறீங்க?

"எல்லா இயக்குநர்களுமே அவங்களோட பார்வையாளர்கள் யாருன்னு முடிவு பண்ணிட்டுதான் படம் எடுக்கறாங்க. சரியா? சந்தோஷ்சிவன் என்னிக்குமே வெகுஜன மக்களுக்காக படம் எடுக்கறதில்ல. அவர் ஏதோ விருது கொடுக்குற சர்க்கிளுக்கு, அது இதுக்குன்னு படம் பண்றார். 'காஞ்சீவரம்' படமும் அப்பிடித்தான். பிரியதர்ஷன் 'இந்தப் படத்தை ரிலீஸ் பண்ண மாட்டேன்'னு சொல்லிட்டுத்தான் படமே எடுத்தார். அவருக்கு அந்தப் படத்தை ரிலீஸ் பண்ற எண்ணமே இல்ல. அது திரைப்பட விழாக்களுக்காக எடுத்த, ஆசைக்காக எடுத்த ஒரு படம். அந்தப் படம் ஜனங்ககிட்ட போய் சேர்ந்தா என்ன, சேரலைன்னா என்ன? அந்தப் படத்தை எடுத்த இயக்குநரோட விருப்பமே அதை ஜனங்ககிட்ட போய் சேர்க்கறதில்ல.

வெகுஜன மக்களுக்கு மட்டுமே படம் பண்ணனும்னா, அதையும் ஒருபக்கம் பண்ணிக்கிட்டே இருக்கலாம். வெகுஜன மக்களுக்கும் படம் பண்ணி, அதை ∴பெஸ்டிவல் சர்க்யூட்டுக்கும் கொண்டு போகணும்னா, அதுக்கான முயற்சியில நாம இறங்கியாகணும். அப்புறம், பத்து வருஷத்துக்கு முன்னாடி இந்திய சினிமா மேலயும், தமிழ் சினிமா மேலயும் உலகத்துக்கு இருந்த பார்வை இன்னிக்கி நிறைய மாறியிருக்கு. அமீரோட மூணு படத்துல ரெண்டு படம் சர்வதேச திரைப்படவிழாவுல ஜெயிச்சிருக்கு. பெர்லின் திரைப்பட விழாவுல 'பருத்திவீரன்' படத்தைப் பார்த்த ஜூரிகள் 'சிறந்த இயக்குனர் அமீர்'னு ஸ்பெஷலா குறிப்பிட்டிருக்காங்க. எல்லாருமே தமிழ் சினிமாவை கவனிக்க ஆரம்பிச்சிருக்காங்க. இதெல்லாமே தமிழ் சினிமா எடுத்து வைக்கிற சிறப்பான காலடித்தடம்னு சொல்லலாம். 'பருத்திவீரன்' மாதிரி அடுத்தடுத்து சில முயற்சிகள் எல்லாம் வந்துக்கிட்டுதான் இருக்கு. இன்னொரு பக்கம், தமிழ் படங்களை சர்வதேச திரைப்படச் சந்தைல சேர்க்கறதுக்கான முயற்சிகள் நடந்துக்கிட்டு இருக்கு. அதுக்கு சுஹாசினி மாதிரி ஆட்கள் ரொம்ப முயற்சி செய்யறாங்க. என்னை ஒரு நாள் கூப்பிட்டு பேசினாங்க. 'என்னோட ∴பிரெண்டு ஒருத்தர் ஜெர்மன்லருந்து வர்றாங்க. அவங்ககிட்ட உங்க படத்தைக் குடுங்க. அவங்களை பாக்கச் சொல்றேன். நல்லா இருந்துச்சுன்னா, அவங்க அதை லண்டன்ல இருக்குற சேனல் 4 க்கு வாங்கிக்குவாங்க.' இது மாதிரி அவங்க நிறைய பேருக்கு செய்யறாங்க. நிறைய பேரை கோ-ஆர்டினேட் பண்றாங்க. இந்த மாதிரி தமிழ் சினிமாவுல பல விஷயங்கள் நடந்துக்கிட்டு இருக்கு."

தமிழ் சினிமா ஆரோக்கியமான திசையை நோக்கி போய்க்கிட்டு இருக்குங்கிறீங்களா?

"'ஆரோக்கியமான திசை'ங்கறதே ஒரு கேள்விக்குறியான விஷயம். பத்து வருஷத்துக்கு முன்னாடி இருந்த ஆரோக்கியம் இன்னிக்கி ஆரோக்கியமே கிடையாது. முதல்ல சாதாரண உப்பு சாப்பிடச் சொன்னாங்க, அப்புறம் ஆரோக்கியத்துக்காக அயோடெக்ஸ் உப்பு சாப்பிடச் சொன்னாங்க. இன்னிக்கி என்னடான்னா, அயோடெக்ஸ் உப்பு சாப்பிடவே கூடாதுன்னு சொல்றாங்க. அதனால, ஆரோக்கியம்ங்கற வார்த்தைக்கான அர்த்தமே ஒவ்வொரு காலத்துல வெவ்வேற மாதிரி மாறிடுது. நாம சரி, தப்புங்கற சிக்கலுக்குள்ள எப்பவுமே போய் மாட்டக்கூடாது. வெகுஜன மக்களுக்கு ஒரு வரையறை இருக்கு. அவங்களோட வரையறைக்குள்ள வர்ற படங்களுக்கு அபாரமான வரவேற்பு குடுப்பாங்க. இன்னிக்கி 'பதோர் பாஞ்சாலி'யையோ, 'உதிரிப் பூக்கள்' படத்தையோ பாக்கச் சொன்னா பாக்க மாட்டாங்க. நாம ஒரு சின்ன வட்டத்தைப் போட்டு இதைத்தான் அவங்க ஏத்துக்குவாங்கன்னு சொல்றோம்னு வைங்க. அதைவிட ஒரு பெரிய வட்டத்தை அவங்க ஏத்துக்கத் தயாரா இருக்காங்க. புது முயற்சிகள் எல்லாத்தையுமே அவங்க ஒரு தடவை பாத்துடுறாங்க. நல்லா இல்லைன்னு சொல்றதில்லை. 'கஷ்டப்பட்டு எடுத்துருக்கான்யா! நாம நல்லா இல்லைன்னு சொல்லக்கூடாது'ன்னு சொல்ற அளவுக்கு மக்களுக்கு அக்கறை இருக்கு."

இன்றைக்கு நிறைய இளைஞர்கள் சினிமாவுக்கு வர்றாங்க. அதில் ஒரே ஒரு படத்துல உதவி இயக்குநரா வேலை பார்த்ததுக்கு அப்புறம், நம்மளாலயும் படம் பண்ண முடியும்னு படம் பண்ண வர்றவங்களும் இருக்காங்க. எந்த அனுபவமுமே இல்லாம படம் இயக்கறவங்களும் இருக்காங்க. இதைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?

"எந்தக் கலையா இருந்தாலும் முதல்ல அது கலை. அப்புறம்தான் அது வியாபாரம். ஆனா, சினிமா முதல்ல அறிவியல், அப்புறம் வியாபாரம், அதுக்கப்புறம்தான் கலை. சினிமாவுல, அறிவியலோடயும் வியாபாரத்தோடயும் சரியான விகிதத்துல கலையம்சம் சேரும்போதுதான் எல்லாமே சாத்தியப்படுது. மற்ற எந்தக் கலைத்துறையையும்விட சினிமாவுக்கு வியாபார முக்கியத்துவம் அதிகமா இருக்கு. ஒரு குறும்படம் எடுக்கணும்னாக்கூட, குறைஞ்சது பத்து லட்ச ரூபா வேணும். அப்போத்தான் நல்ல தரமான குறும்படம் எடுக்க முடியும். அதை சர்வதேச அளவுல கொண்டுபோய் பரிசுகள் வாங்கி, போட்ட பணத்தை எடுக்க முடியும். இந்த கணக்குகளோடதான் இறங்கணும். ஒரு படத்தை எடுத்து முடிக்கிறதோ, இயக்கி திரையில பாக்குறதோ ஒரு தனி மனிதனோட படைப்பாற்றல் மட்டும் கிடையாது. ஒரு குழுவோட ஆற்றல்.

ஒரு இயக்குநருக்கு பல துறைகள்ல ஆளுமை இருக்கணும். ஒரு இயக்குநர் தலைவனா இருக்கவேண்டிய அவசியம் இருக்கு. ஏன்னா, அவருக்குக் கீழ ஒரு நூத்துக் கணக்கான பேர் வேலை பார்க்கப் போறாங்க. இயக்குநருக்கு எக்னாமிக்ஸ் தெரிஞ்சிருக்கணும். ஒரு கால அளவுக்குள்ள வேலை செய்யத் தெரிஞ்சிருக்கணும். எல்லாரோடயும் பேலன்ஸ்டா, ஒத்துப் போறவரா இருக்கணும். எந்த விஷயமா இருந்தாலும், சரியான விகிதத்துல காம்ப்ரமைஸ் பண்றவரா இருக்கணும். ஒரு நடிகரோட, ஒரு நடிகையோட, ஒரு தயாரிப்பாளரோட சரியான உறவு வச்சுக்கத் தெரியணும். ஒரு இடத்துல அதட்டி வேலை வாங்கணும். ஒரு இடத்துல அன்பா வேலை வாங்கணும். ஒரு இடத்துல கெஞ்சி வேலை வாங்கணும். இப்பிடி பல இடங்கள்ல, பல விதங்கள்ல படத்துக்கான தேவைகளைக் கொஞ்சம்கொஞ்சமா சேத்துக்கறதுக்கான பலம் டைரக்டருக்கு இருக்கணும். அதுக்கு உதவி இயக்குநரா இருக்குற காலமும், பயிற்சியும், அனுபவமும் ரொம்ப உதவியா இருக்கும்.

ஒரே ஒரு படத்துல அசிஸ்டெண்டா ஓர்க் பண்ணிட்டு, படம் பண்ணிடலாம்னு வர்றாங்க இல்லையா, அவங்களும் சரி, இயக்குநராகணும்னு நினைக்கிற யாரா இருந்தாலும் சரி. ராத்திரியில, தனியா உக்காந்து, மனசுக்குள்ள ஒரு கேள்வி கேட்டுக்கணும். 'உன்னால படம் எடுத்துர முடியுமா?' அப்போ நமக்குள்ள இருந்து ஒரு பதில் கிடைக்கும். 'கண்டிப்பா முடியும்.' இந்த பதில் வந்துட்டா, அவங்க நிச்சயம் படம் பண்ணிடுவாங்க. 'எடுத்துருவேன்னுதான் நினைக்கிறேன்'ன்னு பதில் வந்துச்சுன்னா, நம்மளால படம் எடுக்க முடியாதுன்னு அர்த்தம். நிறைய பேர் 'எடுத்துருவோம்னு நினைக்கிறேன்'னு பதில் வந்தவுடனேயே படம் எடுத்துதர முடியும்னு நினைச்சிடுறாங்க. நான் பாலுமகேந்திரா சார்கிட்ட 'கதைநேரம்' தொடருக்காக முதல் நாலு நாள் ஷூட்டிங் போனப்போ அப்படித்தான் நினைச்சேன். தர்மன்னு என் ∴பிரெண்ட்கிட்ட சொன்னேன்: 'இன்னும் ஒரு நாலு எபிசோட் ஓர்க் பண்ணினா போதுங்க. நாம அப்பிடியே டைரக்டர் ஆயிடலாம்.' ஒருவருஷம் கழிச்சுத்தான் எனக்குப் புரிஞ்சுது, 'அய்யய்யோ நமக்கு ஒண்ணுமே தெரியலையே!'ன்னு. ஆத்துல இறங்கி, நீச்சல் அடிக்க ஆரம்பிக்கும்போதுதான் அது எவ்வளவு கஷ்டம்னு தெரியும். கரைல நிக்கும்போது அக்கரை பக்கத்துல இருக்கற மாதிரியே தோணும். டக்குன்னு எகிறி குதிச்சு அக்கரைக்குப் போயிட முடியும்னு தோணும். அசிஸ்டெண்ட் டைரக்டரா இருக்கறப்போதான் படம் எடுக்கறது எவ்வளவு கஷ்டம்னு தெரியும். ஏற வேண்டிய கரை, ரொம்ப தூரத்துல இருக்குன்னு புரியும்.

எந்தப் படத்துலயும் உதவி இயக்குநரா வேலை பாக்காதவங்களுக்கு படம் பண்ணனும்னு நினைக்கிறது ரொம்ப ஈஸி. வேலை பாக்கறவங்களுக்குத்தான் அதோட கஷ்டம் தெரியும். பாலுமகேந்திரா, மணிரத்னம், ராம்கோபால் வர்மா இவங்களுக்கெல்லாம் அசிஸ்டெண்ட் டைரக்டரா வேலை பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படலை. ஏன்னா, அவங்க அதுக்கான உழைப்பை போட்டாங்க. பாலுமகேந்திரா சார் ஒளிப்பதிவாளரா இருந்தாரு, அப்போவே ஸ்கிரிப்ட் சைட்ல வேலை பாப்பாரு, இயக்குநர்களோட பேசுவாரு. அடிப்படையிலேயே ஒரு டைரக்டரா ஆகணுங்கற லட்சியத்தோட வந்தவர். ∴பிலிம் இன்ஸ்டிடியூட்ல டைரக்ஷன் படிக்கணும்னு ஆசைப்பட்டவர் அவர். மணிரத்னம் சாரும் சினிமாவை படிச்சிருக்காரு, படங்கள் பார்த்திருக்காரு. அதுக்காகவே நிறைய உழைச்சிருக்கார். நீங்க சினிமாவுல அசிஸ்டெண்ட் டைரக்டரா வேலை பாக்க வேண்டிய அவசியம் கிடையாது. ஆனா, சினிமாவுக்காக மினிமம் அஞ்சுலருந்து எட்டு வருஷ காலமாவது வேலை செஞ்சாத்தான் ஓரளவுக்காவது சுமாரான படங்கள் எடுக்க முடியும். இல்லைன்னா, அடிப்படை தெரியாம, ஏனோ தானோன்னு எடுத்துட்டு, பணம் போட்டவங்களுக்கும் நஷ்டம், மொத்த யூனிட்டுக்கும் வருத்தம். அதோட யூனிட்ல வேலை பார்த்த நிறையபேரோட கேரியரே பாழாகிப் போற வாய்ப்பும் ஏற்பட்டுடும். இது மாதிரியான பிரச்னைகள் ஏற்படுறதுக்கான வாய்ப்புகள் இருக்கு."

எதிர்கால தமிழ் சினிமா எப்படி இருக்கும்னு உங்களுக்குத் தோணுது?

"2007-லருந்து யதார்த்த சினிமாதான் நல்லா போயிருக்கு. 2007-லருந்து 2010 வரைக்கும் நல்லா ஓடின ரியலிஸ்டிக்கா இல்லாத படங்களை விரல்விட்டு எண்ணிடலாம். 'தசாவதாரம்', 'பில்லா' இந்த மாதிரி. ஆனா, யதார்த்தத்தை நெருங்கிவரக்கூடிய படங்கள் எல்லாமே நல்லா ஓடிருக்கு. 'பருத்திவீரன்', 'சென்னை 28', 'பொல்லாதவன்', 'அஞ்சாதே', 'சுப்ரமணியபுரம்'... இப்பிடி. யதார்த்தம், எப்பவுமே எவர்கிரீனா இருந்த ஒரு ∴பேக்டர்தான். 'அவங்க வாழ்க்கை நடந்துக்கிட்டே இருக்கு. அதை நாம ரகசியமா படம் பிடிச்சுட்டு வந்துட்டோம்' அப்பிடின்னு சொல்ற ஒரு தன்மை இருக்கு இல்லியா? இது ஒரு எவர்கிரீன் டிரெண்டா எனக்குப் படுது. அடுத்த அஞ்சு, ஆறு வருஷங்களுக்கு அதுதான் மிகப்பெரிய ∴போர்ஸா இருக்கும்."

'ஆடுகளம்' படத்துக்கு அப்புறம் இயக்கப்போற புதுப்படம் என்னன்னு முடிவு பண்ணிட்டீங்களா?

"முடிவு பண்ணியாச்சு. வடசென்னைல இருக்குற மா∴பியா நெட்வொர்க்கைப் பத்தி ஒரு படம் பண்ணப் போறோம். அதற்கு தயாரிப்பாளர், துரை தயாநிதி. வடசென்னையோட இருபத்தைஞ்சு வருஷ கால வரலாற்றை விவாதிக்கறதா இந்தப் படம் இருக்கும்."

படத்துக்கு கதாநாயகன் யாரு?

"இன்னும் முடிவு செய்யவில்லை. ரெண்டுபேர்கிட்ட பேசிக்கிட்டு இருக்கோம். முடிவு செஞ்சதுக்கப்புறம் சொன்னா நல்லா இருக்கும்."

கார்த்தி, இல்லன்னா சூர்யான்னு பத்திரிகைகள்ல பேச்சு அடிபடுதே?

"ஆமா. இவங்க ரெண்டு பேர்ல யாராவது ஒருத்தர்தான் பண்ணுவாங்க. அப்பிடித்தான் இருக்கும்."

# HomeLife GTA Realty Inc., Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

# Downtown Condo. for sale



- Next to CN Tower, Rogers Centre and proposed Aquarium
- Special price for HomeLife GTA Realty Brokerage clients
- Only a few special units available
- For more info. Raja Mahendran, Broker

**Pl. Call @ 416.321.6969 / 905.712.2666**

**1711 McCowan Rd. #206, Toronto / 145 Traders Blvd # 29, Mississauga**

# எனது துன்பத்தை மறப்பது கஷ்டம்

மகிழ்ச்சி தராத சமாச்சாரங்கள் ஏற்படுத்தும் துயரத்தை என்னால் இலகுவில் மறக்க முடியாது என்பது எனக்குக் கூடிய புரிந்துணர்வைத் தரும்.

வாழ்வில் எமக்குப் பிடிக்காத சில விடயங்களை நாம் மறந்து விட்டோம் என நம்புகிறோம். சில சம்பவங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஞாபகத்திலிருந்து அகற்றி விடுகிறோம். உண்மையில் இந்த இரண்டும் ஒரே விடயம் தான். ஏதாவதொரு விடயத்தை நாம் நேரில் எதிர்கொள்ள விரும்பாத போது அல்லது அது முக்கியமானதல்ல என நம்பும் போது, அதை எம் மனதிலிருந்து அகற்றி விடுகிறோம். அதை மறந்து விட்டோம் எனச் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் உண்மையைச் சொல்லப்போனால் அதை நினைவில் வைத்திருக்க நாம் விரும்பவில்லை என்பதுதான் சரி. எமது விழிப்புணர்வுடனோ அல்லது சுயநினைவற்ற நிலையிலோ நாம் இவ்வாறு தேர்ந்தெடுத்தாலும் அது என்னவோ எமது சொந்தத் தேர்வுதான்.

எமது மனவேதனையையும் துன்பத்தையும் தவிர்த்து நீக்கிட நாம் உபயோகிக்கும் தற்காப்புக் கவசம் தான் இந்த மறதி. எமது பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றாத போது அக்குற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்ள நாம் உபயோகிக்கும் உபாயம் தான் இந்த மறதி. எமது சக்தியை உறிஞ்சிச் சீர்குலைக்கும் சமாச்சாரங்கள் மனிதர்களிடமிருந்து எம்மைப் பாதுகாத்திடவே இந்த மறதியைத் தேர்ந்தெடுத்து உபயோகிக்கின்றோம். சில சமயங்களில் வேறொருவரைப் பாதுகாப்பதற்காகவும் இந்த மறதியை நாம் தேர்ந்தெடுக்கிறோம். எது என்னவென்றாலும் நாம் மறக்கத் தேர்ந்தெடுப்பவை, நாம் தவிர்த்து விலக்கிட விரும்புபவையாகத்தான் இருக்கும். நீ பொறுப்பேற்றதற்கு எதிர்மாறாகச் செயல்பட்டு அகப்பட்டுக் கொள்ளும் போது மறதியைக் கையாள்வது சாதாரணமாக



நடப்பது தான். ஆனால் உனக்கு முக்கியமானவற்றை நீ இலகுவில் மறக்கமாட்டாய். நெருக்கடியான பிரச்சனை வரும்போது உனக்கு மறதி வரக்கூடும். இப்போ கேள்வி என்னவென்றால் இவ்வாறு உன்னை ஆட்டிப் படைக்கும் இந்த மறதியை நீ இவ்வளவு அழுத்தத்துடன் செயல்பட ஏன் தூண்டுகிறாய்? உண்மையாகவே நீ நினைவில் வைக்க விரும்பாத விடயங்களை மறப்பதற்குத் தானா அத்தனை சுறுசுறுப்புடன் சுழன்றடிக்கிறாய்? ஆமாம்? மறப்பது மனிதத்தன்மையானது. அது தெய்வீகமானதல்ல. தெய்வீகமான நீ உண்மையில் வேண்டுமென மறக்கக் கூடாது. ஞாபகத்தில் வைத்துக்கொள்ள நீ விரும்பாத சகல விடயங்களையும் பற்றி நினைவுகூர்ந்து சகலதையும் சரிவரச் சமாளிக்கக்கூடிய தெய்வீக சக்தி உனக்குள் நிறைந்திருக்கிறது. உன் வாழ்வுச் சூழலில் நடந்த சகல சம்பவங்களையும் ஞாபகத்தில் வைத்து அவற்றைச் சரிவரச் சமாளித்திடும் திறமை உனக்குள் இருக்கின்றது என்ற உண்மையை இன்றுவரை நீ உணராது இருந்திருக்கலாம். உன்னைப் பற்றிய சகல சமாச்சாரங்களையும் உன் ஞாபகத்திற்குள் இன்று கொண்டு வா. உன்னைப் பற்றி சகலவற்றையும் ஞாபகப்படுத்திக் கொள்ளும்போது என் வாழ்வில் நடந்த யாவற்றிற்கும் முழுப்பொறுப்பும் நான்தான் என்று பொறுப்பேற்றுக்கொள்.


அன்பானவரே! உனது வாழ்வின் தோல்விகள், துன்பங்கள் யாவற்றிற்கும் காரணம் மற்றவர்கள் தான் என இதுவரை பிறரைக் குற்றம் சாட்டியது போதும். உனது வாழ்வின் தற்போதைய நிலைமைக்குக் காரணம் முற்றுமுழுதாக நீதான். உன்னை திருத்திட உன்னால் மட்டுமே முடியும். நீ திருந்தினால் உன் வாழ்வும் திருந்தும்.

**இப்போ எனது ஞாபகசக்தி வங்கியை நன்கு பரிசீலித்து என்னை சிறப்பாக்கும் இருப்புக்களையும் எடுப்புகளையும் சரிபார்த்து நடைமுறைப்படுத்துவதற்கு இன்றுமுதல் நேரம் செலவழிக்கப் போகின்றேன்.**

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

164

*மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214*



**லலிதா புரூடி**

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES



வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva
Real Estate / Principal Mortgage Broker
RE/MAX

FOR SALE $419,900
• Portunion / 401
• 3+1 bedroom
• 4 washrooms
• Detached house 2-Storey
• Stove ,Fridge ,Washer ,Dryer ,Dishwasher ,All Elf ,All Window Coverings.

For Sale $339,990
• Markham & Eglinton
• 3-Storey • 3+1 bedrooms
• 3 washrooms • Stove , Fridge ,Washer , Dryer , Dishwasher , Cac , All Elf , All Window Coverings.

FOR SALE $352,900
• Midland/Lawrence
• 3-Storey
• 2 + 2 Bedrooms
• 2 Washrooms
• Allelf ,Stove, Fridge , Washer, Dryer , All Window Coverings

For Sale $409,900
•Yorkmills/Dvp
• 63 Fortrose Cres
• Bedroom : 3+2
• Washroom : 2
• Bungalow house
• 2 Stoves , 2Fridges , Washer , Dryer , All Window Coverings , All Elf

FOR SALE $139,900
• Woodbine/Hwy 7
•Restaurant Business for sale • Prime Location • Low Rent • All The Chattels Including All Granite Tables ,Equipments And Signage And More.
• Motivated Vendor

For Sale $975,000
• Warden/Lawrence
• Commercial Condo Factory/ Manufacturing
• All Existing Light Fixtures, Some Chattels Included.

NEW TORONTO ICE CONDO. PHASE II
VIP access before Public

For Sale $327,500
• Markham/Eglinton
• 3-Storey
• Att/ Row/ Twnhouse
• Bedroom : 3
• Washroom :3
• Finished Walk-Out Basment With Full Fenced Backyard.Fridge & Stove, Dishwasher, Washer/Dryer

Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes

AVM MAX 2000
Bus & Tour Company
5215 Finch Ave. E #250
(GTA Square Mall)
Scarborough, ON M1S 0C2
For More Information
Please Contact Paddy at:
(416) 609-2542
paddy-avmmax2000@hotmail.com
Florida Tour
March Break (12th-21st)
9 Days Trip Starting From: $550.00/Person
• Virginia (Luray Caverns - Largest in the East)
• Georgia (Georgia Aquarium - World's Largest)
• Florida (Disney World, Universal Studios, Kennedy Space Center, Sea World, etc.)
Orlando Premium Outlets - Shopping
Kennedy Space Center
GEORGIA AQUARIUM
UNIVERSAL Orlando
Disney
⇒ These prices include bus fair, 8 nights hotel accommodations, and continental breakfast for 8 days
⇒ Individuals are responsible for entrance fees for all attractions, all lunches, dinners, gratuity, and any other expenses